
www.padippakam.com


புதிர்மொழியில் சுழலும் புதுவகை எழுத்து



# உன்னதம்

படிப்பகம்

www.padippakam.com



உன்னதம் –5 ஜனவரி 1996 ரூ. 30.00

தனிச்சுற்றுக்கு மட்டும்

புதுவகை எழுத்தில் கவனம் கொண்டுள்ள இலக்கியப் பிரக்ஞையாளர்களின் கூட்டு விவாதத்தின் மூலம் தமிழ் மொழியை முற்றிலும் புதிய பரிமாணத்திற்கு ஆட்படுத்த விழைகிறது உன்னதம். இது குறித்த கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழின் நவீன இலக்கியத்தை வெகுஜனதளத்திற்கு நகர்த்தியதில் ஆர்வம் காட்டிய கோமலின் மரணம் தமிழுக்கு மற்றுமொரு இழப்பு.

'கதா' நிறுவனத்தின் 94 'ஆம் வருடத்திற்கான சிறந்த சிறுகதை விருது அம்பை - காட்டில் ஒருமான் கதைக்கும் சிறந்த பத்திரிகை விருது உன்னதம் இதழுக்கும் கிடைத்துள்ளது. டெல்லியிலிருந்து கொண்டு பல்வேறு மொழிகளில் கவனம் செலுத்தி இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தொண்டாற்றிக் கொண்டுள்ள 'கதா' அமைப்பிற்கு மனமார்ந்த பாராட்டுதல்கள்.

உன்னதம் (காலாண்டிதழ்)
ஆசிரியர் வெளியிடுபவர்:
கௌதம சித்தார்த்தன்
ஆலத்தூர் அஞ்சல்
கவுந்தப்பாடி - 638 455.
பெரியார் மாவட்டம்
அச்சு : சகுரா கம்ப்யூட்டர்ஸ்
ஈரோடு -1.

படிப்பகம்

www.padippakam.com



# புதுவகை எழுத்தின் உரையாடல்

கௌதம சித்தார்த்தன்

சித்தார்த்தன்: கௌதம சித்தார்த்தன் என்றழைக்கப்படுகிற மற்றவனின் கையெழுத்தில் சுழலும் புதிரிலிருந்து புதுவகை எழுத்து (New writing) பற்றிய பிரக்ஞையுடன் விவாதத்தின் முடிச்சு இறுகுகிறது. அதன் ஒரு குறுக்கு வெட்டுத் தோற்றம் இது. சுழலும் பல்வேறு தோற்றப் பாதைகளின் இணைவு முழுமையை நோக்கி அழைத்துப் போகக் கூடும் புது வகை எழுத்தில்.

கேள்வி: புதுவகை எழுத்து என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

பதில்: வாழ்க்கைக்கும் கலைக்கும் இடையே உள்ள இடைவெளியை புதிர் வெளியாக்குவது தான் புதுவகை எழுத்தின் சவால். மொழியின் சவால்களை எதிர்கொள்ளும் எழுத்தின் தீராத பக்கங்களில் திறந்து கொள்ளும் புதை குழிகள் வாசகனின் கண்களில் கட்டை விரலுயர்த்தும் போது சேற்றின் சுழற்சியில் சிருஷ்டியின் தரிசனம் விரிகிறது அற்புதமாய்.

கதைக்குள் கதைக்குள் கதையாய் ஆயிரத்தொரு இரவுகளில் மாயக் கம்பளத்தில் விரியும் ஜால எதார்த்தம், வார்த்தைக்குள் வார்த்தைக்குள் வார்த்தையாய் சுழலும் புது வகை எழுத்தில் வினோத வடிவம் கொள்கிறது. பிரதியில் இடறிவிழுபவனை பிரதிக்கு அப்பாலும் சுழட்டி வீசியெறிவதுதான் புதுவகை எழுத்து.

'தென்னங்கீற்றுகளில் மின்னுகிற நிலா வெளிச்சம் 30 வெள்ளிக் காசுகளைப் போல மின்னியது' என்கிற மாய கோவ்ஸ்கியின் வார்த்தைகளில் வெட்டப்பட்டிருக்கிறது ஒரு பெரிய புதைகுழி. துரோகம், பேராசை, பின் அழிவு, 30 வெள்ளிக் காசுகளைப் பெற்றுக் கொண்டு ஏசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் என்னும் தொன்மம் என்று வார்த்தைக்குள் வார்த்தைக்குள் வார்த்தையாய் பயணம் போக வேண்டும். மார்க்வெஸ், "அன்றைக்கு 13ந் தேதி" என்றால் 13 என்ற எண்ணின் நியூமராலஜியிலிருந்து டேரட்கார்டு வரை போக வேண்டுமென்கிறான்.

இடையில் ஒரு குறுக்கு வெட்டு: வார்த்தைக்குள் வார்த்தைக்குள் லேபிரிந்த் வலிந்து திணிக்கும் போது கதை முழுக்க புதைகுழிகள் கபந்த வாயாய் திறவுபட்டு கடைசியில் புதை சேறு தான் மிஞ்சக் கூடும். கதையுடனான ஒட்டத்தில் வார்த்தைகள் குறிப்பிட்ட விசைகளில் பட்டுத் தெறிக்கும் போது புதிர்க்கதவின் மொழி விலகி பிலத்துவாரத்துக்குள் விழ வேண்டும்.

கேள்வி: இது போன்ற புதிர் மொழி கவிதைக்குச் சரி; கதையில் உபயோகிக்கப்படும் போது கதைத் தன்மை மறைந்து போகுமே...

பதில்: கதைக்கு சம்பந்தமில்லாத புதிர் முடிச்சை இறுக்கும் போதும், வெட்டப்படும் புதை குழிகளின் சுழல்கை அதீதப்படும் போதும் நிகழலாம். சொல்லப்படும் கதைமையின் பரிமாணங்களுக்கேற்ற புதிர் மொழியமைவு நிகழ்த்தப்படும் போது கதைக்குள் பல தளங்கள் நகர்த்தப்படுகின்றன.

"கார்டெனியாப் பூக்களின் வாசனை ஒரு பெரிய வெள்ளமாக மாறி அவனை அடித்துச் சுழற்றுகையில் வெகு ஆழத்தில் புதைந்திருந்த வெட்டுப்பட்ட குதிரைக் காதுகளில் பளீரிட்டது இளஞ்சிவப்பு நகப்பிறை"

என்கிற புதிர் வாக்கியத்தில் கார் டெனியாப் பூக்களின் வாசனை (அன்னிய மொழி சார்ந்ததாயிருப்பதால் அதன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை) என்றால் என்ன, அது எதற்காக என்று தெரியாததால் அந்த இடத்திலேயே செத்து விழுகிறது



படிப்பகம்

www.padippakam.com

வாக்கியம். அதை சற்றே மாற்றி "ஆவரம் பூ வாசனை" எனும் போது எளிதில் நுழைய முடியும். (ஆவரம்பூ, ஆண் பெண் பரஸ்பரம் தங்கள் அன்பைத் தெரிவிக்க வீசும் ஒரு பூ) அந்த வாசனை அவனுக்குள் சுழலும் போது அவனது பால்ய பருவத்து அற்புதம், அய்யனார் கோவில் குதிரைச் சிலைகளில் ஆரோகணித்த வினோதப் பயணம், என்று துருவேறிய சூரியனின் நிழல் அசையும். இளஞ்சிவப்பு நகப்பிறை என்றதும் நகப்பிறையை வைத்து சிற்பம் செதுக்கும் சிற்ப சாஸ்திரம் விரிபட அவனது இளம்பிராயத்துத் தோழியின் உடல்மொழியும் காலத்தின் லாவண்யமும் சுழன்றோடும்.

*கேள்வி: தொன்மங்களின் புதிர் மொழியே புதுவகை எழுத்தை நிர்மாணிக்கிறதா?*

பதில்: உடனடியாக ஆம் என்று சொல்வதற்கில்லை. தொன்மங்களின் புதிர் முடிச்சில் புதுவகை எழுத்து இறுகித் தெறிக்கிறது. கதைக்கும் தொன்மங்களுக்குமான இணைவு - கதை வரிகளினூடே தொன்மங்களின் படிமம் வரும் போதும், தொன்மத்தின் ஒரு பகுதி கதையாக மாறும் போதும் நிகழும் ஜாலத்தன்மையில் புதுவகை எழுத்தின் எல்லைகள் விரிகின்றன. எழுத்தில் அனுமானிக்க முடியாத சாத்தியங்களை நிரப்பும் மார்க்வெஸுக்குள் மூதாதைகளின் தொன்மங்கள் சுழல்கின்றன. மேற்கில் உள்ள ஜால எதார்த்தத்தைப் பார்த்து நொட்டைவிட்டுக் கொண்டிருக்கிற நாம் நம்முடைய புராணிக தொன்மங்களைப் பார்க்கத் தவறுகிறோமா? புதுமைப்பித்தனின் ஜால எதார்த்தத்தில் விரியும் தொன்மம் நம் செழுமையான மரபில் காலூன்றி எழுவதைக் கவனிக்கலாம். இந்த மண்ணின் ரத்தமும் சதையுமான ஜால எதார்த்தத்தின் எல்லைகளற்ற தன்மையை நம் கையெழுத்தாக மாற்றும் போது உலகின் கவனிப்பு மிகுந்த கதை சொல்லிகளாக மாறுவோம்.

சூரபத்மன் தனது நூற்றியொரு சிரங்களையும் ஒவ்வொன்றாக வெட்டி, எரியும் யாக குண்டத்தில் ஆஹூதியாக்கினான் என்கிற தொன்மம், நெறி தவறிய பெண்கள் அந்தக் கிணற்றில் நீர் மொள்ள குடத்தைக் கீழே இறக்க இறக்க, நீர் கீழே கீழே போய்க் கொண்டேயிருக்கும் என்கிற ஜால எதார்த்தம் என்று நமது வேர்களில் கிளைத்தெழும் அற்புத சிருஷ்டிகளை மறந்து, அந்நியமான, படிமத்தன்மை தெரியாத, விஷயங்களை வினோதப் படுத்தும் போது புதிர்மொழியின் வீரியமிழந்து போகிறது.

அதே சமயம் உலகம் முழுவதும் (முழுப்பரிமாணமும் புரிந்த) தெரிந்த ஒரு படிமத்தை உபயோகிப்பதில் தவறில்லை. உபயோகிக்கும் விதத்தில் தவறில்லாமல் இருக்க வேண்டும். "தோல்விக்கு அப்பாற்பட்டவன் நீ , அக்கிலஸின் குதிகால் உனக்கில்லை" என்று டி.எஸ். எலியட் சொல்லும் போது அவனுடைய மண்ணின் வெதுவெதுப்பு அது. யாராலும் தோற்கடிக்கப்பட முடியாதவனாய் இருக்கும் பொருட்டு ஸ்டைக்ஸ் நதியில் அக்கிலஸை அவனது அம்மா முக்கி எடுக்கிறாள். ஆனால் அவள் பற்றியிருந்த குதிகாலில் நீர் படாததால் அது பலவீனமடைகிறது. பின்னாளில் குதிகாலில் அம்பு பாய்ந்து செத்துப் போகிறான். இந்த முழு வரலாறும் தெரியாத நாம் அக்கிலஸின் குதிகால் என்ற படிமத்தை எதிர் கொள்ளாமல் தாண்டிப் போகும் போது வாக்கியம் இறந்து போய் விடுகிறது. கூடவே வார்த்தையும்; வார்த்தைகளின் கூட்டமான கதையும். நம்முடைய தொன்மத்தின் வேர்கள் அக்கிலஸின் குதிகாலில் இல்லை; துரியோதனின் தொடையில் இருக்கிறது.

*கேள்வி: சொற்கள் சிதைகின்றன, மொழி சிதைகிறது, தூக்கணாங் குருவிகள் சொற்களைத் தூக்கிக் கொண்டு பனைமர வரிசைகளுக்குச் செல்லுகின்றன; கதையின் உருவம் உள்ளடக்கம் சிதைகிறது. கதையின் வடிவமும் (Narration) சிதைய வேண்டியதன் அவசியம் என்ன?*




படிப்பகம்

www.padippakam.com

பதில் : கதையின் கோடுகளும் வண்ணங்களும் சிதைந்து எழுத்தின் வாக்கியங்களில் இணையும் போது கோடுகள் மற்றும் வண்ணங்களாலான மொழி விரிகிறது. கதையின் பத்திகளைக் கலைத்துப் போடுவதும் நேர்கோட்டினை இல்லாமலாக்குவதும் புதுவகை எழுத்தின் ஒற்றைப் பரிமாணமே. கதைக்கேற்ற வடிவங்களைக் கட்டமைக்கலாம், ஆனால் எல்லாக் கதைகளுக்குமே வடிவ மாறுதல்களில் ஈடுபடும் போது இனம் புரியாத இழப்பு கதைகளைக் கவ்வும். சயன்ஸ் ஃபிக்ஸன் எழுத்தாளர் பல்லார்ட் (BALLARD) கதைப் பத்திகளைக் கலைத்துப் போடுவது சீட்டு ஆட்டம் பற்றிய கதையில் தான். கதையின் உலகமே கதையின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது.

என்னுடைய 'பலிபீடம்' கதையை முதலில் முற்றுப்புள்ளி இடாமல், பத்தி பிரிக்காமல் தான் எழுதினேன். காரணம், ஒரு கல்லில் சிற்பம் வடிக்கின்ற கலையின் வடிவம் கதையின் வடிவமாக மாற வேண்டுமென நினைத்தேன்: கல் 

கல்லுக்குள் ஒளிந்திருக்கும் சிற்பம்  சதுரமாக நீளும் வார்த்தை வரிகள் 

அதற்குள் ஒளிந்திருக்கும் கதை 

கல்லுக்குள் ஒளிந்திருக்கும் சிற்பத்தை சிற்பி செதுக்கியெடுப்பது போல், வார்த்தைக்குள் ஒளிந்திருக்கும் கதையை வாசகர் பகுத்துணர வேண்டும் என்கிற ரீதியில் -அபத்தமாக-யோசித்துக் கிடந்த போது திரைப்படத்தின் Dissolve உத்தி (ஒன்று மறைந்து மற்றொன்று தோன்றுவது) இதற்குப் பொருந்தி வருமெனத் தோன்றியதும் பரபரப்புடன் மாற்றியெழுத ஆரம்பித்தேன். முற்றிலும் சுயமான புதுவகை உத்தியாக புதுவகை எழுத்தின் மற்றொரு பரிமாணமாக சுழன்றது பிரதி.

சுழற்சியாலான முளைக்காம்பினை உறிஞ்சிக் கொண்டிருக்கும் செக்கு மாட்டு எழுத்துக்களின் பல்வேறு பரிமாணங்களில் முற்றுப் புள்ளியை நோக்கி நீளும் தூரதூரமான வாக்கியங்களில் புதிர்வகை எழுத்தின் குரல்வளை நெரிபடுகின்ற அவலம் தற்போது. இடைவெட்டாய் செகாவ்: 'கதையில் ஒரு வார்த்தையைச் சேர்ப்பதாலும், எடுப்பதாலும் கதையின் போக்கே அடியோடு உருக்குலைய வேண்டும்'

ஒரு நீளமான வாக்கியத்தை எழுதுவது புது வகை பாணி என்று தப்பர்த்தம் எடுத்துக் கொண்ட தமிழ்ப் படைப்பாளிகளின் அவலம். வார்த்தைகளைத் தேற வேண்டும். சீவிச்சீவிச் செய்யும் வார்த்தையணு வெடிக்கும் போது உருவாகும் பிரளயத்தில் புதுவகை நெடியின் அற்புதம் சமையும். லத்தீன் அமெரிக்கப் படைப்பாளிகள் நீளமான வாக்கியங்களைத் திட்டமிட்டு உருவாக்குவதில்லை - அல்லது உருவாக்குகிறார்கள். நீண்டு செல்லும் அதில் ஒரு பெரும் புதிரோ அல்லது ஜாலத் தன்மையின் துணுக்கோ ஒட்டிக் கொண்டிருக்கிறது.

"எனவே நான் தோட்டத்தைக் கடக்க வேண்டும், மரங்களைப் பின் விட்டு, மூன்று மூன்று படிகளாகத்தாண்டி மலையை விட்டு இறங்கி குறுகிய செஸ்ட்நட் மரத் தோப்பு வழியே சென்று - இங்கே தான், நிச்சயமாக, அந்தக் குழந்தை வெள்ளை நிற இதழ்களைச் சேகரித்து கிறீச்சிடும் பூங்காக் கதவைத் திறந்து, திடீரென நினைவு கூர்ந்து,தெரியும் தன்னைத் தெருவில் கண்டு, ஒருவனுடைய இளம் பருவத்தின் எல்லா மத்தியானங்களையும் உணர்ந்து, ஒரு மாய மந்திரம் போல, வெள்ளப் பெருக்கான விசில்கள், மணிகள், குரல்கள், விசும்பல்கள், என்ஜின்கள், ரேடியோக்கள், சாபங்கள் ஆகியவற்றை இல்லாமல் ஆக்கி, சூழ்ந்துள்ள நகரத்தின் துடிப்பை அறுப்பதில் அவன் வெற்றி கண்டான்." இது புயண்டஸின் MAGIC LINE.




படிப்பகம்

www.padippakam.com

"அவன் மண்டையெங்கும் வண்டுகளின் ரீங்காரத்தில் ஊழி பல தோய்ந்த புழுதி தேகமாத்யந்தமும் சுழட்டியடிக்க, உளியின் பிலத்துவாரம் பெரிதாகிக் சுசிரம் ஒளியில் காலடி எட்டிப் போடும் மிதப்புகளில், இருட்பந்தாய் அசையும் நிழல்வெளி நீட்டநீட்ட நெளிநெளியாய்ச் சுருண்டு குடைந்து நீளும் கற்பாதையின் சுழற்சி தலையைக் கால்களாகவும், கால்களைத் தலைகளாகவும் மாற்றிப்போடும் பாசம் படிந்த தொல்சுவர் விரிப்பில் மோதிச் சிதைந்து பூஞ்சனம் பூத்த அவன் கால்களில் நுரை சுழித்தோடும் நதிக்கரையின் நாணற் புதர்களில் மண்டியிருந்த இருள் மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது." இது என்னுடைய Dissolve Line.

கதையின் ஓட்டத்திரூடான இணைவிலேயே வாக்கியங்களின் நீளும் நெளிச்சல் முழுமை பெறுகிறது.



கேள்வி: பத்திகளைக் கலைத்துப் போடுவது போல வாக்கியங்களைக்கலைத்துப் போடும் போது எழுவாய் பயனிலை செயப்படு பொருள் போன்ற இலக்கண விதிகளின் நிலை என்ன?

பதில்: வாக்கியத்திரூடே இயங்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை மாற்றிப் போடும் போது மொழியின் தன்மை சிதையாமல் முன்னிலும் ஆழ்ந்த வீச்சுடன் காட்சியளிப்பது தமிழ்மொழியின் முக்கிய அம்சம். எழுத்தின்தீவிரம் - நேர் மற்றும் வளைகோட்டுத்தன்மை கொண்ட - மொழியியல் சிக்கல்களை கபளீகரம் செய்யும் புது மலர்ச்சியான மொழி தமிழ். எழுவாய், பயனிலை, செயப்படு பொருளை தார்மிகத் தன்மையுடன் மாற்றிப் போடப் போட பல்வேறு பரிமாணங்களில் மிளிர்கின்றன வாக்கியத்தின் கண்ணிகள்.



படிப்பகம்

www.padippakam.com

காலில் அடிபட்ட ஒருவன் நடந்து வந்து கொண்டிருப்பதை “அவன் நடந்து வந்து கொண்டிருந்தான்” என்னும் வாக்கியத்தில் சாதாரணமாக தொனிக்கும் செயல்பாடு “அவன் வந்து கொண்டிருந்தான் நடந்து” என்கிற கலைந்த பிரயோகத்தில் செயல்பாட்டின் தன்மை முக்கியத்துவம் அடைவதை உணரலாம். “கண்டேன் சீதையை” என்னும் பிரயோகத்தின் நித்யத்துவம் கவனிக்கத் தக்கது. மோஸ்தருக்காக கலைப்பதை விட்டு, உடைபடுவதற்கான வாக்கியங்களை மட்டுமே கலைக்கும் போது ஆழ்ந்த தீவிரமும் புதிர்த்தன்மையும் இணைந்து புதுவகை எழுத்தின் தளத்தை நகர்த்துகின்றன மேலும். இது குறித்த நாகார்ஜுனனின் இயங்குதளம் முதன்மையானது.

அதேபோல, பழசாகி நைந்து போன (cliche) 2000 வருட வார்த்தைகளுக்கான படிமத்தை, வார்த்தைகளைப் பிரயோகிப் பதற்கான தொனியை உடைத்தெரிய நேரிடும்போது, செத்துப் போன படிமத்தின் புதிய பிறப்பு ஆரம்பமாகிறது. “ரோஜாக்கனியின் வெடிக்கும் விதைகளைப் போன்ற சிகப்பு” என்று ஜேனட் விண்டர்ஸன் சொல்லும் போது நம் படிமக்கிடங்கில் அழுகிக் கிடந்த ரோஜா சரேலென வினோதமாய் மலர்கிறது. விந்தையான வாசனை குமிழியிடுகிறது நாசியில். சட்டென மனதில் தோன்றும் பிரமிப்பில் புதிய அடுக்குகள். ஆனால்,பொருந்துகின்ற இடங்களில் மட்டுமே (இது மிக முக்கியம்) படிமப் பிரயோகம் திறம் பிரியும்போது வாசகனின் நினைவிலிமனம் சுழன்று தாவுகிறது சுழன்று முற்றிலும் புதிய தளத்திற்கு.

கேள்வி: புதுவகை எழுத்து V/S வாசகன்?

பதில்: இருவேறு விதமான வாசக மனங்களால் கட்டப்படுவது இந்தப் புதிர் மொழி. வாசகன் ஒரு படைப்பை எதிர் கொள்ளும் போது எழுத்தாளன் செத்துப் போகிற நிகழ்வினூடே சுழலும் எழுத்தோட்டம், எதிர்கொள்பவனின் நுண்ணுணர்வுப் பொறியைத் தட்டி விடுகிறது. சாதாரண - தட்டையான - வாசகன் அவனது நினைவிலி மனத்தில் அடைபட்டுக் கிடக்கும் அற்புதத்தில் சுழலும் போது, சீரியஸ் - நுண்ணுணர்வுள்ள - வாசகனோ முற்றிலும் வேறு விதமான தரிசனத்துடன் நினைவு மனத்துக்கும் நினைவிலி மனத்துக்குமிடையே ஊடகமாய் கிளைவெட்டிப் பிரிந்து பயணம் போவான். வாசகமனத்திலுள்ள ஜால வினோதங்களை, அதி தீவிர ஆற்றல்களை குறிப்புணர்த்துவது; அற்புத அனுபவமாக மாற்றவல்லது. இரு வேறு தளங்களையும் ஒரே பாய்ச்சலாகத் தாண்டிச் செல்லும் பிரம்மாண்டம் அது.

தஹிப்பு மனோ நிலை கொண்ட கலைஞனே புதுவகை எழுத்தைத் தோற்றுவிக்கிறான் என்கிற வாக்கியத்தின் முனையில் இந்த உரையாடலை நிறுத்திக் கொள்வோம் இப்போதைக்கு. பூர்வ பீடிகைகளின்றி ஒரு கணத்தில் நடந்தேறிய இந்த உரையாடல் புதிர் எழுத்தின் மையத்தை நெருங்கும் ஒரு பரிமாணம் மட்டுமே. இந்த எழுத்தில் கவனம் கொள்பவர்களின் தொடர்ந்த விவாதம் புதிர்ச் சுழலைக் கடைந்து செல்ல இயலும்.


படிப்பகம்

www.padippakam.com



# பலிபீடம்

கௌதம சித்தார்த்தன்

அந்தக் கல்லிலிருந்து அவள் எழுந்து வருவாள் என்று அவன் சற்றும் நினைத்தானில்லை. கல்துகள்கள் உதிர உதிர கறுத்த கல்லைப் பிளந்து கொண்டு வெளியே வந்தாள் ரேணுகாதேவி. பாறைத்தோலின் தடிப்புகளும் உடலமைப்பின் புடைப்புகளும் ஒன்றிணைந்திருந்த சிடுக்கலை வெகுநுட்பமாக இழைந்தெடுத்தது அவன் கை விசை. உளியின் மொழி வீச்சில் காலத்தின் சில்லுகள் தெறித்து விழுகின்றன. அவன் மண்டையெங்கும் வண்டுகளின் ரீங்காரத்தில் ஊழிபல தோய்ந்த புழுதி தேக மாத்யந்தமும் சுழட்டியடிக்க, உளியின் பிலத்துவாரம் பெரிதாகிக் கசியும் ஒளியில் காலடி எட்டிப் போடும் மிதப்புகளில், இருட்பந்தாய் அசையும் நிழல்வெளி நீட்ட நீட்ட நெளிநெளியாய்ச் சுருண்டு குடைந்து நீளும் கற்பாதையின் சுழற்சி தலையைக் கால்களாகவும் கால்களைத் தலைகளாகவும் மாற்றிப் போடும், பாசம் படிந்த தொல்சுவர் விரிப்பில் மோதிச் சிதைந்து பூஞ்சனம் பூத்த அவன் கால்களில் நுரை சுழித்தோடும் நதிக்கரையின் நாணற்புதர்களில் மண்டியிருந்த இருள் மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. அதிகாலைக் குளிரின் முயங்கலுடன் ஈரமணலில் கால்களை எத்தி நடக்கிறாள் ரேணுகா. முடிந்திருந்த கூந்தல் கற்றைகளை அவிழ்த்து வீசி நடக்கிற காற்று. முகத்தில் ஒருக்களித்து விழுந்த அவை கூட மேலும் அழகுதான். மஞ்சில் விறைத்துக் கிடந்த நதியின் இளம்பல் உளியின் செதுக்கலில் பட்டு நீர் வளையங்கள் சுழல்கின்றன.

சூரிய வளையங்களின் கடைசலில் சிக்கிக் கொண்டவனாய் கற்பாறையினடியில் கிடந்தான் அவன். காலங்களற்று செதுக்கும் கணந்தோறும் உளியின் மொழியமைப்பையும் மீறி நெகிழும் பெண்மையின் பொலிவில், சுடர் விட்டெழும் அற்புதம். நதியின் அலைமேடுகளில் தலைசீவிச் சரிகிற அவளது எழில்ரூபத்தில், ஒரு அகண்டவெளி மற்றும் ஒரு புதிர். யாகசாலைக்கு ஜலம் கொண்டுபோக வரும் கற்புக்கரங்களில் பானையாய்த் திரளக் காத்திருக்கும் ஆற்றங்கரை மண்ணின் பிசுக்குகளில், தானே ஆஹூதியாய் உருகும் திணையை, துளைபடாத நாணல்கள் ஆனந்தப்பையுளாடுகின்றன. ஓங்கிய உளியின் கூச்சம் அவனது இருதயத்தைக் களிமண்ணாய்ப் பிசைந்து, உடலைத் திணித்துச் சுருட்டி, உருண்டையாய்த்திருகி இரண்டு கைகளிலும் கோளமாய் உருட்டிக் கொண்டிருந்தாள். உளியோசையின் எல்லையற்ற வெளியில் சிருஷ்டியின் தரிசனம் விரிகிறது.

நதியின் சில்லிப்பில் ஈரம்பரவி உளியின் நெகிழ்ச்சியில் பாறை இறுகுகிறது. உளியின் கூர்மைக்கும் கற்பாறைக்கும் இடையில் சமையும் கணங்களில் சம்பவிக்கும் புன்னகை மண்டும் வேதனை இரும்பூதெய்தும். புஞ்சையோடியிருந்த அவனது முகவாய்க் கற்றைகளைக் கோதுகிற காற்று வெளியினில் நதியின் நீரோட்டம் கண்களில் நிறையும் நடுக்கமும், அலையடித்து வரும் பிரவாகத்தைக் கலைத்து தண்ணீர் அள்ளும் அவளின் கண்காணாத சுழற்சியும். பசும் பானையின் தெளிந்த படிகத்தில் தனது கேசம்




படிப்பகம்

www.padippakam.com

கலைந்து கிடக்கிறது. உளியின் முனை அவளது நடுவகிடைச் சீவி எடுக்க, குழலின்சுழற்சி சுழன்று சரிந்த போது குடத்தின் ஜலக்கண்ணாடியில் பிம்பம் சட்டெனக் கலைய, ஆண்மையின் மிடுக்கு, அதிரூபலாவண்யம், கார்த்த வீரியார்ச்சுனன். கற்பரப்பு முழுமைக்கும் உஷ்ணத்தின் வலைப்புயல். உளி பாய்ந்து பாய்ந்து முகமெங்கும் அளைந்ததில் தீப்பொறி உராய்ந்து காற்று. மண்குடம் கரைந்து ஓடும் நதியில் நழுவுகிறது.

உளியின் பிரக்ஞை தவறியது. புழுதிச் சுழலில் சிக்கிய அவன் தாடி நீண்டு நீண்டு சிலையைச் சுற்றிய இறுக்கத்தில் நெரிந்து காட்டுகிறது காற்றின் தொடர்ச்சி. அவள் உளியின் மீது உராய்ந்து கொள்வதும், நதியின் அலைக்கரம் காலடி மண்ணைக் கவ்வி இழுக்க கீழே விழுந்து கொண்டேயிருப்பதுமாய், உளியின் வடிவம் வெயில்பட்டு உருகியோடி ஒழுகுகையில் பாறையின் நெகிழ்வு உள்முகம் நோக்கி, மேலும் கீழுமாய் நடக்கிறார் ஜமதக்னி முனிவர். 'உங்களில் யார் அவளைக் கொல்லப் போகிறீர்கள்?' முனிவரின் துருவேறிய கண்களில் நிறங்கள் மாறி மாறிப் பிரிகின்றன. மைந்தர்கள் செய்வதறியாது தலைகவிழ பரசுராமனின் மழு உயருகிறது. 'தந்தையே, நான் அன்னையை வெட்டி வருகிறேன்' சடக்கென நடையை நிறுத்தி ஏறிட்டுத் தனயனைப் பார்க்கிறார் ரிஷி. அவரது எரியோம்பிய கரம்பட்டு சாம்பற்





படிப்பகம்

www.padippakam.com

பூத்த குண்டத்தில் சூன்யம் அசைகிறது.

கல் திடுமென கெட்டி தட்டிக்கொண்டு வருவதை உணர்ந்தது உளியோசை. திரடுகட்டிய இறுக்கம் க்ரீச்சிட்டு உள்ளங்கையின் அழுந்தலில் புடைத்தெழுகையில். லாவகமான இயங்கு விசை மாறி ஊர்த்துவ தாண்டவமாய் கைப்பிடியில் அவிழும் முத்திரை. கோடரி ரேணுகாதேவியின் தலைக்கு மேலாக அசைகிறது. குருதித் துளிகள் தெறித்த நீர்ப்பரப்பு திகைத்து சுளித்து மங்கியது நிறமிழந்து.

உரிக்கப்பட்ட பாறையின் முன்னால் உழன்று கிடந்த அவன் உடம்பெங்கும் அதீத கணங்கள் சூழ்ந்து உளிக்கீற்றில் வெயில் பொசுங்கியது. கல்லின் வாசனை மங்கி கொஞ்சம் கொஞ்சமாய் சிறுத்து உளியின் தனிமையில் கரைந்து சூரியன் பட்டுத் தெறிக்கும் அதன் நடுக்கத்தில் தானும் ஒரு அதிர்வுக் கணமாக உதிர்ந்ததைக் கண்டான். கல்லுக்கப்பால் உயரும் கூந்தல் கற்றைகள் தன் சுழற்சியால் மலர் மொக்கென விரிய, உளியின் இரும்பு இயக்கம் கால்களில் பட்டோடியது. பரசுராமனின் குருதி தோய்ந்த மழுவும், அளகபாரம் கலைந்த ரத்தமும் சதையுமான தலையும். முனிபுங்கவர் திகைக்கிறார். 'கேள் மகனே, உனக்கு என்ன வேண்டும்?' தழுதழுக்கின்றது தந்தையின் குரல். தனயனின் தீர்க்கமான நாசி உயருகிறது, 'அம்மா' ஒரு கணம் விக்கித்த தபஸ்வி கமண்டலத்தை எடுக்கிறார்.

கல்லின் நுட்பங்கள் அறிந்த உளியோட்டம் திகைக்க. கல்லின் போக்கு கைக்குள் அடங்க மறுக்கின்ற விபரீதம் தொடர்ந்தது. அதன் தன்மை நொடிக்கு நொடி மாறி நிற்கும் அமானுஷ்ய கணங்களில் அவனது உள்ளங்கையில் ஊடுருவியிருந்த சிற்பசாஸ்திரம் திகைத்தது. அவன் சிரசுக்குப் பின்னால் சுழன்ற கற்கிடங்கு திகைத்தது. படைப்பின் கலை வன்மை நெக்கிடுகின்ற கற்பிரிகைகள் அவனைச் சுற்றிலும் அசைகின்றன. பாறைத்தோலின் முதல் கீறலில் துடிக்கும் உயிர்த்தாரை, பொங்கிப் பிரவகித்தோடி மெல்ல மெல்ல தனது நுட்பங்களையெல்லாம் திறந்து காட்டி முழு ஜீவனும் அவனது உழு படையில் தொங்கிக் கொண்டிருக்குமே... பூரணவிளைச்சலில் புடம் போட்ட கல்லின் பக்கங்கள் தோறும் காத்துக்கிடக்குமே, வெளிப்படுத்தவல்ல ஒருசிறு இசைவு...

நட்சத்திரங்களற்ற இருள் மெதுவாகப் புரண்டு கொடுக்க, ஒளிபாய்ந்திருந்தது நதிதீரம். ரேணுகா தேவியின் செவ்வரி உறைந்த சிரத்தோடும், நீர் சுமந்த கமண்டலத்தோடும் ஓடிவந்த பரசுராமன் கண்களில் உளியின் திகைப்பு. அதிர்ச்சியின் செங்குத்துப் பாய்ச்சலில் எழுந்து வந்த ஒரு பிரம்மாண்டம் வாழ்வையும் மரணத்தையும் ஒரே பாய்ச்சலாகத் தாண்டுகிறது. மணற்பரப்பின் நீண்ட படுகை, நாணற்புதர்களின் அடர்த்தி, உயரும் சரிவுகள் கண்முன்னால் விரியும் திசைகளெங்கும் அலைந்தோடிய கால்களில் அம்மாவின் உடல் தட்டுப்படவில்லை. காதுகளில் சீறுகிறது விலங்கின் காலடி வாசனை. கபாலமெங்கும் சூலநாவுகளின் தீண்டலில் கால்களில் பின்னிய நெளிவுச்சுழல் சுழட்டி வீச கண்கள் செருகி சரிந்தபோது, தன்னைத் தானே விழுங்கும் காலசர்ப்பத்தின் வளையம் ஒரு அற்புதமெனக் கவிகிறது. எதிரே தோன்றுகிறாள் வண்ணாத்திப் பெண். பெண்மையின்


படிப்பகம்

www.padippakam.com

பூரணத்துவம்கொண்ட உடல். முதுகில் தீட்டாடைகளுடன் ஆற்றைநோக்கி நடக்கிறாள். சூரியனின் பொன்ரசமிகள் மின்னும் ஆற்றுப் பரப்பு கண்சிமிட்டுகிறது. பரசுராமனின் கோடரி உயருகிறது. வண்ணாத்தின் தலை துண்டாகி வீழ, அழுக்குக் கமழ்ந்த உடம்பில் அன்னையின் சிரத்தைப் பொருத்துகிறான்.

பின்பு அவள் அற்புதமாக எழுந்தாள். தசைக்கோளம் பரவிய பாறையின் நெகிழ்ச்சியில் பச்சையமோடிய நரம்புக் கொடிகளின் ஜீவ ஓட்டம் உள்ளோடிக்களிக்க, உடலைத் தழுவித் தனக்குள் சுருட்டிக் கொண்டு நித்யத்துவம் தந்தது சிலை.

க்ளுக் கென்று சிரிக்கிறது நதி.

மெல்ல மெல்ல சிருஷ்டியின் தோற்றம் பூரணத்துவமெய்ய பீறிடும் கலாபோதத்தில் சொருகிக் கிடந்தான் அவன். கலையின் சுவாசத்தில் சுழலும் பரிமாணங்களினூடே அலைவுறும் தன்மையின் ரெக்கைகளில் உள்முகமாய் அசைகிறது பிரபஞ்சம். கையெழுத்திடும் இறுதிக் கீறலாய் கண்களைத் திறந்து கொண்டிருந்தது உளியின் விகாசம். வாழ்வுக்கும் இறப்புக்குமான பேரர்த்தத்தை அவிழ்க்கும் குறியீடாக நின்றிருக்கும் அவள். இறப்பிலிருந்து வாழ்வை மீட்டெடுக்கும் குறியீடாக நின்றிருக்கும் அவன். உளியின் கைப்பிடி நழுவ கல்விழிகளின் நிலை குத்தல்களில் நின்றெரிகிறது ஓயாத காலாக்னி. அவனுடைய கண்களும் அவளுடைய கண்களும் சந்திக்கும் நேர் கோட்டில் திறந்து கொண்ட புதிர்வழியின் குகையிருளில் தன்னகத்தே இழுத்துக் கொள்ளும் சுருள்வாளின் பசிய இதழ்களோடு சிலைக்குள்ளிருந்து ஒரு கை நீண்டு அவனைச் செதுக்கி எடுக்கிறது.

வியர்த்தம் வியர்த்தமென்று உதிரும் கற்பாறைகளின் சில்லுகள். சநாதன வீச்சத்தின் வெறிச்சிரிப்பு. மணியின் வெண்கல உறுமல் எதிர்ப்படும் கோபுரங்களின் வான் தொடுகை. வெண்புறாக்களின் பதற்றமுறும் ரெக்கையடிப்பு.

'எனக்கு உடல் எங்கேடா?'

மூவிழைக் காலத்தில் அவன் சுழன்றேக, ஆலயத்துக்குள் ரேணுகா தேவியின் சிலையைத் தேடி அலைந்தான். வர்ண தர்மங்களின் வெறி ஊளைகள் கோயில் பிரகாரங்களில் பட்டுத் தெறித்து, காலக்கிடங்கின் சாம்பல் வர்ணத்தில் மனுவின் நகைப்பு முதுகில் வெடித்து, துருவேறிய சூரியனைக் கவ்வித் தின்கிறதே. வண்ணாத்திப் பெண்ணின் அலறல் தேய்ந்து கடவுளர்களின் தரிசனத்தில் பிரமிக்கும் விதானங்களைப் பார், மந்திரங்களின் தொணதொணப்பில் முக்குளிப்பதை. கேள்: ஆடைகளின் துவையோசை தாழ்வதையும், ஆச்சார அனுஷ்டானிகளின் சங்கொலி உயர்வதையும். நதிதீரம் மறைந்தது. ஊறுபட்ட கற்கள் மறைந்தன. கோடரியின் கூர்மை மறைந்தது. எல்லாமே மறைகின்றன. சிரிக்கின்றன வானுயரும் தம்பங்களின் கற்சாயைகள். ஆலய வெளிகளில் ரத்தத் தீட்டுகள் பட்ட உடற்பகுதி எல்லையற்ற சில்லுகளாக உடைந்திருக்க, வெறும் தலை மட்டுமாக தொங்கிக் கொண்டிருந்தாள் ரேணுகா தேவி. குருதி அபேதத்தில் ஒழுகும் மனித வாழ்மை அர்த்தமற்றொழிகிறது. ஜீவனற்று ஆலயத்தில் வீற்றிருக்கும்தலை.



படிப்பகம்

www.padippakam.com



# அவன் நிழல்

தமிழவன்

நான் அந்தக் காலையில் அவனைச் சந்தித்ததை மீண்டும் நினைத்துப் பார்த்தேன்.

என் புத்தகங்கள் நிறைந்த அறையில் நான் ரொம்ப நேரம் படித் து விட்டுக் கண்கள் பஞ்சடைக்க நிமிர்ந்த போது அழைப்பு மணி கேட்டது. இடுப்பிலிருந்து நழுவிய கைலியை எடுத்து சட்டையின் மீது அசிரத்தையாக உடுத்துவிட்டு கதவைத் திறந்தால் ராமசுப்பிரமணியன். அவன், கேட்ட புத்தகத்தைத் தருவதற்காக வந்திருந்தான். என்னிடம் பேசிக் கொண்டிருக்க வந்திருக்றானோ என்று சந்தேகம் வரும்படி எதைப்பற்றி நான் பேசினாலும் விரிவாக உதாரணங்கள் சொன்னான். நான் சாதாரணமாக ஒப்புக்குச் சொன்னதை எல்லாம் அதில் தத்துவம் இருக்கிறது என்று ராமசுப்பிரமணியன் பேசினான். சற்று நேரத்தில் நான் அமைதியாக இருக்கத் தொடங்கினேன். அவன் எங்கோ ஒளித்து வைத்திருந்த வார்த்தைகளை என்முன் கொட்டி வருத்தப்படுவதென்று கங்கணம் கட்டியவன் போல பேசிவிட்டுப் போன போது அவன் சொன்னதில் ஒரு வார்த்தையும் என்னைத் தொத்தியிருக்கவில்லை என அறிந்தேன். என்றோ ஒருநாள் அவன் வந்து சென்ற நினைவு அந்த நடு இரவில் வர அதனை ஒதுக்கி விட்டு நான் படித்துக் கொண்டிருந்த தமிழ் விவிலியப் பகுதியை எடுத்துக் குறித்துக் கொண்டேன். அவை இப்படி அமைந்திருந்தன:

'அப்பொழுது நீர் வருத்தத்தை மறந்து கடந்து போன தண்ணீரைப் போல அதை நினைப்பீர்.

அப்பொழுது உம்முடைய ஆயுசுகாலம் பட்ட பகலைப் பார்க்கிலும் பிரகாசமாயிருக்கும். இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்.

நம்பிக்கை உண்டாயிருக்கிறதினால் திடனாயிருப்பீர்; தோண்டி ஆராய்ந்து சுகமாய் படுத்துக் கொள்வீர்.'

நான் குறிப்பெடுத்ததை ஒருமுறை படித்துப் பார்த்தேன். பின்பும் அந்த ஜன்னல் வழி இருளில் நிழல் தெரிந்தது. அந்த நிழல் ஒரு பெரிய பறவையின் நிழல் போலவும் வேறு ஏதோ போலவும் தெரிந்தது. பூதாகாரமான உடலோடு என் வீட்டுத் தாழ்வாரத்தில் நின்ற பெரிய ஆலமரத்தின் அடியில் காட்சியளித்தது. குளிராக இருந்ததால் மப்ளரை எடுத்துக் கழுத்தைச் சுற்றிக் கட்டினேன். காது வழி குளிர் இன்னும் என்னைத் தாக்கியதை உணர்ந்தபோது மப்ளரை அவிழ்த்து காதுகள் வழி சுற்றிக் கட்டிக் கொண்டேன். மேசை மீது எச்.ஜி. வெல்ஸின் மிகப் பெரிய நூல், அது ஒரு குட்டையான புத்தகம் கிடந்தது, அவரது எல்லா கதைகளையும் தொகுத்த



படிப்பகம்

www.padippakam.com

தொகுப்பு. நான் அதை நூலகத்திலிருந்து எடுத்துவந்தேன். முதல் தாள் கிழிந்திருந்ததால் யாரோ ஆங்கிலத்தில் அந்த நூலின் பெயரை எழுதியிருந்தார்கள். அதன் கீழ் நூலக சீல் போடப்பட்டிருந்தது. அதற்கடுத்த பக்கத்தில் உள்ளடக்கம் பக்க எண்களுடன் கொடுக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்.

என் பழைய வீட்டின் மேல் மாடிக்குச் செல்லும் படிகள் மிகப் பழைய மரத்தில் அமைந்திருந்தது போலவே அதன் நீண்ட கைப்பிடிகள் துருப்பிடித்த பலமான இரும்பு பாளத்தாலாகியிருந்தது. எதற்காக இந்த வீடு என் ஓய்வு பெற்ற காலத்தில் பிடித்திருந்தது என்று யாரும் என்னிடம் கேட்கவும் இல்லை. அப்படி யாரும் கேட்காததால் நான் அப்படி யோசித்துப் பார்த்ததும் இல்லை. விளக்கு வீட்டின் மேற்குச் சுவரில் இருந்ததால்தெற்குப்பகுதிநோக்கி உயர்ந்து மேல் சுவரில் இணைந்திருந்த படிகளை நோக்கி நான் போன போது என் ஓரத்தில் விளக்கொளி விழுந்தது. நான் ஏறும் படிகளில் எனது நிழல் விழுந்ததைக் கண்டு சற்று நேரம் பார்த்தபடி நின்றேன்.

இப்படிப் படிகள் வழி ஏறியதும் ஏறிக் கொண்டிருப்பதும்





படிப்பகம்

www.padippakam.com

நினைவுகளில் தாக்கிக் கொண்டேயிருக்கும்படியான வாழ்க்கை. எனது இரண்டாவது மகன் டெல்லியிலிருந்து வந்து அதே மாளிகையில் காலையில் தினமும் எனக்குப் பிடித்த கண்ணன் தேவன் தேயிலையில் டீ தயாரித்துக் கொடுத்துவிட்டு ஒரு நாள் போயும் விட்டாள். பின்பு மழை வந்தது. மழையில் நனைந்து என் குழந்தை பிராயத்தை நினைத்து லேசாய் கண்களின் ஓரத்தில் கண்ணீர் உருள நின்றதை ஒரு நாள் நினைத்தேன். தங்க கோடுகளிட்ட தோல் அட்டைகளுக்குள் அடுக்கப்பட்ட தாள்களைக் கொண்ட புத்தகங்களை எத்தனை நாள் படித்துவிட்டேன் என்பதும் ஞாபகம் இல்லாதபடி பழமை பலமாய் என்னைச் சுற்றி எழுந்திருந்தது.

எத்தனையோ முறை ஏறியது போல் இன்றும் விளக்கொளி பட ஏறிய போது எதிர்பார்க்காத விதமாய் கதவு திறந்து கிடந்தது. படிகளில் இருந்த விளக்கின் பொத்தானை நான் அழுத்தியிருந்ததால் எழுந்த விளக்கொளி திறந்த கதவுவழி மேல் தளத்தில் ஒரு கூம்பு வடிவத்தில் கிடந்தது: என் காதுகளைத் தீட்டிக் கேட்கவேண்டுமென்று ஓர் உள்ளுணர்வு எழ. காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்டேன். மௌனமாக இருந்தது. ஒலியைக் கேட்பது போல மௌனத்தைக் கேட்பதும் பழக்கமாகியிருந்தது. விளக்கொளி படர்ந்த பகுதியிலிருந்து இரண்டு எட்டு எடுத்துவைத்து அங்குள்ள இன்னொரு விளக்குக்காக ஒரு பொத்தானை அமுக்கினேன். விளக்கு சற்று தாமதித்து எரிந்தது. ஒயர்கள் சரியாக இல்லாததால் அப்படி அந்த விளக்குகள் தாமதித்து ஒளி கொடுப்பதை நான் பலமுறை பார்த்திருந்தேன். அங்கிருந்த தூசிபடிந்த சோபாவில் சென்று, மௌனமாக அமர்ந்து, என் நிழல் பக்கத்து சுவரில் விழுந்ததைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். என் காலில் ஏதோ தட்டுப்பட நான் அணிந்த கோட்டை வயிற்றுப் பகுதியில் பிடித்தபடி குனிந்து அதைப் பார்த்த போது என் மனதில் ரொம்ப காலம் மனம் அறியாத குதூகலம் ஏற்பட்டது. அங்கு மூன்று பொருள்கள். புத்தகத்திலிருந்து விழுந்த மயில் தூவி, பக்கத்தில் கிடந்த பழைய நாணயத்தில் என்ன என்று காணமுடியாதபடி அதிலிருந்த உருவம் மாறியிருந்தது, இன்னொன்று கறுத்துப்போன ஈரக்கசிவுடன் இருந்த எண்கள் இல்லாத ஒரு மரஸ்கேல். என் கண்களில் காலம் தோற்றுப் போனதைப் பார்த்தேன். இப்போது சுவரில் இருந்த என் நிழலைக் கவனித்த போது நான் என்பது புரிந்தது.

அங்குக் கிடந்த இலக்கண நூலில் ஒருவரி அடையாளமிடப்பட்டிருந்தது, 'அவன் நிழல்' என்பது இருபொருள் தரும். ஒன்று, அவனது நிழல் என்பது. இன்னொன்று, அவனே நிழல் என்பது.

இப்போது நான் இல்லாமலானேன்.



படிப்பகம்

www.padippakam.com



# பயணம்

தி. சுதாகர்கத்தக்

எங்கும் அந்த செய்தி அறியப்பட்டிருந்தது. காற்றுக்குத்தான் எங்கும் செல்வதற்கான வாய்ப்புண்டு, அதில் இணைந்து தான் அந்த செய்தி பரவியிருக்கக்கூடும், என் அத்தையும் மாமனும் பிச்சை எடுக்கிறார்கள் என்று இவர்கள் இருவரும் இல்லாத அந்த பூர்விகமான தெரு சூனியம் கண்டுவிட்டது போல் வெறுமை அடைந்ததாக இருந்தது. இருவரும் கால் நடையாகவே எதிர்வரும் ஊர்களின் எல்லைகளை தாண்டி சென்று கொண்டிருந்தார்கள். என் மாமனைவிட என் அத்தை நிறைய வேறுபாடுகளை கொண்டவள். எல்லோரிடமும் இருந்து அவள் தனித்து தான் இருந்தாள். இவளின் உறவுக்காரர்கள் வேறு எத்தனையோ ஊர்களில் வாழ்ந்து செத்தார்கள். இவள் அவர்களின் வாழ்விற்கும் சென்றதில்லை, சாவுக்கும் சென்றதில்லை. வயசுப்பெண்ணாய் வந்தவள் தான் என் மாமனை சேர்த்துக்கொண்டாள். அவனிடமே இருந்துவிட்டதால் அவளின் உறவுகள் அறுந்துவிட்டது. வாய்க்காலைத் தாண்டி ஆரம்பிக்கும் காட்டின் முனைப்பகுதியில்தான் என் அத்தை இருந்தாள். காடும் வீடும் அவளுக்கு ஒன்றுதான் என்று கொள்ள வேண்டும். காட்டின் அருகாமையிலேயே இருந்ததால் அதன் ரகசியங்களையும், அற்புதங்களையும் அறிந்து வைத்திருந்தாள். கொஞ்சம் பெருமையுடனும், கம்பீரத்துடனும் லேசான நடுக்கம் தொனிக்க என் மாமன் சொல்லுவான் காட்டின் அருகில் எல்லோராலும் இருக்க முடியாது என்று. காட்டிற்கு பிரதானமான இருட்டுதான் பிடிக்கும். இருட்டை உவந்து ஏற்றுக்கொண்டது காடு. அந்த இருட்டில் உள்ளே நுழைந்தால் திசை தெரியாது. இதையும் மீறி என் அத்தை திசைகளை நன்கறிந்துதான் இருந்தாள்.

காட்டைப் பற்றி என் அத்தை பேசுவாள் அப்படி அவள் பேசும் பொழுது அவள் எத்தகையவள் என்று அடையாளப்படுத்த முடியாது. காட்டுடன் அவள் பேசுவதாக சொல்வாள். காடும் அவளுடன் பேசியிருக்கத்தான் வேண்டும். காட்டிற்குள் செல்வதற்கு பாதையே இருக்காது என்றுதான் சொல்லக் கேள்வி, இவள் வந்தபிறகு கால் வைத்த இடமெல்லாம் பாதையாகிப்போனது. அவள் முதலில் இங்கு வந்தபொழுது காட்டை நோக்கித்தான் ஓடினாள். ஓடியவள் வெகுநேரம் காட்டையே பார்த்துக்கொண்டு நின்றாள். திரும்பி வரும்பொழுது காட்டையே புரிந்து கொண்டு வெற்றி பெற்றவள் போல் இருந்தாள்.

காடு அங்கு இருக்கும் எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தது. காட்டை அவமதிக்கும் எவனும் வெளங்கமாட்டான் என்ற ஐதீகத்துடன் பின்னியிருந்தது அவர்களின் மனம். காட்டிற்குள் வீசும் காற்று அபூர்வத்தன்மை கொண்டது. வேறு எங்கும் தங்கி இருக்காது அத்தகைய காற்று. என் அத்தை கண்டு கொள்வாள் அந்த காற்றின் வகைகளை.



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைத்தாச்சிகளை காடு கனிவுடன் வரவேற்கும் என்று மாமன் இடையிடையே சொல்லுவான். காட்டிலேயே பிறந்து விடுகின்ற குழந்தைகள் அழாமலயே இருக்கும். காட்டின் தீட்சண்யத்தைப் பார்த்து சிரிக்கும். அந்த காற்று தன் மூச்சிலும் ரத்தத்திலும் கலந்திருப்பதாகவே அவள் நம்பிக்கை கொண்டிருந்தாள். தீட்டான நாட்களில் அவள் காட்டிற்குள் செல்லமாட்டாள். செருப்பில்லாமல் காட்டிற்குள் செல்பவர்களையே காடு மகிழ்ந்து அரவணைக்கும் என்று என் மாமன் நினைத்திருந்தான். காடு இல்லாமல் இருக்கும் ஊர் சிதிலமடைந்து சிலந்தி வலை அண்டிப்போய் கிடக்கும் என்ற பயம் என் மாமனுக்கும் அத்தைக்கும் உண்டு. என் அத்தையின் மனம் பற்றிய உண்மை என் மாமனுக்கே கூட சரியாய் தெரியாது. காட்டிற்கு தெரியுமோ என்ற சந்தேகம் அவனுக்குண்டு. காட்டிற்கு போகும் வழியில் கள்ளுக் கடைகள் உண்டு. அவன் கள்ளைக் குடிக்கும் முன்பாகவே காட்டை நோக்கி வணங்கிவிட்டுத் தான் குடிப்பான். கள்ளை குடித்துவிட்டு அவன் 'நக்கி நாதார்ன பயலுக கள்ளா குடுக்குறானுவ, பொட்டச்சி மூத்திரமாட்டும் கொஞ்சம் உப்பும் உரைப்புமா' இருக்கும்போல என்று திட்டுவான் வெகு காலமாகவே அவன் கள் குடித்துக் கொண்டிருப்பதால் அவனுக்கு பிடித்தமான வகையில் கள்ளை கொடுக்க வேண்டும் என்ற பிரியத்தில் கள்ளுக்கடைக்காரன் பதிலுக்கு அவனை எதுவுமே சொல்வதில்லை.


என்னையும் ஒரு நாள் காட்டிற்குள் அழைத்துச் சென்றாள். என் மாமன் அளிந்த பழம் மரத்தின் மீதேறி அளிந்த பழங்களை பிய்த்துப் போட்டான். அது தீராத புளிப்புச் சுவையை கொண்டது. அவளை நினைக்கையில் அந்தக் காடும் அளிந்தப் பழத்தின் புளிப்புச் சுவையையும் நினைவில் துருத்தியபடி இருக்கிறது. நானே என் அத்தையை கட்டிப்பிடித்துப் பார்க்க நினைத்ததுண்டு. அப்படியே நான் செய்திருந்தாலும் கூட அவள் 'அத்தையயே கட்டிப்புடிக்கின்ற மருவப்புள்ளே' என்று சந்தோஷமாக சொல்லுவாள். நொய்யான பொரி அரிசியில் கொஞ்சம் நாட்டு சர்க்கரையை கலந்து தின்பதற்காக என் மாமனுக்கு கொடுத்தால் அவளையே கூட்டி கொடுத்து விடுவான் என்று எல்லோரும் விளையாட்டாக சொல்வதுண்டு. ஆனால் என் மாமன் கொஞ்சம் கோபமாக இருக்கும் நேரங்களில் 'ஊரக்காலி மாடு, இவ எமனையும் போவா, அவன் நெழலையும் போவா' என்பான்.

கண் முன்பாகவே காடு அழிந்து கொண்டிருப்பதை அவர்கள் இருவரும் சகித்துக் கொண்டார்கள். காட்டினுள் கடைசியாக சென்று வந்ததை இருவருமே ஒரே நேரத்தில் மௌனத்தை பரவவிட்டு நினைத்துக் கொண்டார்கள் அவர்களின் பொதுவான நம்பிக்கையான மழை வானத்திலேயே ஒளிந்து கொண்டிருந்தது. எல்லையில்லாமல் இருந்தது போலவே அது கருணையும் இல்லாததாகிவிட்டது என்று அவள் எல்லோரிடமும் சொன்னால் முன்பு இருந்தது போலவே இல்லாமல் இருந்த தன் ஊரை ஏதோ ஒரு துக்கம் பீடித்துக்கொண்டு வருவதை அவள்



படிப்பகம்

www.padippakam.com



உணர்ந்தாள் அந்தத் துக்கம் காட்டுடன் சம்பந்தம் உடையதாயிருந்தது. இவர்கள் யாவரும் நெருங்கவே முடியாத அளவுக்கும், கண்டுணர முடியாத அரூபத்தின் ஆளுகைக்கு காடு உட்பட்டுவிட்டதாகவே பயத்துடன் கருதினார்கள். பசி நிரந்தரமான தங்கலாகவே தெருவில் பிள்ளைகளிடம் அடைந்து கொண்டது பிள்ளை பெற்ற பொம்மனாட்டிகளின் முலைக்காம்பிலிருந்தும் பசி வழிந்து எங்கும் நிழலாடியது. ஆந்தை அலறிய ஒரு சாமத்தில் ஊரின் வயசாளி சொன்னான், “இருள் வியாபித்துக் கிடந்த திண்ணையில் இருந்து எல்லாரும் பொறப்படுங்க” யாருக்கும் இது கேட்டுவிடக்கூடாது என்ற பயம் அந்தக் குரலில் அமுங்கிக் கிடந்தது. திசைக் கொருவராக கிளம்பி விட்டிருந்தார்கள் எந்த திசை என்று யாருக்கும் தெரியவில்லை என் அத்தையும் மாமனும் கிளம்பிய பொழுது பின்னிரவு தொடங்கி இருந்தது. நிலவே இல்லாமல் இருந்தது அன்று குண்டூசி குத்துவது போல் பனி இறங்கிக் கொண்டிருந்தது குடிசைகளின் கூரைமேல் ஈரம் இறங்கித் கொண்டிருந்தது. மண்ணிலும் ஈரம் முளைத்துக் கிடந்தது. என் மாமன் கொஞ்சம் கொடுக்காப்புளியும் இரண்டு பனம் பழங்களையும் மட்டுமே தின்றிருந்தான் என் அத்தைக்கு அது கூட இல்லை. என் மாமன் திரும்பி பார்த்துக்கொண்டு நடந்தான் அவன் கண்களுக்கு முன்னால் எதுவுமே புலனாகவில்லை என் அத்தை திரும்பிப் பார்ப்பதற்கு திராணி இல்லாதவளாக இருந்தாள். அவனுக்கும், அவளுக்கும் அங்கிருந்து எடுத்துச்



படிப்பகம்

www.padippakam.com

செல்வதற்கு ஒவ்வொரு பொருள் இருந்தது. அத்தைக்கு களைக்கட்டாக இருந்தது. இறுகப் பற்றியிருந்த அவளின் கைகளில் இருந்து தலைகீழாக நிலங்களில் உழைப்பை தேங்கிக் கிடக்கச் செய்ததையும், பயிர்களின் இடையே தன்னை எப்படி அவள் செயல்படுத்தினாள் என்று அந்த கூர்மையான இரும்பின் வெட்டுப்பகுதி தன் நினைவை அந்த மண்ணில் உதிர்த்துக் கொண்டிருந்தது. எங்கேயாவது மரத்தில் கலயம் கட்டியிருந்தால் ஏறி திருட்டுகள் குடிப்பதற்காக மரம் ஏறுவதற்கான தள கயிறை எடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டிருந்தான். கள்ளின் போதையை அது உள்வாங்கி இருந்ததைப்போல அவன் நெஞ்செலும்பில் ஆடிக்கொண்டிருந்தது.

மாமன் தன் ஆசைகள் புதைக்கப்பட்டு விட்டதான முடிவுக்கு வந்திருந்தான். அடுத்த முகங்களுக்கு அது சாதாரணமான ஒன்றுதான் அவனுக்கு எரிகின்ற ஆசை அது கொஞ்சம் கையளவு கொள்ளு இரண்டு உழவு மாடுகளுமேயானது அவனின் ஆசை. இங்கிருக்கும் பொழுதே தனக்கு கிடைக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான். தனக்கு இனி அது கிடைக்க வாய்ப்பு இல்லை என்ற எண்ணம் அவன் உடல் நரம்புகளில் பாய்ந்து திகைப்பை கொடுத்தது. அடையாளம் தெரியாத ஊர்களை தாண்டி சென்று கொண்டிருந்தார்கள் ஒவ்வொரு ஊரிலும் காடு இருக்குமா என்று அத்தை தன் விழிகளை பரத்திப் பார்த்தாள். என் மாமன் தின்பதற்கு ஏதாவது தென்படாதா என்ற எண்ணத்தை மனதில் வழிய விட்டிருப்பான் பசி அவனை உந்தித் தள்ள சோற்றுக் கத்தாழையின் புதர்களின் கீழே ஈரப்பதம் அடங்கிக் கிடக்கும் மணலில் நத்தை பெரிதாவதற்கு முன்பே இருக்கும் இளஊமைச்சிக-ளை பிடிப்பான்.

பசியாறப் போகின்ற மகிழ்வில் மாமன் அந்த சோற்றுக் கத்தாழையின் புதர்களை கண்ணால் இடுக்கிக் கொண்டு பார்த்து

சோத்துக் கத்தா
ஒக்கா ஒருத்தனோட படுத்துருந்தா
நான்-பார்த்துருந்தே
எனக்கு பங்கு குடுறா

என்று வெறியுடன் ஆடுவான். ஊமைச்சிகளை பிடித்துக்கொண்டு வரும் அவன் அதனுடன் கொடி பிரண்டையை அரைத்து புளிசேர்த்து அவித்து வைத்திருக்கும் அதனுடன் கலந்து தின்ன வேண்டும் என்று பிடிவாதத்துடன் இருப்பான். பக்கத்து வேலிகளில் கோவை தழைகளின் இடையில் அது படர்ந்திருப்பதை பார்த்து அத்தை அதை கொண்டு வருவாள் பின்பு கொஞ்சம் புளிக்காகவும், உப்புக்காகவும் தெரியாதவர்களின் வாசலில் போய் நிற்பாள் குடியானவர்களின் வீட்டின் மண்பானையின் அடியில் இருக்கும் புளியும், உறியில் தொங்கும் உப்பும் இதனால் குறையவே செய்யும் வயிறின் நிறைவு அவன் நடை வலியை மறக்கச் செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com

நடந்து ஊர் சுற்றியே காலத்தை விழுங்கி இருந்தார்கள். எத்தனை கிராமத்தின் எல்லைக் கற்களை கடந்து வந்திருக்கிறோம் என்று இருவராலேயே அனுமானிக்க முடியவில்லை. கடந்தது போன காலத்தின் நினைவின் உள் அறைகளில் இருந்து என் மாமன் நினைத்துப் பார்க்க பிரயாசை பட்டதே இல்லை. மாறாக அவன் பருவங்களை நினைவில் தாங்கிக் கெண்டிருந்தான். புளிய மரத்தில் புளியம்பழங்கள் செங்காய்களாக இருக்கின்ற பருவத்தையும், அத்திப்பழம் பழுக்கின்றதையும், ஈச்சம் பழங்கள் கனிகின்ற பருவத்தையும், பனங்கிழங்கு கிடைக்கின்றதையும், ஈசல்மாவு, வயல் எலிகள் கிடைக்கின்ற பருவத்தையும் அவன் நினைவாக கொண்டிருந்தான். உணவுப் பண்டங்களின் விளைச்சலுடனேயே பின்னிக் கிடந்தது அவனின் பருவத்தின் நினைவுக் கணிப்பு. பருவத்தை இந்த ரீதியில்தான் அவனால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும் என்று அவன் பெரிதும் நம்பினான். இருவருக்கும் சந்தோஷம் எப்பொழுதும் வரும் என்று தீர்மானிக்க இயலாதவர்களாகவே இருந்தார்கள். ஆனாலும் அத்தைக்கு நிறைய தண்ணீர் தங்கி இருக்கும் ஆறுகளைப் பார்த்தாலும், நிழல் அடர்ந்து நிலத்தில் அப்பிக் கிடக்கும் இடங்களைக் கண்டாலும் அவளுக்கு சந்தோஷம் வரும் நிழல் இல்லாத இடங்களை. அவள் வெறுக்கவும் செய்தாள். நிழலுக்கும் பஞ்சம் வந்து விடப் போகிறது என்றும் பயந்தாள்.

விளைச்சல் முற்றிக் கிடக்கும் நெல் வயல்களின் வழியே நடக்கும் பொழுது அத்தை பரவசம் கொள்வாள். என் மாமன் பரபரப்படைந்து தன்னால் முடிந்த மட்டும் அக்கதிர்களை கையால் நிமிட்டியே நெல்சேர்க்க முனைவான். அப்பொழுது அத்தை அவனை திட்டுவாள் "உருப்படாத கோயில்ல உண்டச் சோறு வாங்கித் தின்ன பயலே" என்று, நிலத்தின் சொந்தக்கார உழவனுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று நினைப்பாள். பச்சை வாசனை அடிக்கும் விளைச்சல் நிலங்களிலேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று இருவரும் நினைத்தார்கள். அப்படி சுற்றும் பொழுது இரவானால் காவல் காப்பதற்கு இருக்கக் கூடிய கருப்பஞ்சோலை வைத்து கட்டிய குச்சில் இணைந்து கிடப்பார்கள். சுற்றி விளைந்து கிடக்கும் பயிர்களின் சாட்சியாக வைத்து அவளை ஆளுகை செய்வான் மாமன். பொக்கை பொரு இல்லாத சாணித்தரையின் வழுவழுப்பைப்போல இருக்கும் அவளின் தொடைகளின் மேல் காலைப் போட்டுக் கொண்டு அவள் தன் ஊர் ரெக்கணம் என்று எப்பொழுதோ சொன்னதை நினைவில் மீட்டு

"ஏந்த ரெக்கணத்தியா, ஏந்த ரெக்கணத்தியா" அவளை ஊரின் பெயராலயே அழைத்து இழைவாக கிசுகிசுப்பான். அவனின் கோவணத்தை தளர்த்திக் கொண்டே அவளை மகிழ்விக்க சொல்லுவான் 'உத்தா பத்தினி ஊர்மேல போனாளாம், வீட்டுக்கு ஒரு இது தீவார்த்தன காட்டுச்சாம்' அவள் அதைக் கேட்டுக்கொண்டே தன்னை திறந்து காட்டுவாள் அவனுக்கு மாமனுக்கு நினைப்பு ஓடும் அவளின் இளமையை எதுவும் நசுக்க முடியாது என்று அந்தத் தருணங்கள் மார்கழி மாதமாக இருந்தால், கிராமத்தின் தெருவில் வழிந்து கிடக்கும் ஏகாந்தமான மௌனத்தை ஒத்தை ஆளாய் குளிரில் ஊடுருவி பண்டாரம் சனி ஒழியவேண்டும் என்று மேல்ஸ்தாயில் பாடிக்கொண்டு திரிவதை இருவருமே கேட்பார்கள். அத்தை ஏக்கமாக மாமனின் அணைப்பில் இருந்து கொண்டு சொல்லுவாள் நடுவைத்தாண்டி முக்கால் இரவு கழிந்த வேளையில் திரிந்து கொண்டிருக்கும் அந்த ஊர் பண்டாரம் பூ மலர்வதைப் பார்த்திருக்கக் கூடியவன் என்று பூ மலர்வதை பார்ப்பவனின் கண்கள் ஆதிகாலக் கண் என்று எண்ணினாள். அந்தப்



படிப்பகம்

www.padippakam.com

பண்டாரத்தின் மனைவியையும் சேர்த்தே நினைத்தாள். காற்றுக்கு தன்னை இழந்து விடக்கூடிய வலுவில்லாத மேற்கூரையினை உடைய அந்த வீட்டின் ஜில்லிப்பு தெளிந்து கிடக்கும் மண் தரையில் தகர்ந்து போய் படுத்திருப்பாள் பண்டாரத்தி. தன்னை விட்டு இரவில் விட்டில் பூச்சிகளின் வெளிச்சத்தில் நடக்கும் அவள் துணையான பண்டாரத்தை விட்டு தனித்துக் கிடப்பாள். தானியங்களே தங்கி இருப்பதற்கு சாத்தியமே இல்லாத அந்த வீட்டில் இருந்த பண்டாரத்தி தை மாதத்தில் வீட்டுக்கு வீடு காணிக்கையாய் கிடைக்கும் நவதானியப் பயிர்களுக்காக அந்த தனிமையை சகித்துக் கொள்ளக்கூடியவளாய் இருப்பாள்.

இருவரின் கால்ரேகைகள் மண்ணில் எங்கும் நெளிந்து கிடந்தது. அந்த நெளிவில் என் மாமனின் வாழ்வு உருகிக் கிடந்தது. பலவித ஊரின் சந்தைகளை பார்த்துக் கொண்டே சென்றார்கள். சந்தைகளை வெறுமனே பார்க்க மட்டுமே முடிந்தது அவர்களின் கண்களால். ஆனாலும் மாமன் கொஞ்சம் கருவாட்டுத்துண்டுகளையும் சுருக்கு பைகளையும் சந்தையிலிருந்து திருடிக்கொண்டு வருவான் அத்தைக்காக. கடந்து செல்லும் ஊர்களின் திருவிழாக்க ளில் இருவரும் எதிர்பாராதவிதமாக கலந்து கொண்டு தங்கள் வரவை பதிந்து கொண்டார்கள். அத்தகையதொரு ஊரின் பூசத் திருவிழாவின் பொழுதுதான் என் மாமனை இவள் பிரிய நேர்ந்தது. இதையும் மீறி தான் நாடுமாறியாகிவிட்டதையும், பங்கப்பட்டுபோய் விட்டதையும் நினைத்தாள். வெறும் தலைகள் நிறைத்துக்கொண்டு இருந்த அந்த வெட்டவெளியில் இருவரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். இவளை விட்டு நகர்ந்து மாமன் சீமலெந்தப்பழம் கொட்டி கிடக்கும் இடத்திற்கு சென்றவன் அருகிலேயே தேவாங்கு முடிகயிறு போடும் நபரிடம் சூழ்ந்திருந்த கூட்டத்தினுள் நுழைந்தான். அத்தையின் பின்புறம் கூட்டமாய் இருந்த குஷ்டரோகிகளின் நடுவே காணாமல் போய்விட்ட சிறுமி நின்று விழித்துக் கொண்டு இருந்தாள். அருகில் மூக்கு அழுகிப்போன ஒரு குஷ்டரோகி அவளைப் பார்த்து காற்றில் அந்த சிறுமியை அணைப்பது போல பாவனை செய்தான். இருவருக்கும் இடையில் மிதந்து கொண்டு வருவது போல் தன் தோளில் கூண்டுகளை ஏந்திக் கொண்டு அந்தக் குருவிக்காரன் என் அத்தையை நோக்கி வந்தான். அவன் அத்தையின் கண்களில் ஊடுருவிப் பார்த்தான். இவள் நிதானிக்கும் முன்பே அவள் அருகில் வந்து வாதே என்று சன்னமாக சந்தோஷத்தை நினைத்து கூறிவிட்டு முன்னே சென்றான். அவன் அழைத்தது உடனேயே நிலத்தில் அமுங்கி மறைந்துவிட்டது. மிகப்பெரிய மகிழ்ச்சி அவனிடம் இவளுக்காக இருப்பதாக பயந்து உணர்ந்தவள் காரணமற்று அவன் பின்னே சென்றாள். கூட்டம் இவர்களின் நடையால் பின்னே சென்று கொண்டிருந்தது.

குருவிக்காரனும் இவளும் ஒதுங்கி வந்த இடம் முந்திரி மரமாக இருந்தது. கிளைகளை நிலத்தில் தழைய விட்டு மூடிக்கொண்டிருந்தது. முந்திரிப் பழங்களின் கார வாசனை நெறுநெறுத்துக் கொண்டிருந்தது. அவளிடம் புதிராகப் பேசினான். இவளுக்கு எதுவுமே அறியாத ஒன்றாயிருந்தது அவனின் பேச்சு. நெடுங்காலமாக அலைந்து கொண்டிருப்பதாக சொன்னான். அவன் கொள்ளிடக்கரையின் கோரைப்பாய் விளைந்து கிடக்கின்ற சம்புத்தட்டுகளில் குருவிகளைப் பிடிப்பதாக சொன்னான். ஒரே நேரத்தில் அந்தக் குருவிக்காரனின் கைகளை நினைத்து மகிழ்ச்சியையும், வெறுப்பையும் கொண்டாள். அவளின் மார்பை கையாண்ட அவனின் நேர்த்தியான கைகளுக்காக மகிழ்ச்சி ஊறியது.



படிப்பகம்

www.padippakam.com

பரபரவென்று அவன் அவிழ்த்துப் போட்டு விட்டு நின்றது இவளுக்கு சிரிப்பை தந்தது. தன் சேலையை தலைக்கு சும்மாடாக்கி அம்மணமாக தன்னை அவள் மலர்த்திக்கொண்டு கிடந்தாள். உடைந்து சிதறிய கஜீரகோவின் சிற்ப நகலும், மூச்சை அறுக்கும் விந்தின் கவிச்சையும் அந்த குறுகிய இடத்தில் விரவியிருந்தது போல் காட்சி தந்தது. தண்ணீர் விட்டுப் பிசைந்து கெட்டியாக இருக்கும் கேழ்வரகு பிசைமாவு போல் வாழைப்பட்டையின் குளிர்ச்சியை தாங்கிய தொடைகளின் இடையில் பதிந்து இருந்த அவளின் குறியை ஆவலுடன் பார்த்தான். அவள் மேலான உணர்ச்சியின் பலவீனத்தில் இருந்து அந்தக் குருவிக்காரனுடன் சந்தோஷித்துக் கொண்டாள். அவன் சொன்னான் 'நீ என்ன அடிமாடா, கொஞ்சம் நல்லா தூக்கி கொடுத்தாத்தான் என்னா' என்று அவளின் வியர்வை அரும்பிய காதோரத்தில் கிசுகிசுத்தான். என் மாமன் இப்படி சொல்லி இருந்தால் தான் என்ன சொல்லுவோம் என்று அப்பொழுது நினைத்தாள். அந்தக் குருவிக்காரன் ஊசி தைத்து இழுப்பது போல என் அத்தையின் மீது படர்ந்து இயங்கினான். உணர்ச்சிகளின் தாங்க முடியாத கொட்டடத்தில் அவனின் படர்தல் அவளுக்கு ஓணக்கையாக இருந்தது.

அவள் உடலிலிருந்து சக்கையாக ஏதோ ஒன்று பிழிந்து ஓடிவிட்டது மாதிரி பிறகு உணர்ந்தாள். அது புணர்ச்சிக்குப் பின் ஏற்படும் வெறுமையின் ஆரம்பம். அப்பொழுதுதான் அந்தக் குருவிக்காரன் அம்மணமாகவே எழுந்து போய் மூங்கில் கூடுகளின் கதவை திறந்து ஒரு குருவியை எடுத்து வந்து பளபளப்பை கண்களில் தேக்கிக் கொண்டு இது உனக்கு என்றான். அந்த நேரத்தில் தன்னிடம் கொடுக்கக்கூடியது அதுதான் என்று அவன் நினைத்தான். அந்தக் குருவி என் அத்தையின் உள்ளங்கையில் குந்தியிருந்தது. அது தன் சிறிய கண்களால் அவளை மௌனமாகப் பார்த்தது. தங்கள் இருவரின் அம்மணத்தைக் கண்டு அது ஆழமாக நகைப்பது போலவும் அவளுக்கு தோன்றியது. அது முற்றிலும் பறப்பதை இழந்து போயிருந்தது. மீண்டும் அதன் கண்களை பார்த்த அவள் அதில் காட்டின தீவிரம் அடங்கி இருப்பதாக நினைத்தாள். அப்பொழுதுதான் அந்தக் குருவியினைப் பிடித்த அவனின் கைகளை வெறுத்தாள்.

'ஏந்த இதுவுள இப்பிடி புடிச்சு வைக்கிறீங்க' என்றாள் ஈனமான குரலில். இதுவரையில் அந்த குருவிக்காரன் இத்தகைய ஒரு கேள்வியை யாரிடமும் எதிர்கொள்ளாமல் இருந்தான். தன்னால் அதற்கு பதில் தர இயலாது என்பதை உணர்ந்து நடுங்கினான். என் அத்தையிடம் கொண்டிருந்த கணநேர உறவு அறுந்து பால்வெளியை நோக்கி ஊர்வதாக நினைத்தான். காற்றும் நின்றுவிட்டது போன்ற மௌனம் அவர்களிடையே நிலவியது. தலையை கவிழ்த்துக்கொண்டே அந்த குருவியை அவன் வாங்கிக் கொண்டு கிளைகளின் இடையே நுழைந்து வெளியேறினான். இதை என் மாமனிடம் சொன்னால் அவன் என்ன நினைப்பான் என்று அவளுக்கு தெரியவில்லை. ஒருவேலை என் மாமன் அந்தக் குருவிக்காரனை

அட எங் கூத்தியாரே என்று நகைத்தாலும் நகைப்பான். ஒரு வேளை வெறுமனே அப்படி சொன்னாலும் அவன் என்ன நினைப்பான் என்று அவன் நெஞ்சின் சதைகளுக்குத்தான் தெரியும்

குருவிக்காரனின் நினைப்பு வரும் பொழுதெல்லாம் ஆதி ஒறவு அறுத்துட்டுப்போனாலும் குண்டி ஒறவு கொழுந்துவிட்டு எரியுமாம்' என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள். இதனாலேயே அவள்



படிப்பகம்

www.padippakam.com

என் மாமனை பிரிந்தாள். எங்காவது அவனை சந்தித்து விடலாம் என்று திடம் கொண்டாள் பூசத்தின் கூட்டத்தில் அலைபாயும் கண்களுடன் அவ்வை தேடி சலித்த அவன் எதிர் திசையில் பயணித்தான். இருவருமே வேறு புதிதான பாதைகளை உருவாக்கி நடந்தார்கள். அவன் நடந்த எதிர் திசை அவன் உயிரை காவு வாங்கிவிட்டது. கடைசிவரை என் அத்தைக்கு இது தெரியாத விஷயம் ஒன்றாகவே இருந்துவிட்டது. கார்த்திகையில் பனைமரம் பூ வைத்த பருவம் அது. பசி அவன் உடலை அரக்கித் தள்ள மிகப் பெரிய ஈச்சங்கொத்தை நாடினான். அதன் அடியில் இருக்கும் ஈச்சஞ்சோறை பிடுங்குவதற்குகையால் அளைந்தான். எளிமையான தோற்றம் கொண்ட அந்த செடி பாம்பை மறைத்து வைத்திருந்தது. என் மாமனின் உடல் இயக்கம் அத்தனையையும் தன் கூர்மையான சின்ன நாக்கில் ஊறிஞ்சிக் கொண்டு மண்ணை துளைத்து இரக்கம் இல்லாமல் சரசரத்து சென்று கொண்டிருந்தது. நெடுங்காலமாக மழையையும் வெயிலையும் உள் வாங்கி இருத்திக் கொண்டு இருந்த தன் முதுகை காட்டிக் கொண்டு கவிழ்ந்து கிடந்தான். பார்ப்பவர்களிடம் எல்லாம் கரிநாள் காசு வாங்குவதையும் அவன் இழந்தான். பல ஊரின் மாட்டுக்கார சிறுவர்களுக்கு பூலாப் பூ பிய்த்துக்கொடுக்கும் தன்மையையும் மறந்தவனாக கிடந்தான். தேசாந்திரமாக தீய்ச்சலான வெயிலில் சுற்றிக்கொண்டிருந்த கழுகுகள் இவ்வளவு முழுமையான அநாதைத்தனத்தை உள்ளடக்கிக் கொண்டு ஒரு பிணம் கிடப்பதைப் பார்த்து சிறகுகளை படபடத்தது.

அவள் ஒத்தையாகிப் போனதை அறியாமலேயே நடந்து கொண்டிருந்தாள். காட்டை எங்காவது பார்த்துவிட வேண்டும் என்ற முனைப்பில் இருந்தது அவளின் நடை. எங்காவது ஒரு ஊரில் அவளை வந்து சேர்வான் என் மாமன் என்ற நம்பிக்கையினை தீயாய் நெஞ்சில் தேக்கிக்கொண்டு நடக்கிறாள். மாரிக்கால இரவுகளில் தன் மார்பை என் மாமனின் உதடுகளுக்கு தரவேண்டும் என்றே எண்ணிக்கொள்கிறாள் வீராணம் ஏரிக்கரையை எட்டியிருந்த அவள் அதைப் பார்த்து

'ஒக்கட்டான் ஏரியிலே தண்ணிதான் உண்டா' என்று வைது கொண்டே நடந்தாள். அந்த வைதல் வெடித்து பாளமாய் பிளந்து வறண்டு கிடக்கும் ஏரியின் நில இடுக்களிலும் நுழைந்து எதிரொலித்தது. ஏரிக்கரையிலேயே இரவு அவளின் மேல் கவிந்து விட்டது. கரையின் குடிசை ஒன்றில் கோவணம் மட்டுமே கட்டிய சிறுவன் ஒருவன் அரிக்கேன் விளக்கின் துணையுடன் மாடுகளுக்கு வைக்கோல் பிரித்துப்போடும் கருணையை பார்த்துக்கொண்டே நடந்தாள். வெற்றிலைக் கொடிகளில் வேலை செய்துவிட்டு மடியில் கூலியுடன் பொழுது சாய வீடு திரும்பும் பெண்களுடன் கலந்து நடந்தாள். இரவு முடிந்து வெளிச்சம் பிரியும் நேரத்தில் பெயர் தெரியாத புதிய ஊருக்கு அவள் போகின்றாள். இவளிடம் தங்கி இருக்கும் யாராலும் கைகொள்ள முடியாத எளிமை கண்டு அவமானப்பட்டு அந்த ஊர் மூழ்கிப்போக சாத்தியமிருக்கிறது. அங்கு காடு இருந்தாலும் இருக்கும்

சூரியன் உச்சிக்கு வரும் வேளையில் இவளின் வயிற்றின் நரம்புகளில் பசி தோன்றினால் சிதிலமடைந்த அந்த ஊரின் ஒரு உழவனின் வீட்டு வாசல் முன் கையேந்தி நிற்பாள்.

அவளுக்கு பிச்சையாய் கிடைக்க இருக்கும் கொஞ்சம் நீராகாரம் கலந்த பழையசோறு எதாவது ஒரு வீட்டில் ஒளிந்து கொண்டுதான் கிடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



**URZULA K. LA GUIN**

ஆராகனில் உள்ள போர்ட்லாந்தில் வசிக்கும் லாகுன் கலிபோர்னியாவில் பிறந்தவர். விஞ்ஞானப் புனைகதைகளில் மிகத் தரமான இடத்தைப் பெற்றிருக்கும் இவர் நேஷனல் புக் அவார்டு, SFக்கு சிறப்பித்து வழங்கப்படும் நெபுலா, ஹியூகோ பரிசுகளும் பெற்றவர்.

விஞ்ஞானப் புனைகதைகளிலும், ஃபேண்டஸி இலக்கியத்திலும் குறிப்பிடத்தகுந்த இந்தப் பெண் எழுத்தாளரின் பத்துக்கும் மேற்பட்ட நாவல்களில் சிறப்பானவையாக The Left Hand of Darkness, Rocanon's World, The Disposessed ஆகியவை கருதப்படுகின்றன. JRR டோல்க்கினின் மத்திய பூமிபோல Earth Sea என்கிற ஃபேண்டஸி உலகத்தைப் படைத்து எழுதிய A Wizard of earth Sea என்கிற தொகுப்பு மிக முக்கியமானது.

கவிதைகளிலும் விமர்சனத்திலும் கூட இவர் இயங்கி வருகிறார்.

## கட்டற்ற ஒரு சொல்

**ஊர்ஸுலா லா குன்**

அவன் எங்கிருக்கிறான்? தரை கடினமாயும் ஈரமாயும், காற்று கடுமையாகவும் துர்நாற்றத்துடனும் - இவைதான் அங்கிருந்தன. தவிர தலைவலியும், குளிர் பிசுபிசுத்த ஈரத்தரையில் மல்லாந்திருந்த ஃபெஸ்டின் மெல்ல முனகினான். 'மந்திரக்கோலே' பிரம்பாலமைந்த அக்கோல் கைக்கு வராதது கண்டு தான் பேராபத்திலிருப்பதை அறிந்து கொண்டான். மெல்ல எழுந்து அமர்ந்தவன், மந்திரக்கோல் இல்லாத நிலையில் வெளிச்சத்தை உருவாக்க நடுவிரலையும் பெருவிரலையும் சேர்த்து சொடக்கி மந்திரத்தை உச்சரிக்க தீப்பொறி தோன்றிப் பாய்ந்து நீல நிற நெருப்புக் கோளம் உருவாயிற்று. 'மேலே' நெருப்புக் கோளம் நடுக்கத்துடன் சடசடத்து மேலெழுந்தது. மேலே செல்லச்செல்ல நாற்பதடி உயரத்தில் புள்ளியாய் தன் வெளிறிய முகம் கண்டான். மிகுந்த உயரத்தில் வளைந்த கதவுப் பொறியை நெருப்புக் கோளம் வெளிச்சமிட்டுக் காட்டியது. வெளிச்சம் கலங்கலான பிசுபிசுத்த சுவர்களில் எதையுமே பிரதிபலிக்கவில்லை. மாயாஜாலத்தினால் சுவர்கள் இரவுடன் நெய்யப்பட்டிருந்தன. பெஸ்டின் தன்னுடன் திரும்ப இணைந்ததும் நெருப்புக் கோளம் அகன்றது. இருட்டில் முஷ்டியை உள்ளங்கையால் குத்தியபடி அவன் அமர்ந்திருந்தான்.

எதிர்பாராத தருணத்தில் பின்னாலிருந்து மாயாஜாலத்தினால் அவனைக் கட்டியிருக்கக் கூடும். தனது சொந்த கானகத்தில் நடந்து கொண்டும், மரங்களுடன் சம்பாஷித்துக் கொண்டும் இருந்தது தான் கடைசி நினைவு. முன்னதாக வாழ்க்கையின் நடுவே தனிமையான வருடங்கள். உபயோகமற்றும் சக்தி செலவிடப் படாமலும் இருப்பதாக உணர்வு கொண்டமையால் ஏற்பட்ட சுமை. எனவே பொறுமை பயிலும் பொருட்டு மரங்களுடன் சம்பாஷிக்க கிராமங்களை விட்டகன்றான். குறிப்பாக நீரோட்டத்துடன் ஆழ்ந்த உணர்வுத் தொடர்புடைய வேர்களைக் கொண்ட ஓக், செஸ்ட்நட் மற்றும் சாம்பல் நிற ஆல்டர் மரங்களைக் கண்டு பேச. மனிதர்களுடன் பேசி ஆறு மாதங்களாயிற்று. மந்திர மாயமின்றி எவருக்கும் தொந்தரவின்றி தனது அத்தியாவசியங்களுடன் இருக்கையில் யார் இந்தத் துர்நாற்றக் கிணற்றில் கட்டிப்போட்டது?



படிப்பகம்

www.padippakam.com

'யார்? யாரது?' சுவர்களை நோக்கி வினவினான்.

கற்களில் கறுப்பு வேர்வை வெளியிடுவது போல் மெதுவாக சுவர்களில் ஓர் பெயர் சேகரமாகி அவனிடம் வழிந்தோடியது -

'வோல்'

ஃபெஸ்டின் ஒரு கணம் வியர்வையில் குளித்திருந்தான். - வெகு காலத்திற்கு முன்னர் அவனைப் பற்றிக் கேள்விப்பட்டது - ஒரு மாயாவிக்கு மேலாகவும் மனிதத்தன்மை குறைந்தும் அவுட்டர் ரீச் ல் உள்ள தீவுகளைக் கடந்தவன். தொன்மையானவற்றைத் தலைகீழாக்கல், மனிதர்களை அடிமைப்படுத்துதல், காடுகள் விளைநிலங்களைக் கெடுத்தழித்தல், தன்னுடன் மோதமுற்பட்ட எந்த ஒரு மாயாவி மற்றும் கீழ்த்திசை ஞானியை பாதாளச் சிறையில் அடைத்தல்.

அவனது அடிமைகள் கப்பலில் பின் தொடர, காற்றின் மேல் மாலை வேலைகளில் கடலிலிருந்து வருவதாக பாழடிக்கப்பட்ட தீவுகளிலிருந்து வரும் அகதிகள் ஒரேமாதிரியான கதை சொல்வர். கப்பலைக் கண்டிருக்கிறார்கள், ஆனால் எவரும் வோலை நேரில் பார்த்ததில்லை ... தீவுகளில் தீய நோக்குடைய மனிதர்களுடம் உயிரினங்களும் பல இருந்தும், பயிற்சியின் போது அஹிம்சா நோக்கு கொண்டமையால் இம்மாதிரி கதைகளில் அதிக கவனம் கொள்ளவில்லை. முயற்சிக்கப்படாத தனது ஆற்றலை அறிந்தவனாய்'இந்தத் தீவை என்னால் பாதுகாக்க முடியும்' என்று எண்ணியவனாய் வனம் திரும்பினான். ஒக், ஆல்டர் மர இலைகளினூடே காற்றின் சப்தம், அடிமரம், தளிர், மெல்லிய கிளைகள் இவற்றின் வளர்ச்சியின் தாளகதி, இலைகளில் பாய்ந்து சுவைகாணும் சூரிய ஒளி அல்லது வேர்களைச் சுற்றியுள்ள கரிய நிலத்தடி நீர் - அவையெல்லாம் இப்பொழுது எங்குள்ளன? மரங்கள், அவனது பழைய சகாக்கள், வோல் அனைத்தையும் அழித்து விட்டானா?

விழித்தெழுந்து நின்ற ஃபெஸ்டின் உறுதியுடன் தனது வலக்கரம் கொண்டு இரு அகன்ற அசைவுகளுடன் ஒரு பெயரை உரக்கக் கூவினான். அப்பெயரானது மனிதனால் செய்யப்பட்ட எல்லாக் கதவுகளின் தாழ்களை சிதறடிக்கவல்லது. ஆனால் இச்சுவர்கள் இரவுடன் சூல்கொண்டு அசைக்க இயலாததாகி இதைக் கட்டியவனின் பெயரைத் தவிர, கேட்கவைக்க இயலவில்லை. அந்தப் பெயர் திரும்பத் திரும்ப எதிரொலித்துக் காதுகளை அறைந்தது. முழங்காலிட்டு வீழ்ந்த பெஸ்டின் எதிரொலி அடங்கும் வரை காதுகளை இறுகப் பொத்திக் கொண்டான். பின் தாக்குதலால் தடுமாறி அமர்ந்த அவன் தியானித்தான்.

அவர்கள் கூறியது சரி. வோல் பலசாலிதான். தனது சொந்த மண்ணில் மந்திர பாதாளச் சிறையில் வோலின் மாயாஜாலம் எந்த ஒரு நேர்த்தாக்குதலையும் தாங்கக் கூடியதே. மேலும் மந்திரக்கோலின் இழப்பினால் பெஸ்டினுடைய சக்தி பாதியாக்கப்பட்டது. ஆனால் அவனைச் சிறைப்பிடித்தவன் கூட பெஸ்டினின் முழு ஆற்றலையும் - முன் செலுத்தும் மற்றும் உறுமாறும் ஆற்றலை - அபகரிக்க இயலாது. எனவே இரட்டிப்பாக வலிக்கும் தனது தலையைத் தேய்த்தபடி உருமாறினான். சப்தமின்றி அவனது உடல் உருகி நுண்ணிய மூடுபனி மேகமாக மாறியது. சோம்பலாக தடம் கண்டு மேலெழுந்தது. பிசுபிசுக்கு ஈரச் சுவர்களை ஒட்டி பயணித்தது.



படிப்பகம்

www.padippakam.com

மேல்வளைவும் சுவரும் சந்திக்குமிடத்தில் மயிரிழை பிளவு காண அதன் வழியாக துளித்துளியாக கசிந்து வெளியேறியது. ஏறத்தாழ அனைத்தும் பிளவு மூலம் வெளியேறும் போதில், சூடான காற்று உலைக்களத்திலிருந்து பீறிட்டது போன்று ஒன்று தாக்கி மென்பனித் துளிகளை சிதறடித்து உலர்த்தியது. அவசர அவசரமாக மென்பனி தன்னை சிறைப் பெட்டகத்தினுள்ளே திரும்ப உறிஞ்சிக் கொண்டது. பெஸ்டினின் சுயரூபமாக சுருண்டு மூச்சு வாங்கிக் கிடந்தது. அஹிம்சையாளனாக சுயமையம் உள்ள பெஸ்டினுக்கு உருமாற்றம் உணர்வு பூர்வ உளைச்சலாகும். இந்த உளைச்சலுடன் மனிதத் தன்மையற்ற உருமாற்றத்தில் சாவை எதிர் கொள்ளும் அனுபவம் சேர்ந்தது கொடூரமானதே. பெஸ்டின் சற்று நேரத்திற்கு வெறுமனே மூச்சுவிட்டுக் கிடந்தான். தன் மேலேயே அவனுக்குக் கோபம். பனியாக வெளியேறுதல் என்ற எளிய எண்ணம் சர்வ சாதாரணமானது தான். எந்த ஒரு முட்டாளும் அறிந்த யுக்தி அது. அநேகமாக வோல் சுடுகாற்றை அங்கே காக்க வைத்திருக்கக் கூடும். பெஸ்டின் தன்னைக் கரியசிறி ய வெளவாலாகத் திரட்டிக்கொண்டு விதானம் வரை பறந்து மெல்லிய காற்றோடையாக பிரிவின் மூலம் கசிந்து வெளியேறலா-னான். இத்தடவை முற்றிலுமாக வெளிவந்து மென்மையாக விசிறிக் கொண்டு ஹாலில் சன்னலை நோக்கிச் செல்கையில் கூர்மையான அபாய உணர்வு பெற்று படக்கென்று முதலில் மனதில் பட்ட சிறிய தங்க மோதிரமாக உருமாறினான். சன்னல் வழியாக வந்த ஆர்கடிக் சூறாவளிக்காற்று தற்போதைய உருவ அமைப்பைப் பரவலாக்கிவிடும் நினைக்க இயலாத பெருங்குழப்பம் மோதிர வடிவை மெல்லிதாக நடுங்க வைத்தது. புயல் கடக்கையில் அடுத்த எந்த உருவம் எடுத்து சன்னலிலிருந்து விரைவாக வெளியேறலாம் என அதிசயித்து பளிங்குத் தரையில் கிடந்தான்.

அவன் உருள ஆரம்பிப்பதற்குள் காலம் கடந்துவிட்டது. பூதாகரமான முகமற்ற கூனல் அரக்கனொருவன் நிலமதிர நடந்து வந்து வேக உருளலைத் தனது பெரிய சுண்ணாம்பு போன்ற கைகளால் தடுத்துப் பிடித்து எடுத்தான். பீடு நடை போட்டு விரைந்து சென்று கதவுப் பொறியின் இரும்புக் கைப்பிடி திறந்து குதூகல முணுமுணுப்புடன் பெஸ்டினை திரும்ப இருட்டுக்குள் போட்டான். நாற்பதடி உயரத்திலிருந்து 'க்ளிங்' என்ற சப்தத்துடன் கல்தரையி ல் விழுந்தான்.

சுய உருவம் திரும்பப் பெற்ற பெஸ்டின் வருத்தம் தோய முழங்கை சிராய்ப்புகளைத் தேய்த்தபடி எழுந்தமர்ந்தான். வெறும் வயிற்றில் இவ்வளவு உருமாற்றம் போதும் போதும் என்றாகியது. மந்திரக்கோலுக்காக விரக்தியுற்றான். அது இருந்தால் எவ்வளவு உணவு வேண்டுமானாலும் வரவழைக்கலாம். தனது வடிவத்தை உருமாற்றவோ சிலமந்திரம் போடவோ இன்னபிற ஆற்றல்களை வெளிப்படுத்தவோ முடியுமெனினும் ஸ்தூல பொருட்களை உருமாற்றவோ வரவழைக்கவோ முடியவில்லை - மின்னலையோ அன்றி ஆட்டுக்கறியையோ.

'பொறுமை பொறுமை' தனக்குள் சொல்லியபடி ஆசுவாசப்படுத்திக் கொண்டு தனது உடம்பை மெல்லக்கரைத்து எண்ணெயில் ஆட்டுக்கறி வறுக்கையில் உண்டாகும் அருமையான மணமாக மாறி மேலெழுந்து,


படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் அதே பிளவின் மூலம் வெளியேறினான். கூன் அரக்கன் சந்தேகத்துடன் முகர்ந்து கொண்டிருக்கையில் அனைத்தையும் சேர்த்திழுத்துக் கொண்டு பருந்தாக சன்னலை நோக்கிப் பறந்தான். கூன் அரக்கன் தாவிப்பிடிக்க முயன்ற ஒருசில அடிகளில் தவறவிட்டு வெடித்த கற்குரலில் 'கழுகு கழுகு அந்தக் கழுகைப் பிடி' என்று அலறினான்.

மந்திரக் கோட்டையிலிருந்து மேற்கே தனது அடர்ந்த கானகம் நோக்கி பெஸ்டின் பறந்தான். சூரிய ஒளியும் கடல்பிரதிபலிப்பும் கண்களைக் கூசவைத்தன. காற்றினூடே கடுகிச் செல்கையில் வேறொரு அதிவேக அம்பு அவனைத் தாக்கியது. அலறியபடி வீழ்ந்தான். சூரியன், கடல்கோபுரம் சுழன்றன. நினைவிழந்தான்.

இருட்டுச்சிறையின் ஈரத்தரையில் விழித்தான். அம்பு தோளைத் துளைத்ததால் ஆன ரத்தம், முடி கைகளை உதடுகளை நனைத்திருந்தது. காயத்தை மூட மந்திரித்தான். இப்போதைக்கு எழுந்து உட்கார முடிந்தது. குணமாக்க திரும்ப ஆழ்ந்து மந்திரித்தான். ஆனால் கணிசமான ரத்தசேதம் கூடவே ஆற்றலிழப்பு. எலும்புக் குருத்துகளில் நடுக்கம் குடிகொண்டது. குணமாக்கவல்ல மந்திரம் கூட நடுக்கத்தை நிறுத்த முடியவில்லை. புறத்தே நெருப்புக் கோளத்தால் வெளிச்சம் உருவாக்கியும் கண்களுக்கு ஏதும் புலப்படவில்லை. பறந்து செல்கையில் பார்த்த அதே கரியமூடுபனி - அவனது கானகத்தில் மீதும் அவனது நாட்டின் சிறிய நகரங்கள் மீதும்.

நாட்டைக் காப்பாற்ற வேண்டியது அவனைப் பொறுத்தது தான்.

மறுபடியும் நேர்த்தப்பித்தலை முயற்சிக்கலாகாது. மிகுந்த பலவீனமாய் சோர்வாயும் உள்ளது. தனது ஆற்றலை அளவுக்கதிக மாக நம்பி சக்தி இழந்தாயிற்று. இனி எந்த ஒரு உருவம் எடுத்தாலும் மேலும் பலகீனமாகி சிக்கிவிடக்கூடும்.

குளிரால் நடுங்கியபடி நெளிந்தான். நெருப்புக்கோளம் தனது இறுதி மித்தேன் வாயுவை விட்டபடி அகன்றது. மனக்கண்ணில் வாயுவின் மணம் காட்டின் எல்லையிலிருந்து கடல் வரையிலான தாழ்வான விரிந்த சதுப்பு நிலப்பரப்பு. மனித சஞ்சாரமற்ற அந்நிலப்பரப்பில் அன்னப் பறவையர் தரைமேவின பறப்பு. இடையே இன்னமும் குளங்களும், சட்டெனத் தென்படும் கோரைப்புல் தீவுகள் சிற்றோடைகளின் கடல் நோக்கிய அமைதிப் பயணம், ஆஹா! அந்த ஓடைகளிலொன்றில் ஒரு மீனாக; அல்லது இன்னும் மேலே மேல்நீரோட்டமாக, நீரூற்றுகளின் அருகே, கானகத்தில் மரங்களின் நிழலில், ஆல்டர்மரத்தின் வேர்களின் அடியே உள்ள நெளிந்த பழுப்பு நிற நிலத்தடி நீரிலே, ஒளிந்து ஒய்வு ...

இதுதான் மாயாஜாலத்தின் சிகரம்; மகத்தான சாதனை. பெஸ்டின் இதைச் சாதித்தான். எந்த ஒரு மனிதனையும் விட நாடு கடத்தப்பட்டோ, ஆபத்திலிருக்கையிலோ தனது வீட்டின் மண்ணுக்கும் நீருக்குமான ஏக்கம். தலை உயர்த்தி சன்னலினூடே ஆவல் ததும்பிய தனது பார்வையில், சாப்பிட்ட மேஜை, தனது படுக்கையறை, சன்னலுக்கு வெளியே மரக்கிளைகள் - கனவு தான் இவைகளைக் கொண்டு வரும். இவையன்றி பெஸ்டின் சாதித்திருந்தான், மாபெரும் கீழ்த்திசை ஞானிகள் இல்லம் சேரும் ஜாலத்தை உணர்ந்திருந்ததை



படிப்பகம்

www.padippakam.com



.எலும்புக்குருத்திலிருந்த குளிர் ஊர்ந்தபடி நரம்புகள் நாளடங்களுடே வெளிவர கரிய சுவர்களுக்கு நடுவே பெஸ்டின் நின்றிருந்தான். தனது மனோபலமனைத்தையும் திரட்டி இருண்ட சதைகளில் தீபஒளி மிளிர அந்த மகா மௌன ஜாலத்தை செயல்படுத்தத் துவங்கினான்.

சுவர்கள் மறைந்தன. அவன் பூமியில் இருந்தான். பாறைகளும் கிரானைட்டின் நாளங்களும் எலும்புகளாகவும், நிலத்தடி நீர் ரத்தமாகவும், நிகழ்வுகளின் வேர்கள் நரம்புகளாகவும் அவனிருந்தான். முன்னும் பின்னும் இருண்டிருக்க மெதுவாக ஒரு குருட்டுப் புழுபோல மேற்கு நோக்கிப் பயணித்தான். உடனே அவனது முதுகிலும் வயிற்[?]லும் மெல்லிதய, தடைகளற்ற, விரயமற்ற குளுமை தழுவியது. தன் பக்கங்களில் அந்த நீரை அருந்தியதில் மின்னோட்டத்தை உணர்ந்தான். தனது இமையில்லாக் கண்களில் ஆல்டர் மரத்தின் ஆணிவேர்களுக்கு இடையே ஆழ்ந்த பழுப்புக் குளத்தைக் கண்டான். முன்னேறி புள்ளியாள் மின்னி நிழலில் மறைந்து வீடுவந்து சேர்ந்தான் - விடுதலையாகி.

தெளிந்த ஊற்றிலிருந்து ·காலவரம்பின்றி ஓடிய நீரை விட்டபடி அக்குளத்தின் மணலில் கிடந்தான் பெஸ்டின். குணப்படுத்தக் கூடிய எந்த ஒரு மந்திரிப்பையும் விட பலமாக அவனது காயத்தைக் குணப்படுத்திய அக்குளுமை, முன்னர் கொண்டிருந்த அந்த முகமற்ற குளிரை அலம்பியது. அட, எவரின் நடமாட்டம் அவனது காட்டினில்? மீண்டும் உருமாற மிகவும் சோர்வான நிலையில் தனது பளிச்சிடும் உடலை ஆல்டர் மரவேர் வளைவின்


படிப்பகம்

www.padippakam.com

அடியில் ஒளித்துக் காத்திருந்தான்.

பெரிய சாம்பல் நிற விரல்கள் நீரில் மணலை சிலிர்த்தபடி துழாவியது. மங்கலான ஒளியில் நீருக்கு மேலே அடையாளமற்ற முகங்கள், வெறித்த கண்கள் தோன்றி மறைந்து தோன்றின. சுய உருவம் பெற வேண்டிய மட்டும் போராடியும் முடியவில்லை. அவனது வீடு சேரும் மந்திரமே அவனைக் கட்டிப் போட்டிருந்தது. வலையில் நெளிந்தான், வறண்ட பிரகாசமான பயங்கரக் காற்றில் திணறினான், கடும் வலி அதிகரிக்க அதற்கப்பால் எதுவும் அறிந்திலன்.

வெகு நேரத்திற்குப் பின் சிறிதுசிறிதாக பிரக்ஞை வந்தபோது திரும்ப மனித ரூபத்திலிருந்தான். தகிக்கும் கசப்பான திரவமெதையோ வலுவில் தன் தொண்டைக்குள் ஊற்றப்படுவது கண்டான். காலம் மறுபடியும் பிசகியது. திரும்ப அவன் எதிரியின் கட்டுப்பாட்டில் இருந்தான் என்பதை இருட்டுச் சிறையில் தலைகுப்புறப் படுத்துக் கிடந்தபடி அறிந்தான். மூச்சுவிட முடிந்த தெனினும் சாவு நெடுந்தொலைவிலொன்றும் இல்லை.

நடுக்கம் உடல் முழுக்க விரவியிருந்தது. உடலை அசைத்தபொழுது விலாவிலும் முன்கையிலும் வலி குத்தியது. வோலின் சேவகத்திலுள்ள கூலி அரக்கர்கள் அவனை இங்கே கொண்டு வருகையில் நசுக்கியிரு க்கக்கூடும். உடைந்து சக்தியின்றி இரவின் கிணற்றடியில் கிடந்தான். உருமாற ஆற்றலெதுவும் இல்லை. வெளியேற வழியில்லை, ஒன்றைத் தவிர. வலியின் எல்லைக்கருகில் அசைவற்றுக் கிடந்த அவன் எண்ணினான்.

என்னை ஏன் அவன் கொல்லவில்லை? ஏன் உயிருடன் வைத்திருக்கிறான்?

ஏன் அவன் தென்படவில்லை? எந்தக் கண் கொண்டு அவனைக் காண்பது? எதில் அவன் நடக்கிறான்?

அவன் பயப்படுகிறான், நான் பலமற்றிருந்தும்.

அவன் தோற்கடித்த அனைத்து மாயாவிகளையும், ஆற்றல்மிக்க மனிதர்களையும் உயிருடன் இம்மாதிரி கல்லறைகளில் அடைக்கப்பட்டிருப்பதாக, விடுதலைக்கு முயற்சித்தபடி வருடக் கணக்கில் வாழ்வதாக சொல்லப்படுகிறது. ஆனால் எவனொருவன் வாழ்வைத் தேர்ந்தெடுக்காவிட்டால்?

எனவே பெஸ்டின் தேர்வை முடிவு செய்தான். எனது முடிவு தவறாயின் நானொரு கோழை என மனிதர் கருதுவர் என்பதே பெஸ்டினின் இறுதி எண்ணமாகும். பக்கவாட்டில் சற்றே தன் தலையைத் திருப்பி, கண்கள் மூடியிருக்க இறுதி மூச்சிழுத்து, கட்டற்ற அந்த வார்த்தையை, ஒரு தடவை மட்டுமே பேசப்படுகின்ற ஒன்றை முணுமுணுத்தான்.

இது உருமாற்றமல்ல; அவன் மாறவில்லை. அவன் உடம்பு, நீண்ட கால்களும் அறிவார்த்தக் கைகளும், மரங்களையும் ஓடைகளையும் விரும்பிக் கண்ட கண்களும் அசைவற்று - துளிக்கூட அசைவற்று - மிகக் குளிர்ந்து மாறாமல் கிடந்தன. மாயாஜாலத்தால் கட்டப்பட்ட சிறை மறைந்தது. அறைகளும் கோபுரங்களும் மறைந்தன. அந்தக் கடலும், வனமும், மாலைநேர வானும் மறைந்தன. அனைத்தும் மறைந்தன. பெஸ்டின், இருப்பின் தூரத்து மலைச்சரிவில் புதிய நட்சத்திரங்களடியில் மெல்ல பயணித்தான்.


படிப்பகம்

www.padippakam.com



ஒரு தீபஒளிபோன்று இருட்டிலே பரந்துபட்ட நிலப்பரப்பினூடே சென்றவன் தனது வாழ்வில் மாபெரும் ஆற்றலைப் பெற்றிருந்தான். இங்கு அதை மறக்கவில்லை. நினைவு வந்தவனாக தனது எதிரியின் பெயர் சொல்லி அழைத்தான்.

'வோல்'

அழைப்பைத் தாங்கவொண்ணாமல் அடர்ந்த வெளிறிய நஷத்ரஒளி உருவில் வோல் அவனை நோக்கி வந்தான். பெஸ்டின் அணுகுகையில் மற்றது எரியூட்டப்பட்டது போன்று பயத்தால் குறுகி ஊளையிட்டது. அவன் ஓடி ஒளிகையில் மிக அருகாமையில் பெஸ்டின் தொடர வெகுதூரம் சென்றனர். பெயரிடப்படாத நஷத்திரங்களைத் தொடுமளவு கூம்புகளைக் கொண்ட வறட்டுத் தீக்குழம்புகள் வழியும் நெடிய எரிமலைகளினூடே, மௌனமான மலை முகடுகளினூடே, குட்டையான கறுப்புப் புற்களைக் கொண்ட பள்ளத்தாக்கினூடே, நகரங்களினூடே கடந்து சென்றனர். கீழே வெளிச்சமில்லா தெருக்களுக்கிடையேயான வீடுகளின் சன்னலூடே யாரும் பார்க்கவில்லை. நஷத்திரங்கள் வானில் தொங்கின. எவையும் நிலைபெறவில்லை; எழவில்லை. இங்கு எவ்வித மாற்றமுமில்லை. நாளெதுவும் வராது. அவர்கள் சென்றுகொண்டே இருந்தனர். முன்னொரு காலத்தில் ஒரு நதி ஓடிய இடத்திற்குச் சென்றடையும் வரை பெஸ்டின் எப்பொழுதும் தன்முன்னே செல்பவனை விரட்டியபடியே சென்றான். வாழ்நிலங்களிலிருந்து வந்த நதி அது. அந்த வறண்ட நதியின் நீர் அரித்த பாறை இடுக்குகளிடையே சடலமொன்று கிடந்தது. நிர்வாணமாக, மரணம் அறியாத நஷத்திரங்களை வெறித்தபடி நிலைகுத்திய கண்களுடன் வயோதிகனின் சடலமது.

'உள்ளே போ' பெஸ்டின் ஆணையிட்டான். வோல் நிழல் ஹீனமாய் உடைந்து முனக பெஸ்டின் அதன் அருகே சென்றான். வோல் கூனிக்குறுகி நகர்ந்து வளைந்து தனது சடலத்தில் திறந்த வாயில் நுழைந்தான்.

சடலம் உடனடியாக மறைந்தது. சுவடுகளற்று, களங்கமற்று வறண்ட பாறையிடுக்குகள் நஷத்திர ஒளியில் பளிச்சிட்டன. பெஸ்டின் சிறிது நேரம் அசையாது நின்றான். பின்னர் மெதுவாகப் பெரிய பாறைகளுக்கிடையே ஓய்வெடுக்க அமர்ந்தான். ஓய்வுதான் தூக்கமல்ல; வோலின் உடலைத்திரும்ப அதன் கல்லறைக்கு அனுப்பி, சாம்பலாக்கி, தீய ஆற்றலை அழித்து காற்றால் சிதறடிக்கப்படும் வரை, கடல் புரத்தை மழை கழுவும் வரை இந்த இடத்தைக் காவல் காத்தாக வேண்டும். ஒரு சமயம் சாவு மற்றொரு நிலம் கண்டு திரும்பிய இந்த இடத்தைக் கண்காணித்தாக வேண்டும். இப்பொழுது பொறுமையுடன் - எல்லையற்ற பொறுமையுடன் - கடல் எல்லையற்ற நாட்டின் இனி என்றுமே ஓடாத நதியின் பாறைகளிடையே காத்திருந்தான், இன்னமும் மேலே நிலைகொண்டிருந்த நஷத்திரங்களைக் கவனித்தபடியே. ஓடைகளின் குரல்களையும், உயிர்க்கானகங்களின் இழைகளில் மீதான மழையின் சப்தங்களையும் மெல்ல மிக மெல்ல மறக்க ஆரம்பித்தான்.

தமிழில்: ரஞ்சித் புத்திரன் ராமஸ்வாமி


படிப்பகம்

www.padippakam.com



# இரத்தினச் செருப்புகளின் ஏலத்தின் போது

சல்மான் ருஷ்டி

மாயச் செருப்புகளை ஏலத்தில் எடுப்பதற்காகக் கூடியிருப்பவர்களை, ஒரு விற்பனையகத்தின் வழக்கமான கூட்டத்தோடு ஒப்பிட்டால் சிறிதளவே ஒற்றுமையைக் காணலாம். ஏலம் விடுபவர்கள், எல்லா விதமான வருகையாளர்களையும் எதிர்பார்த்து, ஏல நிகழ்ச்சியை விரிவாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். இது போன்ற ஏலங்களில் இப்பொழுதெல்லாம் மக்கள் அரிதாகவே கலந்து கொள்கிறார்கள். ஏலம் விடுவோர், தாங்கள் வழங்குகின்ற பரிசு புதைவிடங் களிலிருந்து நம்மை இங்கே உந்தித் தள்ளிக் கொண்டுவந்து விடும் என்று சரியாகவே நம்புகிறார்கள். உயர்ந்தபட்ச உணர்வுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. மிகவும் கவனத்துக் குரிய மனிதர்களுக்குச் சௌகர்யமும் பாதுகாப்பும் வழங்கப்படுவதற்காகச் செய்யப்பட்ட விசேஷ ஏற்பாடுகளுடன், உடல் நலம் குன்றியவர் களுக்காகவே முன் அறைகளிலும் கழிவறை களிலும் பெரிய அளவுள்ள எச்சிற்பணிக்கங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. மனநோயாளி களுக்கு அறிவுரை கூறுவதற்காக, செயல் நுட்பத்தோடு கட்டப்பட்ட நவ-கோதிக் பாணியிலான பாவ மன்னிப்பு சாவடிகளில், உளவியல் மருத்துவர்களின் குழுக்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

தற்காலத்தில் நம்மில் பெரும்பாலோர் நோயாளிகளே.

பாதிரியார்கள் யாரும் இல்லை. ஏலம் விடுவோர் ஒரு கோடு வரைந்து வைத்திருக் கிறார்கள். மனமுறிவு கொண்டவர்களையும் பைத்தியம் பிடித்தவர்களையும் தேற்றுவதற்காக, கோட்டுக்கு அந்தப்பக்கம், தங்களுக்குப் பரிச்சயமான கட்டிடங்களில் பாதிரியார்கள் தங்கி இருக்கிறார்கள். உணர்ச்சி வேகத்தின் விளைவாக எதிர்பாராத ஜனனம், மரணம், ஏற்பட்டால் கவனிக்கவென்று பேறுகால மருத்துவர்களும் தலைக்கவசம் அணிந்த

## SALMAN RUSHDIE

**உலக அளவில் பரபரப்பாகப் பேசப்பட்ட 'சாத்தானின் கவிதைகள்' நாவலைத் தந்த ருஷ்டி இன்றைய இலக்கிய உலகத்தின் சமூக மத அரசியல் பாதிப்பின் உதாரண புருஷராக விளங்குகிறார்.**

**MID Night Children நாவலுக்கு புக்கர் பரிசு கிடைத்தது மட்டுமல்லாமல் சென்ற ஆண்டு புக்கர் ஆப் த புக்கர் (இதுவரை புக்கர் பரிசு வாங்கியவற்றுள் சிறந்த நாவல்) பரிசு இதே நாவலுக்கு வாங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.**

**East West என்கிற அவரது சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட இந்தக்கதை, உலக அளவில் தரமான ஆங்கில இலக்கிய இதழான GRANTA, பத்து இளைய பிரிட்டிஷ் நாவலாசிரியர்கள் என்ற தொகுப்பை பத்து வருடங்களுக்கு முன் வெளியிட்டபோது இவரை பிரதிநிதித்துவப் படுத்த வெளியிட்ட கதை இது. இந்தக் கதைக்குள் சிண்ரெல்லாவின் செருப்பு களும், WIZARD OF OZ என்ற குழந்தைக் கதை விஷயங் களும் Inter text ஆக இயங்கு வதை உணர முடியும்.**

**இவரது தீவிரமான இயங்குதளத்தின் செயல்பாடு கள், உலகத்தின் கவனத்தை இந்திய ஆங்கில நாவல்கள் பக்கம் திருப்பி, அதற்கொரு அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்திருப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.**



படிப்பகம்

www.padippakam.com

போலீஸ்காரர்களும் கண்ணுக்குத் தென்படாத விதமாக அருகிலுள்ள தோட்டப்பாதைகளிலும் சந்துகளிலும் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஏல விற்பனையோடு சம்பந்தப்பட்டவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களின் தொடர்பு எண்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பேதலித்தவரை கட்டிப்போட ஏராளமான சாதனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

பாருங்கள்: குண்டு துளைக்காத கண்ணாடிக்கு மறுபுறம் இரத்தினச் செருப்புகள் மின்னுகின்றன. அவற்றின் சக்தியின் எல்லை நமக்குத் தெரியாது. அப்படியொரு வரம்பே இல்லாமலிருக்கலாமெனவும் நாம் சந்தேகிக்கிறோம்.

ஏலம் எடுப்பவர்களுக்கு நடுவே பளபளப்பான, மினுக்கும் வேலைப்பாட்டுடன் ஒளிவட்டமிடும் நகைகளை அணிந்து வந்துள்ள சினிமா நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். செயல்முறை மனோசக்தி கொண்ட மேதைகளுடன் இணைந்து கூட்டாகத் தயாரிக்கப்பட்ட, சினிமா நட்சத்திரங்களுக்கான நகைகள் பிளாட்டினமாக, தங்கமாக, வெள்ளியாக மற்றும் வெண்கலமாக பிரபை காட்டுகின்றன. வில்லன் பாத்திரங்களில் மட்டுமே நடித்துக்கொண்டிருக்கும் குறிப்பிட்ட சில நடிகர்கள் வெளிறிய நீலப்பச்சை, மஞ்சள் மற்றும் மைச் சிவப்பு போன்ற வண்ணங்களில் சூனியப் பிரபை காட்டும் நகைகளை அணிந்திருக்கிறார்கள். நம்மில் யாரேனும் ஒரு சினிமா நட்சத்திரத்தின் (எளிதில் நசுங்கிவிடக்கூடிய) நகையைத் தொட்டுவிட்டால் பாதுகாப்புப் படையினரால் உடனே அடித்துக் கீழே வீழ்த்தப்பட்டு கட்டை வண்டிக்கு இழுத்துச் செல்லப்படுவார்கள். பிரமாண்டமான விற்பனையகத்தில் நெரிசல் ஏற்பட்டுவிடாமல் தவிர்க்க இது போன்ற நிகழ்வுகள் உதவுகின்றன. பிரபலமானவர்களான, போதை மருந்தில் மூழ்கியவர்கள் சிலர் ஊகிக்கத்தக்க சக்தியோடு வெளிப்படுகிறார்கள்; அவர்களில் ஒருத்தி திடீரென செருப்புகள் உள்ள கண்ணாடிக் கூண்டிற்குத் தலையைச் சாய்த்து, தவிக்கும் உதடுகளால் முத்தமிடுகிறாள்; இதுபோன்ற வீர வழிபாட்டின் சார்பு நிலையான ஆபத்தின்மை குறித்து தங்கள் நிகழ்ச்சியாளர்களால் கற்றுக் கொடுக்கப்படாத அப்போதைய பாதுகாப்பு அமைப்பு, கண்ணாடியை முத்தமிட்ட அந்த சதையாலான உதடுகளில் லட்சம் வோல்ட் மின்சாரத்தைப் பாய்ச்சி, அடுத்த நிகழ்வுகளின் மீதான அவளது ஆர்வத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

அது ஒரு துக்ககரமான, அருவருப்பான கணம்; ஆனால் இதே போன்ற போற்றுதலின் தற்கொலை நடவடிக்கையில் இன்னொருவனும் இறங்குவதை இது தடைசெய்யவில்லை. இந்த முட்டாள் மனிதன், முதலாவதாக இறந்தவளின் காதலன் என்று நாம் அறிந்து கொள்ளும் பொழுது, காதலின் புதிர்களைக் கருதி நாம் அதிசயிக்கிறோம்; நறுமணம் வீசும் கைக்குட்டையை எடுத்து ஒற்றிக்கொள்கிறோம்.

இரத்தினச் செருப்பு வழிபாடு உச்சமடைகிறது. அலங்கார ஆடைகளின் போட்டி தீவிரமாக இருக்கிறது. ஓஜ் நாட்டு மந்திரவாதிகள், சிங்கங்கள், சோளக்கொல்லைப் பொம்மை மனிதர்கள் குறைவில்லாமல் நிறைகின்றன. நிற்பதற்கு இடமின்றி ஒருவரின் கால்களை ஒருவர் மிதித்துக்கொண்டு, நெருக்கியடித்துக் கொண்டிருக்கிறார்கள். தகர உடையணிவது மிகவும் அசௌகர்யமானதாகையால் ஓஜ் நாட்டு தகர மனிதர்களைப் போன்றவர்களைக் காணவில்லை. அதிக விலைமதிப்புடைய விலங்கு-மனித வடிவச் சிற்பத் தூபிகளின், பால்கனியில், காலரியில் என



படிப்பகம்

www.padippakam.com

மாபெரும் விற்பனையகத்தின் பல பகுதிகளில் குனியக்காரிகள் தங்களுடைய நேரத்துக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறார்கள். ஒரு மூலையில் சொர்க்கத்து தேவதைகள் நிறைந்திருக்கிறார்கள்; அவர்களில் பலர் மிகுந்த ஆவலுடன் உடலுறவில் ஈடுபட்டிருக்கிறார்கள் பொது இடத்தில் தொல்லைகள் விளையாமல் தடுக்க, ரப்பர் கையுறையணிந்த காவலாளி உடலுறவில் ஈடுபட்டுள்ளவர்களைப் பிரிப்பதற்காக அவர்களாலேயே நியமிக்கப்பட்டிருக்கிறான். ரொம்ப நேர்த்தியுடனும் ரசனையுடனும் அவன் இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். பொதுமக்களாகிய நாம் சுலபமாக, கொடூரமாகத் தாக்கப்படுகிறோம். தாக்கப்படுவது அடிப்படை மனித உரிமையென எடுத்துக் கொள்வது பற்றிச் சிந்திக்கும் அளவுக்குப் போய்விட்டோம். நமது கருத்துப்படி, நமது தார்மீக அடித்தளத்துக்குக் காரணமான நம் கோபத்தைவிடவும் சற்று உயர்வானதாகவே இதை மதிக்கிறோம். இந்த உயர்வான அடித்தளத்தில் நின்று நம் பகைவர்களைச் சுட்டுக் கொல்லவும், பயங்கரமான சேதங்களை விளைவிக்கவும் நம்மால் முடியும். கணநேரத்து உணர்ச்சிகளில் நாம் கர்வமடைகிறோம். நம் கோபம் உயர்ந்து, எல்லைகளுக்கும் அப்பால் செல்கிறது.

இரத்தினச் செருப்புகளின் புனிதக் கோயிலைச் சுற்றிலும் எச்சில் குளங்கள் உருவாக்கப்படுகின்றன. கட்டுப்படுத்தும் ஆற்றலின்றி, எச்சில் ஊறும் மனிதர்களாக இருக்கிறோம் நாம். லத்தீனிய வீரன் போன்று தோன்றும் காவலாளி ஒரு கையில் வாளியும் மறு கையில் தண்ணீர் வழிக்கும் துடைப்பமுமாக நம்மை நோக்கி வருகிறான். வெட்கப்படுவதற்கான அவனுடைய திறமையைப் போற்றுபவர்களாகவும் நன்றிக்கடன் மிக்கவர்களாகவும் நாம் இருக்கிறோம். நம் முகங்களுக்கு சேதமேதுமின்றி நமது எச்சிலைத் தரையிலிருந்து வழித்து எடுத்துச் செல்கிறான் அவன்.

நமது நீட்ஷேவிய சார்புநிலைப் பிரபஞ்சத்தில் உண்மையான அற்புதங்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்கள் வரம்புக்குட்பட்டவை. நடத்தையியல் தத்துவவாதிகளும் குவாண்டம் விஞ்ஞானிகளும் மாயச் செருப்புகளைச் சுற்றிக் கூடுகிறார்கள். கிறுக்கலான குறிப்புகளை எழுதுகிறார்கள்.

அசாத்தியத்தைக் காண்பதற்காக, நாடு கடத்தப்பட்டவர்களும் எல்லா விதங்களிலும் இடம் பெயர்ந்தவர்களும், வீடற்ற நாடோடிகளும் கூட வந்திருக்கிறார்கள். தங்கள் மறைவான குழிகளிலிருந்து வெளியே வந்து, கேலிப்பேச்சில் ஈடுபட்டும் துடிப்போடு செயல்பட்டும் வீடுகளைக் (கொள்ளையடித்து) காலி செய்தும் கடத்தலில் ஈடுபட்டும் வாழ்ந்தவர்களுக்கு தங்கள் குழலிசையால் அறைகூவல் விடுத்தார்கள். துர்வாடை வீசும் சணல் ஆடைகளை அணிந்த நாடோடிகள் வெண்மலர்ச் செடிகள் நிறைந்த, பிரம்மாண்டமான பானை வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு கத்திக்கொண்டே வருகிறார்கள். முதல்தரமான சமையல் கலைஞர்களின் அற்புதமான கைகளின் மேலிருந்த தட்டுக்களிலிருந்து மீன் முட்டைப் பொரியலைக் கைநிறைய அள்ளிக் கொள்கிறார்கள். நாடோடிகளின் குவளைகளில் கூட இல்லாத வலிதரும் ஆற்றல்கொண்ட உணவு வகைகளை அதிகமாகத் தின்கிறார்கள். போலீஸ் படை வருவிக்கப்பட்டு, ரப்பர்த் தோட்டாக்களும் மயக்கந்தரும் குச்சிகளும் கொண்டு ஒரு சிறிய யுத்தம் நடத்தப்பட்டு நாடோடிகள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள், மயங்க வைத்துத் துரத்தப்படுகிறார்கள். நகரத்தின் எல்லைகளுக்கு அப்பால்,


படிப்பகம்

www.padippakam.com

ப்ரம்மாண்டமான விளம்பரப் பலகைகள் சூழ்ந்துள்ள, மனிதர்களே இல்லாத, நாம் என்றுமே செல்வதற்குத் துணியாத இடத்தில் அவர்கள் குவிக்கப்படலாம். இரைதேடி வெறிநாய்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளலாம். இத்தருணங்கள் சமரசப்படுத்த முடியாதவை.


அரசியல் அகதிகள் ஏலத்துக்கு வந்திருக்கிறார்கள்: சதியில் ஈடுபட்டவர்கள், பதவியிழந்த முடியரசர்கள், தோல்வியடைந்த குழுக்கள், கவிஞர்கள், கொள்ளையர் தலைவர்கள். சென்ற வருடத்துக்குரிய வட்டத் தொப்பிகளையோ, கெட்டியான லென்ஸ்களைக் கொண்ட கண்ணாடிகளையோ, பெரிய கோட்டுகளையோ அணியாமல் இவர்கள் பட்டுச் சட்டைகளையும், வயிற்றுக்கு மேலே இறுக்கிக் கட்டுகின்ற ஜப்பானிய பாணி விருத்தக் கோமாளிகளைப் போல் பிரகாசமாகத் தோன்றுகிறார்கள். மிகச் சிறந்த சித்திர வேலைப்பாட்டுடன் அமைந்திருக்கிறது பெண்களுக்கான, பழந்தங்கநாணய வேலைப்பாடுகளமைந்த மேலாடை. ஒரு அழகி தன் முதுகில் ‘குவெர்னிகா’ ஓவியத்தை வரைந்து கொண்டு நடமாடுகிறாள்; ‘போரின் பேரழிவுகள்’ என்ற ப்ரான்ஸிஸ்கோ கோயாவின் மின்னும் ஓவியக் காட்சிகளில் சிலவற்றை அணிந்து கொண்டிருந்தனர் பலர். வெம்மைச் சுடர் வீசும் உடைகளை அணிந்திருந்த அரசியல் அகதிப் பெண் இரத்தினச் செருப்புகளின் பிரகாசத்தை மறைக்க இயலாமல், முணுமுணுத்துக் கொள்கின்ற நெருக்கத்துடனும் கால இடைவெளிகளூடேயான சுழன்று செல்லும் சாபங்களுடனும் காகிதக் கணைகளை ஏவியும், எதிரிலிருந்த தங்களுக்கு எதிர்மாறாக, நாட்டைவிட்டு ஓடிவந்தவர்களின் நடுவே, தங்கள் ஆண் தோழர்களுடன் நெருங்கி அமர்ந்திருக்கிறார்கள். நுழைவாயில்களுக்கு அருகில் நிற்கும் காவலாட்கள் வெறுமனே தங்கள் கனத்த சாட்டையைச் சுழற்றி வீசுகிறார்கள்; அரசியல்வாதிகள் சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கிறார்கள்.

நாம் இரத்தினச் செருப்புகளை வணங்குகிறோம், ஏனெனில்: சூன்யக்காரிகளால் நெருங்க முடியாதவர்களாக, அவை நம்மை மாற்றும் என்று நம்புகிறோம் (மேலும் இந்தக் காலத்தில் நிறைய மாயாஜால மந்திரவாதிகள் நம்மைப் பின் தொடர்கிறார்கள்); பழைய வடிவத்துக்கு மீண்டும் உருமாற்றும் ஆற்றல் கொண்டிருப்ப தால், மீண்டும் ஏற்படும் என்பதில் நம்பிக்கையிழந்த பழைய இயல் பான நிலைமையை மீட்பதாக உறுதியளிப்பதாகவும், மறுபடியும் அந்நிலைக்குத் திரும்பி விடலாம் என்று நம்பிக்கையூட்டுவதாகவும் உள்ளன மாயச் செருப்புகள்; மேலும் அவை கடவுள்களின் காலணிகளைப் போல ஜ்வலிக்கின்றன.

நாகரீகமடைந்த விற்பனையகம் ஒரு விரிவான, மன விசாலங் கொண்ட, சகிப்புத் தன்மையுள்ள தேவாலயமாக இருக்க வேண்டும் என்று வாதாடுகின்ற, அதே சமயம் ஏலம் விடுபவர்களின் எக்கச்சக்கமான தாராளத்தால் உள்ளே நுழைந்த, மத அடிப்படைவாதிகளிடமிருந்து மாயச் செருப்புகளை வழிபடுவதற்கெதிரான கண்டனம் கிளம்புகிறது. எரித்து விடுவதற்காகவே மாயச் செருப்புகளைத் தாம் வாங்க ஆர்வம் கொண்டிருப்பதாகவும், தாராளவாதக் கருத்துக் கொண்ட ஏலம் விடுபவர்களின் கண்ணோட்டத்தில் இது கண்டனத்துக்குரிய விஷயமாக இருக்காது என்றும் மத அடிப்படைவாதிகள் வெளிப்படையாகவே தெரிவித்தார்கள். சகிப்புத் தன்மையற்றவர்களும் சகித்துக் கொள்ளப்படாவிட்டால் சகிப்புணர்வு எதற்குப் பிரயோஜனம்? ‘பணம்


படிப்பகம்

www.padippakam.com



MONSIEUR செருப்பு விளம்பரம்

ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கிறது' என்று தாராளவாத ஏலம் விடுபவர்கள் அழுத்தமாகக் கூறுகிறார்கள்; 'யாருடைய பணமும் யாருடையதையும்போன்று நல்லபணந்தான்' பிரத்தியேகமான, புனிதமான மரத்தால் செய்யப்பட்ட மாடங்களில் இருந்து கொண்டு கண்டன உரைகளைத் தொடர்ந்தார்கள் மத அடிப்படைவாதிகள். அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்; ஆனால் ஆப்பின் முனை சிறுத்து இருப்பதன் அபாயம் பற்றி அனுபவஸ்தர் ஒருவர் பேசுகிறார்.

அனாதைக் குழந்தைகள் வந்திருக்கிறார்கள்; நிலத்திலே பயணம் செய்வது போன்று காலத்திலும் பின்னோக்கிச் சென்று விரும்புகின்ற காலத்தை அடையக் கூடியவை மாயச் செருப்புகள் என்று நம்புகிறார்கள் (ஏனெனில், நம் சமன்பாடுகள் நிரூபிப்பதைப் போன்று, இடத்தில் பெயர்ந்து செல்லும் இயந்திரங்களனைத்தும் கால இயந்திரங்களுமாகும்): புகழ்பெற்ற இநத்ச் செருப்புகளின் மூலம், மரணமடைந்த தமது பெற்றோர்களுடன் மீண்டும் இணைய முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

சந்தேகத்துக்குரிய மனிதர்களும் வந்திருக்கிறார்கள் தீண்டப்படாதவர்கள் மற்றும் சாதிகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்களிடம் பாதுகாப்புப் படையினர் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள்.

நமது தற்கால வேதனைகளில் சிதறிப்போன, சிதைந்து போன கருத்தாக மாறிவிட்டது 'வீடு' பற்றிய கருத்து. ஏக்கப்படுவதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன. வான்வில்களே அற்றுப் போய்விட்டன. ஒரு ஜோடி



படிப்பகம்

www.padippakam.com

மாயச் செருப்புகள் இவற்றை மாற்றிவிடும் என்று நாம் தான் எவ்வளவு எதிர்பார்ப்புக்கொண்டிருக்கிறோம்? நம்மை 'வீட்டுக்கு' எடுத்துச்செல்வதாக அவை வாக்களித்துள்ளன; ஆனால் 'வீட்டில் இருப்பது' என்ற உருவகம் அவற்றால் புரிந்து கொள்ளப்படக் கூடியவையா, அரூப நிலைகள் ஏற்றுக் கொள்ளப்படுமா? அவை தாராளவாதக் கருத்துக் கொண்டவையா? அல்லது 'வீடு' என்னும் புனிதமான வார்த்தையை மறுவரையறை செய்ய வேண்டுமா?

நாம் அதிகப்படியாகக் கேட்கிறோமா, எதிர்பார்க்கிறோமா?

புதிய சந்தேகங்களால், எண்ணற்ற தேவைகள் எழுந்து மின்சாரம் பாய்ச்சப்பட்ட கண்ணாடியில்போய் அழுந்திக்கொள்ள, கிரிம்மின் கதையில் வரும் பழங்காலத் தட்டை வடிவ மீனைப்போல, இந்தச் செருப்புகள் நமது வளர்ந்து வரும் தேவைகளைக் கண்டு அமைதியிழந்து, மீண்டும் அதிருப்தியின் பாதாளத்துக்கே கொண்டுபோய் விடுமா?

விற்பனையகத்தில் கற்பனை ஜீவிகளும் இருக்கின்றன. பளபளப்பான, தங்கமுலாம் பூசப்பட்ட சட்டங்களிலிருந்து திமிறிக்கொண்டு வெளியே வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆஸ்திரேலிய ஓவியங்களில் இருந்த குழந்தைகள். நீலவண்ண ஆடைகளும், கால்களையும் கைகளையும் மறைக்கும் சாக்ஸ்களையும் அணிந்திருந்த அவர்கள் மழைக்காடுகளையும் சிவப்பான பாலைவனங்களையும் வெறித்துப் பார்த்துவிட்டு, நடுங்குகிறார்கள்.

டிக்கன்ஸ் எழுதிய படைப்புக்களை, ஆயுதந்தரித்த பைத்தியக்காரனுக்கு நிரந்தரமாய் வாசிக்கும்படி சபிக்கப்பட்ட ஒரு இலக்கியக் கதாபாத்திரம், ஏலத்தொகையை எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்தது.

டெலிவிஷன் மானிட்டரில், ஜ்வலிப்பான விரல் நுனியோடு நிற்கும் வேற்று கிரக ஜீவராசியின் மெலிந்த உருவத்தைக் காண்கிறேன்.

இந்த நவ யுகத்தின் இறுதியில் பண்பாடு சிதைந்திருப்பதையே, இந்தக் கற்பனையான உலகம் நிஜ உலகத்தை ஊடுருவியிருப்பது காட்டுகிறது. சினிமாத் திரைகளிலிருந்து இறங்கி வந்து பார்வையாளர்களை மணந்து கொள்கிறார்கள் கதாநாயகர்கள். இதற்கு முடிவே இருக்காதா? மேலும் தீவிரமான கட்டுப்பாடுகள் தேவையா? அரசு செயல்படுத்தும் வன்முறை போதுமானதில்லையா? இது போன்ற பிரச்சினைகளை நாம் அடிக்கடி விவாதிக்கிறோம். கற்பனை மனிதர்களின் சுதந்திரமான, தங்குதடையற்ற இடமாற்றம் ஏற்கனவே சிதிலமாகிப்போன யதார்த்தத்திற்குள் ஊடுருவுவது நம்மில் பெரும்பாலோரால் எதிர்க்கப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. கொஞ்சம் பேர் மட்டுமே எதிர்த் திசையில் பயணம் செய்ய விரும்புவார்கள் (இது போன்ற ஊடுருவல்கள் அதிகரித்திருப்பதாக நம்பகமான அறிக்கைகள் கூறியபோதிலும்)

இந்தப் பிரச்சினைகளைச் சிறிது நேரத்துக்கு ஒதுக்கி வைக்கிறேன். ஏலம் தொடங்கப்போகிறது.

என் அத்தை மகள் கேல் பற்றியும், புணர்ச்சியின் போது சப்தமாக முனகுகின்ற அவளுடைய பழக்கத்தைப் பற்றியும் பேசுவது அவசியம் தான். வெளிப்படையாகச் சொல்கிறேன்; என் வாழ்க்கையில் அன்றும் இன்றும் காதலியாக இருப்பவள் கேல்; நாங்கள் பிரிந்துவிட்ட போதிலும் அவளுடைய



படிப்பகம்

www.padippakam.com

பாலுறவுகாலச் சப்தம் பற்றிய நினைப்பே என்னைச் சுலபமாக உணர்ச்சிவசப்பட வைத்துவிடுகிறது. எங்கள் புணர்ச்சியில் இந்த சப்தம் தவிர வேறெதுவும் இயல்புக்கு விரோதமாக இருக்கவில்லை, 'கற்பிதமானதாக' இருக்கவில்லை என்பதையும் சொல்லியாக வேண்டும். அவளுக்குள்ளே நான் நுழையும் கணங்களில் அவள் பின்வருமாறு கத்துகின்ற போது அது எனக்கு ஆழ்ந்த திருப்தியை ஏற்படுத்துகிறது: 'வந்தாச்சு, பையா... வந்தாச்சு, குழந்தே, ஆமாம் - நீ சரியான இடம் வரை வந்துவிட்டாய்...

சொல்வதற்கு வருத்தமாக இருக்கிறது; ஒரு நாள், நான் வீட்டுக்குத் திரும்பிய பொழுது, குகைமனிதனைப் பற்றிய திரைப்படத்திலிருந்து தப்பி வந்தது போன்ற அடர்த்தியான ரோமங்களைக் கொண்ட ஒருவனுடைய கைகளில் அவள் இருப்பதைக் கண்டேன். புயற்காற்றின் உடையணிந்த கேலின் உருவப் படத்தையும், நிமிடத்துக்கு 78 சுற்றுக்கள் கொண்ட பழைய பேட் பூனின் இசைத் தட்டுக்களையும் பையில் எடுத்துக் கொண்டும் அன்றே வீட்டை விட்டு வெளியேறி தெருவில் அழுதுகொண்டே நடந்து விட்டேன்.

இது பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது.

கேல் என்னை ஊமையாக்கியதற்கப்புறம், ஒரு கால அவகாசத்துக்குப் பின்பு, நான் கசப்படைந்திருந்தேன்; அவள் தனது பதினான்காவது வயதிலேயே பழுதடைந்திருந்த, ஓவியம் தீட்டும் போது பயன்படுத்தும் குச்சியால் தற்செயலாகக் கன்னிமையை இழந்துவிட்டாள் என்று எங்கள் சமுதாய வட்டத்தில் வெளிப்படுத்தினேன்; ஆனால் பழிவாங்கும் உணர்ச்சி என்னை நீண்ட நாட்களுக்குத் திருப்திப் படுத்தவில்லை.

அப்போதிருந்து என்னை அவளுடைய நினைவுகளுக்கு அர்ப்பணித்து விட்டேன். அவளுடைய கோயிலில் என்னையே ஒரு மெழுகுவர்த்தியாக்கிக் கொண்டேன்.

பிரிவிலும், தொடர்பற்ற நிலையிலும் இவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்ததற்குப் பின்னாலும், நான் போற்றும் கேல் உண்மையான பெண் இல்லை என்று நான் உணர்ந்தேயிருக்கிறேன். உண்மையான கேல், அவளைப் பற்றிய என் மறு-பிம்பமாக்கலிலும், காட்டுமிராண்டி மனிதர்கள் இல்லாத மறு பிரபஞ்சத்தில் இருவரும் சேர்ந்து வாழ்வைத் தொடர்வது பற்றிய என் தனிப்பட்ட விரிவாக்கத்திலும் குழம்பிய பெண்ணாக இருக்கிறாள். உண்மையான கேல் நமது பிடியில் சிக்காதவளாகவும், வார்த்தைகளால் விவரிக்க முடியாதவளாகவும் இப்பொழுது இருக்கலாம்.

சமீபத்தில் அவளைப் பார்த்திருக்கிறேன். அணு ஆயுதப் போர்க்கருவிகளைச் சுமந்து கொண்டிருக்கும் சுயேச்சையான கமாண்டோக்களின் பாதுகாப்புடன், நீண்டு இருண்டு கிடந்த மதுவருந்தும் அறையின் கடைகோடியில் இருந்தாள். விற்பனை செய்யும் முனையில் பசிபிக் பீர் வகைகளான கிரின், சிங்டோவ், ஸ்வான் போன்றவையும் பாலினேஷிய உணவு வகைகளும் இருந்தன.

அந்த சமயத்தில், செவ்வாய் கிரஹத்துக்குச் சென்ற விண்வெளி வீரன் மீள்வதற்கான நம்பிக்கையிழந்து, உணவு மற்றும் சுவாசிக்கத் தக்க காற்று ஆகியவை தீர்ந்து போய் ஆபத்தில் மாட்டிக் கொண்ட சோகக்கதையைப் பல தொலைக்காட்சிச் சேனல்கள் காட்டிக் கொண்டிருந்தன. விண்வெளி ஆய்வுகளுக்கான பட்ஜெட்டை விரைவாக நிராகரித்ததற்கான நம்பும்படியான வாதங்களை அதிகாரப்பூர்வமான செய்தியாளர் எங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இந்த வாதங்கள் வலுவானவை என்று நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

கருதினோம்: இறந்து கொண்டிருக்கும் விண்வெளி வீரனின் பிம்பங்களுடைய உணர்ச்சியை நெகிழச் செய்யும் தன்மையைப் பற்றி செல்வாக்கு மிக்க குரல்கள் கூறின. வெறுமையை நோக்கி அவ் விண்வெளிவீரன் மெதுவாக வீழ்ந்து கொண்டிருப்பது அவனுடைய குறைந்து வரும் ஈர்ப்பு சக்தி, எடைகுறைந்து மரணமடைந்து வருவது பற்றிய பளிச்சென்ற புகைப்படங்களை அங்கேயே தங்கிவிட்ட அவனுடைய விண்வெளிக் கப்பலின் காமிராக்கள் தொடர்ந்து அனுப்பிக்கொண்டுதானிருந்தன. கேல் விடுதியிலிருந்த தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது நான் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். நான் கவனித்துக் கொண்டிருந்ததை அவள் பார்க்கவுமில்லை; எனக்கு விருப்பமான நிகழ்ச்சியாக அவள் இருந்ததை அறியவுமில்லை அவள்.

அந்நிய கிரஹத்திலிருந்த கைவிடப்பட்ட மனிதன் - தொலைக்காட்சியில் தோன்றிய கைவிடப்பட்ட மனிதன் - அரைகுறையாக நினைவில் உள்ள பாடல்களைக் கரடுமுரடான குரலில் பாடினான். '2001: எ ஸ்பேஸ் ஒடிசி' என்ற பழைய திரைப்படத்தில் 'ஹால்' என்னும் கம்ப்யூட்டர் இறந்து கொண்டிருந்த காட்சி என் நினைவுக்கு வந்தது. 'டெய்ஸி, டெய்ஸி' என்ற பாடலை ஹால் பாடியபோது மின்சார முனையிலிருந்து அது துண்டிக்கப்பட்டது.

விண்வெளி வீரன் - அவன் இப்பொழுது அந்த கிரஹத்தின் நிரந்தர வாசியாகிவிட்டான் - 'ஸ்வானீ' 'வீட்டிற்குப் போகும் வழியைக் காட்டு' போன்ற பாடல்களையும் 'ஒஜ் நாட்டு மந்திரவாதி' கதையிலிருந்து பல பகுதிகளையும் விண்வெளியிலிருந்து விளக்குகிறான்; கேலின் தோள்கள் குலுங்குகின்றன. அவள் அழுது கொண்டிருந்தாள்.

அவளுக்கு ஆறுதல் கூற நான் செல்லவில்லை.

அடுத்த நாள் காலையிலேயே, இரத்தினச் செருப்புகள் விரைவில் ஏலம் விடப்படுமெனக் கேள்விப்பட்டேன்; என்ன விலையாயினும் அதை வாங்குவதென்று முடிவு செய்தேன். என் திட்டம் மிக எளிமையானது: அதிசயச் செருப்புகளை கேலிடம் மிகவும் அடக்கமாகக் கொடுப்பேன். அவள் விரும்பினால் செவ்வாய் கிரஹத்துக்குச் சென்று விண்வெளி வீரனை மீண்டும் பூமிக்கு அழைத்து வரலாம் என்று சொல்லிவிட விரும்புகிறேன்.

குதிகால்களை மூன்று முறை சேர்த்துச் சப்தமெழுப்பி, எங்கள் வீணாக்கப்பட்ட காதலை மென்மையாக நினைவுப் படுத்துவதற்காக, 'வீட்டைப் போல ஒரு நல்ல இடம் வேறெதுவுமில்லை' என்று முணுமுணுத்து அவளுடைய இதயத்தை மீண்டும் வெற்றி கொள்வேன்.

என் ஏமாற்றத்தைக் கண்டு நீங்கள் சிரிக்கிறீர்கள். ஹா! நாணலைப் பிடிக்க வேண்டாமென மூழ்கிக் கொண்டிருப்பவனிடம் சொல்லுங்கள், போங்கள். இறந்து கொண்டிருக்கும் விண்வெளி வீரனைப் பாடவேண்டாம் எனச் சொல்லுங்கள், போங்கள். இங்கே வந்து என் செருப்புகளை அணிந்து கொள்ளுங்கள். ஒஜ்நாட்டு கோழைச் சிங்கம் என்ன சொன்னது? அதைச் சொல்லுங்கள். அதைச் சொல்ல்ல்லுங்கள்ள்ள். ஒரு கையை முதுகுக்குப் பின்னால் கட்டிக் கொண்டு உங்களோடு சண்டையிடுவேன். என் கண்களை மூடிக் கொண்டு உங்களோடு சண்டையிடுவேன்.

பயந்துவிட்டீர்களா, உம்? பயந்துவிட்டீர்களா?

ஏலம் விடுபவர்களின் மாபெரும் விற்பனையாகம் பூமியின் துடிக்கும் இதயமாக இருக்கிறது. இங்கே நீண்ட நேரத்துக்கு நிற்பீர்களெனில்



படிப்பகம்

www.padippakam.com

உலகத்தின் எல்லா அதிசயங்களும் நடப்பதைக் காணலாம். சமீப வருடங்களில் தாஜ்மஹால், சுதந்திரச் சிலை, ஆல்ப்ஸ் மலை, ஸ்பிங்க்ஸ் ஆகியவை ஏலம் விடப்பட்டதை மாபெரும் விற்பனையகத்தில் நாம் பார்த்திருக்கிறோம். மனைவிகள் விற்கப்படுவதற்கும் கணவன்கள் வாங்கப்படுவதற்கும் நாம் உதவியாக இருந்திருக்கி- றோம். மிக உயர்ந்த தொகையைக் கூறுபவருக்கு இங்கே அரசு-ரகசியங்கள் வெளிப்படையாகவே விற்கப்படுவதைக் காணலாம். ஒரு நல்ல சந்தர்ப்பத்தில், உணர்ச்சிவசப்பட்ட, பல்வேறு மதங்களைச் சேர்ந்த, இறந்து கொண்டிருந்த செம்பிசாசுகளின் கூட்டத்துக்கும், எல்லாவர்க்கங்கள், தகுதிகள், வயதுகள், இனங்கள், வகைகள் ஆகியவற்றிலும் இருந்து பரவலாகத் தேர்வு செய்யப்பட்ட மனித ஆன்மாக்களுக்கும் ஏலம் விடுவோர் தலைமை தாங்கினர்.

எல்லாமே விற்பனைக்காகத்தான் உள்ளன எனினும் ஏலம் விடுவோர், அவர்களின் காவல் நாய்கள் மற்றும் போலீஸ் படையினர்களின் உறுதியான, நல்லெண்ணம் கொண்ட மேற்பார்வையில் அறிவு யுத்தத்தில், தாக்குப்பிடித்து நிற்கும் சண்டையில் நாம் ஈடுபடுகிறோம்.

அதிகரித்து வருகின்ற, நசுக்கப்படுவதற்காகக் கட்டி வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய வாழ்க்கைச் சிக்கலுக்கும், இந்த வாழ்வை எதிர்கொள்வதற்கான நமது எக்கச்சக்கமாக எளிமைக்கும் இடையே அழகியல் பூர்வமாகக் கவரக் கூடிய இறுக்கம் இருக்கிறது; நமது செயல்களில் ஒரு தூய்மையும் இருக்கிறது.

நாம் ஏலத் தொகையைக் கூறுகிறோம், ஏலம் விடுபவர்கள் அடிக்கடி மேசையைத் தட்டுகிறார்கள், நாம் தொடர்கிறோம்.

மரச் சுத்தியல்களின் நீதிக்கு முன்னால் அனைவரும் சமம்: பாதையோர ஓவியனும் மைக்கேலேஞ்ஜலோவும், அடிமையாக இருக்கும் பெண்ணும் அரசியும்.

இது தேவைகளின் நீதிமன்றம்.

இப்பொழுது செருப்புகளுக்கு ஏலம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். விலை அதிகரிக்க அதிகரிக்க, என் ஆவலும் அதிகரிக்கிறது. அச்சம் என்னைப் பிடித்துக் கீழே தள்ளுகிறது; நான் வீழ்கிறேன். கேலை நினைத்துக் கொள்கிறேன் - இனியவளே - அச்சத்தை எதிர்த்துப் போராடுகிறேன். ஏலத்தில் தொகையைக் கூறுகிறேன். உலகப் புகழ்பெற்ற, எல்லாராலும் மிகவும் விரும்பப்பட்ட, இறந்துபோன ஒரு பாப் பாடகியின் கணவன் தன் சார்பில் ஒரு நினைவில் கொள்ளத்தக்க ராக் இசைப் பொருட்களின் ஏலத்திற்கு ஒரு முறை என்னைச் செல்லுமாறு கேட்டுக் கொண்டான். அவளுடைய பல கோடிக்கணக்கான சொத்துக்கும் அவன் ஒருவனே முழு டிரஸ்டி. அவனை நான் மிகவும் மதித்தேன்.

'ஏதாவது ஒருவகை இசைப் பொருள்கள் மட்டும் தான் எனக்கு வேண்டும், எவ்வளவு தேவையோ அவ்வளவு செலவு செய்' என்பான்.

ஏலத்தில் வாங்கச் சென்றது ஒரு வகையான துணி. லேசான காகிதம் போன்ற பெப்பர்மின்ட் சுவையுடைய ஒரு ஜோடி பேண்டிஸ். ரோடியோ டிரைவ் - (இந்தப் பெயர் தான் என்று நினைக்கிறேன்) இல் உள்ள கடையில் நீண்ட நாட்களுக்கு முன்பு வாங்கப்பட்டவை. என்னை இவ்வேலைக்கு நியமித்தவரின் காலஞ்சென்ற மனைவியின் அரங்கேற்றத்தில் இது போன்ற பல ஜோடி பேண்டிஸை கூட்டத்தின் முன்னால் கழற்றி அவர்களுக்குக் கொடுத்துவிடுவதும் இடம் பெற்றிருந்தது. சாக்கலேட் சிப், நிக்கர் பாக்கர்



படிப்பகம்

www.padippakam.com

குளோரி, கஸாடா போன்ற பல்வேறு குணமுடைய பேண்டிஸ் கூட்டத்தின் மீது வீசியெறியப்பட்டன. இசை நிகழ்ச்சியின் பொதுவான மனக்கிளர்ச்சியில் இது ஏற்படுத்திய குஷியும் சேர்ந்து கொண்டது; பேண்டிஸைப் பெற்ற அதிர்ஷ்டமுள்ள ரசிகர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட பொருளின் எதிர்கால மதிப்பும் பற்றி யோசிக்க இயலாத அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டிருந்தார்கள். எனவே அவள் உண்மையிலேயே அணிந்த கீழாடைகள் குறைவாகவே இப்பொழுது கிடைத்தன; இப்போது அவற்றுக்கு ஏக கிராக்கி.

ஏலத்தின் பொழுது, டோக்கியோ, லாஸ் ஏஞ்சல்ஸ், பாரிஸ் மற்றும் மிலன் ஆகிய நகரங்களிலிருந்து வீடியோ தொடர்புகளின் மூலமாக ஏலத் தொகைகள் கூறப்பட்டன; அவ்வளவு வேகமாகவும், பெருந்தொகை வைத்தும் ஏலம் கூறப்பட்டதால் நான் என் வசமிழந்தேன். என் முதலாளிக்கு போன் செய்து என் தோல்வியை ஒப்புக்கொண்ட போது சிறிதும் சலனமின்றி, இறுதி விலை என்ன என்று தெரிந்து கொள்வதிலேயே ஆர்வம் செலுத்தினான். ஐந்து இலக்க எண்ணைச் சொன்னேன்; அவன் சிரித்தான். அவனுடைய மனைவி இறந்த பின்பு மிகவும் மகிழ்ச்சியாக அவன் சிரித்து நான் கேட்டது அந்த ஒரு முறைதான்.

'அப்படியானால் சரிதான், என்னிடம் (அவளுடைய) பேண்டிஸ் மூன்று லட்சம் மதிப்புடையவை இருக்கின்றன' என்றான்.

நம் கடந்த காலங்கள், நம் எதிர்காலங்கள், நம் வாழ்க்கைகள் - இவற்றின் மதிப்பை நிர்ணயிக்க நாம் ஏலம் விடுபவர்களிடம் செல்கின்றோம்.

இரத்தினச் செருப்புகளின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. ஏலம் கூறியவர்களில் பலர், பேண்டிஸின் ஏலத்தில் நான் கலந்து கொண்டதைப் போல, மற்றவர்களின் ஏஜண்டுகளாகத் தோன்றினார்கள்; பல வழிவகைகளிலும் பலமுறை நான் இருந்ததைப் போல.

எவ்வாறிருப்பினும் இன்று எனக்காக (இவ்வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில்) நான் ஏலம் கூறுகிறேன்.

வெளியே தெருவில் வெடிகுண்டு வெடிக்கிறது. கால்கள் தடதடத்து ஓடுவதை, சைரன்களின் ஓசையை, அழுகுரல்களை நாம் கேட்கிறோம். இது போன்ற விஷயங்கள் சாதாரணமாகிவிட்டன. ஒரு சிறந்த நாடகத்தில் லயித்து, நாம் எங்கே இருந்தோமோ அங்கேயே இருக்கிறோம்.

எச்சிற் பணிக்கங்கள் மும்மரமாக நிரப்பப்படுகின்றன. சூனியக்காரிகள் கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; சினிமா நட்சத்திரங்கள் மங்கிப் போன நகைகளுடன் தள்ளாடிச் செல்கிறார்கள். ஆறுதலின்றித் தவிப்பவர்களின் வரிசை உளவியல் மருத்துவர்களின் அறைகளுக்கு முன்பாக உருப்பெறுகிறது. பேறுகால மருத்துவர்களுக்கு வேலையில்லையென்றாலும், பாதுகாப்புப் படையினருக்கு வேலை இருக்கத்தான் செய்கிறது. ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது. விற்பனையகத்தில் ஏலம் கூறிக் கொண்டிருப்பவன் நான் ஒருவன் மட்டுந்தான். என் போட்டியாளர்கள் வீடியோ ஸ்கிரீன்களில் தோன்றும் உருவமற்ற முகங்களாகவும், தொலைபேசி இணைப்புக்களில் பேசும் கேட்கப்படாத குரல்களாகவும் இருக்கிறார்கள். பூதங்களும் பேய்களும் உள்ள கண்ணுக்குத் தெரியாத உலகத்தோடு நான் போராடுகிறேன்; அதற்குப் பரிசு என் காதலியின் கரம்.



படிப்பகம்

www.padippakam.com




பணம் என்பது எண்ணிக்கையைக் குறிப்பதற்கான ஒரு வழியாக மட்டுமே மாறிப்போய் விட்ட ஏலத்தின் உச்சக்கட்டத்தில் ஒன்று நிகழ்கிறது என்பதைத் தயக்கத்துடன் ஒத்துக் கொள்கிறேன்: பூலோகத்திலிருந்தே ஒருவன் துண்டிக்கப்பட்டு விடுகிறான்.

புவியீர்ப்பு விசை குறைகிறது, எடை குறைகிறது, போராட்டத்தின் திணிவோடு மிதக்க முடிகிறது. இறுதியான இலக்கு குழப்பமான எல்லையைத் தாண்டி விடுகிறது. இறுதி இலக்கைச் சாதிப்பதும் நாம் உயிரோடிருத்தலும் புனைவுகளாக மாறிவிடுகின்றன.

மேலும் புனைவுகள், நான் ஏற்கனவே குறிப்பிட முயன்றது போல், ஆபத்தானவை.

புனைவுகளின் பிடியில், நாம் வீட்டை அடகுப் பொருளாக்கி விடுகிறோம், குழந்தைகளை விற்று விடுகிறோம், நாம் ஏங்கும் விஷயங்கள் எதுவாயினும் அதை அடைய முனைகிறோம். மாறாக, இந்த நச்சரிப்புகளின் சமுத்திரத்தில் நாம் ஆசைகளிலிருந்து விலகி மிதப்போம், எட்ட இருந்து கொண்டு அவற்றைப் புதுமையானவையாகக் காண்போம்; அப்போது கனமற்றதாக, புறக்கணிக்கக் கூடியதாக அவை தோன்றும். அவற்றை அவற்றின் போக்கில் போகும்படி விட்டுவிடலாம். பனிப்புயலில் சிக்கி மரணமடைந்தவர்களைப் போல, பனியில் படுத்து நாம் ஓய்வெடுக்கலாம்.

ஆகவே தான் ஏலத்தின் உச்சக்கட்டத்தில், என்னைப் பிடித்துக் கொண்டிருந்த கேலின் பிடி தளர்கிறது. ஆகவே தான் ஏலம் கூறுவதிலிருந்து விடுபட்டு, வீட்டிற்குச் சென்று, ஆழ்ந்த உறக்கத்தில் விழுகிறேன்.

நான் விழித்தெழும்பொழுது புத்துணர்வு பெற்றவனாக, சுதந்திரமானவனாக இருப்பேன்.

அடுத்த வாரமே இன்னொரு ஏலம் வருகிறது. வீட்டு மரங்கள், சண்டைக் கவசங்கள், அரச குடும்பங்களின் பாரம்பரியப் பொருட்கள் ஆகியவை ஏலத்துக்கு வருகின்றன. இவற்றில் எதில் வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் தங்கள் பெயரை, அல்லது தங்கள் அன்புக்குரியவர்களின் பெயரை நுழைத்துக் கொள்ள முடியும்.

நாய்களும் பூனைகளும் கூட விற்பனைக்கு வருகின்றன: அல்சேஷன், பர்மீஸ், ஸாலூகி, சியாமீஸ், கேர்ன் டெரியர்.

ஏலம் விடுபவர்களின் எல்லையற்ற தயாள குணத்துக்கு நன்றி; நாம் - பூனை, நாய், ஆண், பெண், குழந்தை என - யார் வேண்டுமானாலும் உயர்குடி மரபுக்குச் சொந்தமானவர்களாகி விடலாம்; யாராக மாறுவதற்கு ஏங்குகிறோமோ அவர்களாக மாறிவிடலாம்: நமது இருப்பிடங்களில் அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பதால் 'நாம் வேறு யாரோவாகி விட்டோம்' என்று நினைக்க மாட்டோம்.

தமிழில் : எஸ். பாலச்சந்திரன்



படிப்பகம்

www.padippakam.com



# கவிதை - ஒரு பிரச்னை?

**தேவதேவன்**

இங்கே கவிதை என்ற சொல்லுக்கு எதிரான ஒரு நிலையில் உரைநடை என்ற சொல்லை நான் நிறுத்திப் பேசத் தொடங்குவதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். இது கவிதையின் காலமல்ல, உரைநடையின் காலம் என்ற எண்ணம் நம்மிடையேயுள்ள நாவல், சிறுகதை, ஆராய்ச்சி அறிஞர்களிடையே காணப்படுகிறது. இவர்களுக்கு தாங்கள் கைக்கொண்டுள்ள துறைகளின் முழுமையை நோக்கிய பார்வை விரிவு - அதாவது வாழ்வு குறித்த முழுமையான வேகமோ, குறைந்தபட்சம் இத்துறை குறித்த அறிவோ ஆர்வமோ கூட இல்லை. அவைகளைப் பெற்றிருக்கும் முதல்தரக் கலைஞர்களாக அவர்கள் இருப்பின் கவிதை குறித்த அவர்கள் பார்வை இவ்வாறு அமைவதற்கு வாய்ப்பில்லை.

முதல்தரக் கலைஞர்கள் இல்லை. அப்படியானால் இந்த இரண்டாந்தர மூன்றாந்தரக் கலைஞர்களாகிய இவர்கள் யார்? இவர்கள் தங்களை வசீகரித்துள்ள லௌகீக சமாச்சாரங்களான விகாரங்களின் - பகுதிகளின் - கதை, விவகாரம், மோதல்கள், விநோதங்கள், குணச்சித்திரங்கள், கலாச்சாரங்கள் இன்னபிற ரஸபேதங்களிலேயே சுவாரஸ்யமும், ஈர்ப்பும், வேகமும் வேட்கையும் கொண்டே இவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள், இவைகள் இரண்டாம்பட்சமாகி கவித்வத்தையே முதன்மையாகப் பெற்ற - அதாவது வாழ்வுபற்றிய முழுமையான புரிதலும், அது சார்ந்த தீவிரமும் சோகமுமேயான கலைஞர்கள் அல்லர். ஆகவே தான் இவர்கள் இன்று இங்கே உண்மையைத் தொலைத்தவர்களாகி நிற்கிறார்கள். இது எப்படி என்று காண்போம்.

அச்சு கண்டுபிடிக்கப்பட்டதும், எல்லா மொழுகளிலும் அமோக விளைச்சலாய் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சியினால் நாம் அடைந்த வசதியே, அதுவரை கவிதைக்குள் ஒரு தொன்மமாகவும், மந்திரமாகவும், நாட்டுப்புற இயலாகவும் ஒரு விநோத இலக்கிய உருவம் கொண்டிருந்த வாழ்க்கையை, ஒரு பகுப்பாய்வு போன்ற விரிவான கோலங்களில் விவரிக்க முடிந்த நிலை. இது கவிதையை அறிந்தவன் அதையே சிறுகதையாக, நாவலாக, நாடகமாக அவ்வவற்றின் பிரத்யேக குணாம்சங்களைக் கருத்திற்கொண்டு படைத்தல் என்னும் இயல்பைச் சார்ந்தது ஆகும்.

ஆனால் இங்கே நிகழ்வது என்ன? எதிர்மறையான பல விஷயங்கள். வாழ்க்கையின் பல்வேறு துறை எழுத்துக்கள் நுணுகி நுணுகித் தோன்றி வளர்ச்சி பெற்றது ஒரு நேர்மறையான விளைவு என்றால் இரண்டாம்தர



படிப்பகம்

www.padippakam.com


மூன்றாந்தரப் படைப்புகள் தோன்றி குட்டையைக் குழப்பி சீரிய முதல்தரப் படைப்புகளை, இலக்கியத்தை, கவிஞனை நெருக்கியடித்துப் புறம் ஒதுக்கும் காரியமும் நிகழ்ந்தமைதான் எதிர்மறை. இத்தகைய இரண்டாம்தரக் கலைஞர்கள் கவித்வ ஆவேசமற்றவர்கள், ஒரு தொழில் திறன் போலக் கைவந்த எழுத்துப் பயிற்சியைக் கொண்டு தங்கள் படைப்புகளுக்கு நியாயம் தேடுவதற்கான கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அலைபவர்கள். இந்த இரண்டாம்தர படைப்புகள் கூட அதில் அடங்கியுள்ள பல்வேறு கூறுகளுக்காக நேர்மறையாக, ஒரு சம்பத்தாக மதிக்கத்தக்க கவுரவம் உடையதே. தன் தகுதியையும் இடத்தையும் அது உணராது அடக்கமற்று குதிக்கையில் தான் நிகழ்கிறது ஆபாசமும் சிக்கலும். வெகுஜன சாதனங்கள் எனும் புதிய பூதங்களின் மூலமாய் பூதாகரமாய் வெளிப்பட நினைக்கும் தன்மயமும் ஒரு காரணம். சீரிய இலக்கிய விமர்சனமும் சரி, வாசகானுபவமும் சரி எந்த மொழியிலும் இவர்களை எளிதில் இனம் கண்டு விலக்கி முதல்தரக் கலைஞர்களையே கவுரவிக்கிறது.

அன்றைய உரைநடை வளர்ச்சியின்மையே சொற்சுருக்கத்தையும், கவிதையையும்தோற்றுவித்திருக்கிறது என்று இன்றைய சொற்பெருக்கத்தை அளவு கோலாகக் கொண்டு மதிப்பிடுவது அபத்தம். மொழி வளர்ச்சியும், பொருளியல் வளர்ச்சியும் மனிதனை இன்று திசைகளுக்குள் அலைக்கழிக்கவே பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இங்கே அபரிதமாய்க் காணப்படும் ஒரு ஆன்மீகச் சூன்யக் கொடுமையை தன் முதல் மூச்சிலேயே உணர்ந்து கொள்ளக்கூடியவன் கவிஞன். சொல்லப்போனால் இன்று தான் கவிதையின் தேவையை நாம் மிகுதியும் உணரவேண்டியவர் களாக உள்ளோம். கவிதை இன்றைக்கான கலை இல்லை; இன்றைக்கான் கலை நாவல், சிறுகதை என்று கூறுபவர்கள் கவிதையின் விந்நியாசத்தையே கருத்தில்கொண்டு கூறுபவர்களானால் பிரச்னை இல்லை; கவிதையை லௌகீக உலகோடு மிக நெருக்கமாகக் கொண்டு வர நாவலும் சிறுகதையும் போராடுகிற போராட்டத்தை உணர்ந்தவன் இன்றைய கலைஞன் எனில் பிரச்னை இல்லை. மட்டுமின்றி அத்தகைய கலைஞன் கவிதையை இன்றைக்கான கலை இல்லை என்று கூறத் துணிவானா? இயலாது. மிகுதியும் லௌகீக உலகோடு சலிக்கிறவனான கலைஞன், கவிதையின் ஊற்றைக் கனவிலாவது கண்டு அத் திசை நோக்கிப் பயணிக்கிறவன், கவிதை எனும் தனிக் கலை குறித்து, கவிஞன் என்பவன் யாவன் என்பவதைக் குறித்து சிந்தித்திருக்கும் பட்சத்தில் 'கவிதை இன்றைக்கான கலை இல்லை' என்று எவ்வாறு கூறத் துணிவான்?

சரி; கவிஞன் என்பவன் யாவன்?


படிப்பகம்

www.padippakam.com



இளமையிலேயே தன் வாழ்வை ஒரு பிரச்னையாகக் கொண்டவனும், அதனாலேயே லௌகீக உலகினின்றும் வெகு தூரத்திலிருப்பவனும், பிறவியையே, ஒரு பிணிதானோ என்னுமளவுக்கு ஒரு வகை நோய்க் கூறாகக் கொண்டவனும் அதே வேளை சராசரி மனிதனோடு ஒப்பிடுகையில் மிகுந்த ஆரோக்கியமுள்ளவனும், அர்த்தம் நிறைந்த வாழ்க்கையை உடைய மகத்தான மனிதனும் ஆனவன். ஆதியிலிருந்து இத்தகைய மனிதர்களே கடவுளின் மகன்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும், மகரன்களாகவும், பரமாத்மாவாகிய ஆண்டவனோடு ஐக்கியமாகத் தவிக்கிற ஜீவாத்மாக்களாகவும் அவ்வக்கால மோஸ்தரை மீற முடியாது வாழ்ந்து மரித்தவர்கள். இவர்களின் இன்றைய நவீன மனிதனே கவிஞன் என்றால் அது தவறாகாது. ஒரு புல்லை புல்லாகக் காணாமல், பிரபஞ்சத்தின் விருந்தோபசாரத்தில் புல்லும் தன் பங்களிப்பைச் செய்கிறது என்று நெகிழ்ந்து போகிறவனிடம் உள்ள போதம் என்ன? இன்னும் வேறு வேறு கோணங்களில் பல சமயங்களில் அவனிடமுள்ள போதம் உலகியல் வாழ்வோடு முரண்படுவதாலும் எவ்வளவு வேதனையுமானது?

சிந்தனையும் தெளிவும் தீர்க்கமும் கவிஞர்களிடம் மட்டுமே காணக் கிடைக்கிற செல்வங்கள். இத்தகைய கவிஞனுக்கு அவனது போதமும், தூய



படிப்பகம்

www.padippakam.com

உணர்ச்சிகளுமே பிரதானமானதால் அவன் பார்க்கும் பார்வையில் எல்லாவற்றுக்குமேஒருபிரத்யேகவர்ணம்ஏறிவிடுகிறது. இந்தவாழ்க்கையை உள்ளது உள்ளவாறே பார்க்க முடியாமல் ஊடுறுவிக் காணக் கூடியதாயிருக்கிறது அவனது பார்வை; உணர்ச்சி ரீதியாகவும் இந்த வாழ்க்கை உள்ளது உள்ள வாறாக அவனுக்கு இருப்பதில்லை.

இனி அவனது கலையான கவிதை குறித்துப் பார்க்கலாம்.

கவிதையில் உணர்ச்சியே பிரதானமானது. ஆனால் அதன் பெறுபேறான கனிதான் அறிவுத்தளம் என்பது விமர்சகர்களால் அடையாளம் காண முடியாது போய் விடுகிறது அவ்வப்போது என்பதே நம் துரதிருஷ்டம். அன்பும் அறிவும் வேறு வேறல்ல என்ற புரிதலும், பிரமீளின் சொற்களில் 'ஹ்ருதயபூர்வமான புத்தி' என்பதன் புரிதலும் நிகழும் போது இப்பிரச்னை தீர்ந்துவிடும் என்று நாம் நம்புகிறோம்.

நல்ல கவிதையானது உணர்ச்சிகளின் ஸ்தூல உருவமாகவே இருக்கிறது. உணர்ச்சிகளின் ஸ்தூல உருவம் தான் படிமம். இப்படிமத்தில் பொருளடக்கம் போல் வந்தமையும் சிற்பக்கூறுகளே முடிவற்ற பொருளை உணர்த்திக் கொண்டிருக்கும் குறியீடுகள். படிம, குறியீடு விஷயங்களைக் கவிதைக்கு அந்நியமாய் ஒதுக்கும் விமர்சகர்கள் குறிப்பிடும் உணர்ச்சி சந்தேகத்திற்கிடமானது; சரியான புரிதல் இல்லாதது. ஆகவே தூய உணர்ச்சி என்ற சொல்லை நாம் இங்கே கையாள வேண்டியவர்களாகிறோம். உணர்ச்சிகரமான அனுபவம் வெளிப்பாடடைகையில் காணப்படுவது தான் படிம, உருவக, குறியீடுகள்; அனுபவத்தின் போது அவைகள் இல்லை; இதை அறியாது 'படிம, உருவக, குறியீட்டு இடையீடில்லாத நிர்வாணக் கவித்வம் வேண்டித் தவமிருப்பவர்கள்' தம் நிலையையே அறியாதவர்கள் தான். இத்தகைய அறியாமையிலிருந்து எழுதப்படும் கவிதைகளுக்கு எத்தகைய உணர்ச்சிகள் அடித்தளமாக அமையக்கூடும்? இதனாலும் தூய உணர்ச்சிகள் என்ற ஒரு சொல்லை நாம் இங்கே கையாள வேண்டியவர்களாகிறோம்.

கவிதை, மனிதனின் தனித்தன்மையையும், தனிமையையும் பேசக்கூடிய ஒரு கலை. மாயத்தன்மை மிக்கதும், புதிரானதும், ஒருவனை அவனது அறியாப் பருவத்திலேயே பீடிக்கக் கூடியதுமான ஒரு வகை துக்கத்திற்கு அல்லது துக்கம் போன்றவோர் உணர்வுக்கு நாம் மிகப் பெரிய பரிமாணத்தையே கொடுக்கிறோம். இந்தத் தனிமைக்கும் துக்கத்திற்கும் காரணமானது உன்னதங்களின்பாற்பட்ட அவனது தனித்தன்மை.

கவிதைக்கு உணர்ச்சியே பிரதானமானது என்று அறிவோம். ஐம்புலன்களாலும் அதற்கு அப்பால்களாலும் தொட்டு உணரக்கூடிய இந்த உணர்ச்சிகள் யாவுமே தனிமனிதனைச் சார்ந்தவையே. இத்தூய



படிப்பகம்

www.padippakam.com

உணர்ச்சிகளினுள்ளும் கவிதை நிலத்தைக் 'கொடுங்கோலாட்சி' செய்யும் 'அரக்கர்களாக' விளங்குபவை துக்கமும் வலியும். இவையே மனித குலத்தால் பெரிதும் பொருட்படுத்தப்பட வேண்டியவை. இவற்றின் உடனடி நிகழ்வாகவோ தொடர்ச்சியாகவோ தன்னியல்பாக அவனிடமிருந்து வெளிப்படும் செயல்தான் நம்மால் பெரிதும் விரும்பப்படுவதும் வேண்டப்படுவதுமாக இருக்கவேண்டும். இத்தகைய உணர்ச்சிகளால் கருத்தொருமித்தவர்களால் மட்டுமே பெரிய பெரிய காரியங்கள் நடந்துள்ளன பூமியில். மற்ற 'பெரிய காரியங்'களும் நடந்துள்ளன. அவை மனிதனின் தனிமனிதப் பண்புகளால் அல்ல; குழு மனப்பான்மையின் சின்னத்தனங்களால் உருவாக்கப்பட்டதும் அஞுக்கப்பட இருக்கிறதுமான 'பெரிய கைங் கர்யங்கள்'. இதனாலும் தான் இப்போது நாம் நமது உணர்ச்சிகளுக்கு அடைமொழு கொடுத்து தூய உணர்ச்சிகள் என்று சொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இங்கே நாம் எழுதும் இந்த வரலாற்றில் 'சமூகம்' என்ற சொல்லுக்கு நாம் அவாவுகிற ஓர் ஆன்மிகத் தளத்தில் எவ்வளவு மதிப்பு? (தனி) மனிதன் என்ற சொல்லுக்கு நேர் நேர் சொல்லாக இல்லாமல், நேர் எதிர்ச்சொல்லாக 'சமூகம்' என்ற இச்சொல் அமைந்துவிட்டது எப்படி? சமூகத்தினதும் அதன் மூர்க்கத்தனங்களினதும் ஊற்றுக்கண்கள் எவை? எவை? 'Men are cruel/ but Man is kind' என்று கவிஞன் கூற நேர்கிறது ஏன்?

கவிதையில் நாம் பெரிதும் பொருட்படுத்துகிற கவிஞனின் துக்கத்திற்கும் வலிக்கும் காரணமாயிருப்பது சமூகம் தானே? உடன் நல்ல நிவர்த்திகள் உருவாவதற்குத் தடையாயிருப்பதும் அவனை அச்சுறுத்துவதும் இந்தச் சமூகம் தான். தூய உணர்ச்சிகளின் தூல உருவங்களான கலைகள், கவிதைகள் இந்தச் சமூகத்தோடு எப்போதும் மோதியபடியேயும், ஏங்கியபடியேயும் இருப்பதின் காரணம் உண்மையில் ஒரு முழுமையான, மேலும் மேலும் நல்ல சமூகத்தை, வாழ்வைக் காணத் துடிக்கும் உள்ளார்ந்த இலட்சியம்தானன்றி வேறென்ன? நிறுவனம், சடங்குகள், உறவுகள் ஆகிய எவற்றினூடும் இந்தத் துடிப்பையும் அதன் அமைதியையுமே நாம் விரும்புகிறோம். அதாவது உன்னதங்களின்பாற்பட்ட (தனி) மனிதனின் தனித்தன்மைகள் சிதைவு படாமையையே நாம் விரும்புகிறோம்.


இந்த விருப்பம் புனிதமானது.

சரி; மனிதனின் தனித்தன்மைகள் என்கிறோமே அது என்ன? அது தான் அவனிடமுள்ள கவித்வ உணர்வுகள் என்பது இக்கட்டுரையை ஊன்றிப்படிப்பவர்கள் சுயமாகவே உணர முடிவது தான்.



படிப்பகம்

www.padippakam.com



## தற்காலத் தமிழ்க்கவிதைகள்

பாரவி

ஆர் கே

கரிகாலன்

மா.ரமேஷ்

அகஸ்டஸ்

லாவண்யா

தேவதேவன்

ஆலன்திலக்

விக்ரமாதித்யன்

வத்சல குமாரன்

நாரணோ ஜெயராமன்



படிப்பகம்

www.padippakam.com

## மவுனமாய் ஒரு சம்பவம்

கால்களை இடறிற்று ஓர் பறவைப்பிணம்.
சுற்றிச் சூழ்ந்த விஷப்புகையாய் வானம்.
கலவர முற்ற பறவைகளாய்
திசையெங்கும் குழம்பி அலையும் காற்று
பீதியூட்டுகிறது மரங்களின் அசைவு
மெல்ல நெருங்குகிறது
சலனமற்றிருந்த ஒரு பூதாகரம்.

விரைந்து போய்
ஆழ ஆழ முழ்குகிறேன் நான்
முழுக்க முழுக்க நீரால் நிறைந்த
என் தலைமறைவுப் பிரதேசத்திற்குள்.

என் உள்ளங்கை முத்தாய் ஒளிரும் இது என்ன?
வீணாகிப் போகாத என் இலட்சியமோ?
என் துயர்களை ஆற்றத்
தூதாய் வந்த வெறுங் கனவோ?

என்ன பொழுதிது?
மீண்டும் எட்டிப் பார்க்கிறேன்:
சலனம் கெட்டித்திருக்கும் இவ்வேளையுள்ளும்
காலம் திகட்டாது
கல்லுக்குள் தேரையான
என் உயிர்ப்பாட்டின் வேதனை.
என் நோய் தீரும் வகை எதுவோ?

இரத்தக் கறைபடிந்த சரித்திரமோ நான்?
இயற்கையைப் புறக்கணித்து வளர்ந்த
அதிமேதாவிக் கொழுந்தோ?
அன்பால் ஈர்க்கப்பட்டு
இன்று இம் மலைப்பிரதேசம் வந்து நிற்கிறேன்.

முடிவுறாத காலச் சங்கிலி
தன் கணத்த பெருமூச்சுடன்
கண்ணுக்குப் புலனாகமல் நிற்கிறதோ,
இப் பள்ளத்தாக்கின் மவுனத்திடம்
ஒரு தற்கொலையை வேண்டி?

ஏதோ ஒன்று
யாருக்கும் தெரியாமல்
மவுனமாய் நடந்து கொண்டிருக்கிறது.

தேவதேவன்



படிப்பகம்

www.padippakam.com

## நான்

இந்தக் கண் ஆடியில் எனது முகம்
எப்படித் தெரியலாயிற்றிது
வல்ல அது எதுவோ பார்க்கப்
படுவது ஆடி நானல்ல
கண் கோணல் மூக்கு நெற்றி
ஓட்டை காது அப்படியிப்படி
உருப்படியாய்த் தான் காணாது
போயிற்று எல்லாமெங்கே
மீண்டும் மீள மீண்டுப் பார்க்கத் தோன்றும்
எல்லாம் ஆடி காட்டக்கூடியதோ கண்
போதும் அல்ல வேண்டுமெனினும் என்னைக்
காட்ட வல்லதில்லையிக் கண்ணாடிக் கோலம்
வேறு தேடு
நிற்கும் முகம் பதி
சட்டக் கூடு இடம்
வலம் இடம் வலம்
நீ பார்க்கவும் நான், அல்ல நான்.

பாரவி

## அழகியல்

தன் அழகின் ஒளியைத் தேடி
கண்ணாடிக்குள் நுழைந்தாள் ஹெலன்

உளி பிடித்த கைகள் தழும்பேறி விகாரமாயின
வீரம் காண போர்க்களம் சென்ற
கண்களும் முகமும் கூட

சொல்லின் உயிரை ஒலித்துப் பழகினபோது
குரல்வளைக்குள் தவளைகள் புகுந்து கொண்டன

என்றாலும்
சாக்ரடீஸின் காலடியில்
மண்டியிட்டமர்ந்த இளைஞர்களுக்கெல்லாம்
ஹெலனின் முக தரிசனம் கிடைத்தது

ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## காலிங்கராயர் வம்சம்

வீதியில் பரவிக்கிடக்கும்
கற்பிக்கப்பட்ட நரகத்தின் குரூரமாய்
வெய்யில்
மண்சுவர் கவ்வியிருக்கும் சிமெண்ட் சன்னல்
ஊடாய் காட்சியுறும் நிழல்
வெளியில் திரியும் பறவை, நாய்
அன்றி மனிதர்களோ கூட இருக்கலாம்

அம்மன் கோவில் மேட்டில் புழுதி ஓட்டவும்
பூட்டாங் கயிற்றாலிறுக்கி வண்டி ஓட்டவும்
பழக்கிய லாடங்கட்டிய சீவன்களாக
எளிதாகிவிட்டது
வீட்டு ஆண்பிள்ளைகள் வாய்க்குருசியாய்
சமைப்பதும் வயிற்றில் நெருப்பைக்கட்டி
பெண்பிள்ளை வளர்ப்பதும்
விழித்திரையில் படிபவையெல்லாம்
காலங்களின் பிம்பங்கள்
சுவர்களைக் கடந்து கசியும்
சகோதரிகளின் பாதங்களில் ஒட்டியிருக்கும்
ஊர்ப்புழுதி காணமுடியாமல்
அம்மா, ஆச்சி, அண்ணிகளெல்லாம் சொன்னதுண்டு
காலிங்கராயர் வம்சத்து பெண்கள்
வாசற்படி தாண்டாதவர்களென
பெண்பார்க்க வந்தவர்களிடம்.

**கரிகாலன்**

## கனவு

எல்லாவற்றையும் மீண்டும் மீண்டும்
உனக்குக் காட்டும் உன்கனவு
திரும்பத் திரும்ப திரையிடப்படும்
திரைப்படத்தைப் போல
பொய்யான சுகத்தையும்
பொய்யான துக்கத்தையும் உண்மையாக.
கன்வு உன் ரத்த அணுக்களின் வேட்கை.
மறுப்பை மறுக்கும் மனதின் நிழலாட்டம்.
சுவாதினமற்று நிகழும் நிகழ்வு
உன் நெற்றித்திரையில் கனவு
நனவின் பெருவெளிக்குவரத் திணறும்
உன் ஜீவனின் பிதுங்கல்.
நீ உன் கனவு

**லாவண்யா**



படிப்பகம்

www.padippakam.com

## விஸ்வ ரூபம்

வியாபீ !
அடையாளங்கள்
சாசுவதமல்ல !
-சுவர் இடிந்தால்
செங்கல்; மண்!
ஏரி புரண்டால்
கரை எங்கே?-
நிதர் சனங்கள்
சிலந்தி மூளை
சுவாசிக்க மறந்து
கற்பித்தவை!
தீக்குச்சி உராய்வில்
உலை கொதிக்க
கும்பிக்குக் கூழ் !

இது போல
இன்னும் பல
உனக்கும், எனக்கும் பொது!
நிர்வாணமாகு,
மூர்த்தண்யம் காட்டு!

நாரணோ ஜெயராமன்

## மறதி

மறதிகளோடு போராடும்
நினைவுத் தேடல்
என்னை இரட்டிப்பாக்கும்
சமனப்படாத பகைமை
பழகிய மற்றும் பழகும்
முகங்கள் மற்றும் பெயர்கள்
மறந்து போகும்
வாழ்ந்து தீரும் அவசரம்
இறந்தவனின் முகம் சொல்லும்
மிஞ்சிய தேடலின் நீட்சி.
இனி
பழகப் போகும் முகங்களை
பிணத்தின் முகத்தோடு
பொருத்திப் பார்க்கிறேன்.

அதிகம் மறந்து போவது
இருத்தலுக்கான தேடலிலும்
நினைத்தலுக்கான மறத்தலிலும்
என் பெயர்.

மா.ரமேஷ்

## கைகள்

ஆனாலும் என் கைகள்
முழுதும் என்னுடையதாக இல்லை

அதன் நீண்ட பாம்புவிரல்
முப்பாட்டனின் பிதுரார்ஜிதச் சொத்து-

கட்டை விரலைக்
கடைந்து தந்தாரென் தந்தை-

சுட்டுவிரல் அம்மாவின் வார்ப்பு-

மோதிர விரல் முதலில் முத்தமிட்ட
காதலியின் ஞாபகச் சின்னம்

சுண்டு விரலைக் கட்டமைத்தது
சுற்றமும் நட்பும்

பின்னொரு நாளில் உன்னிடம் வருவேன்
முழுக்கைகளையும் எனதாக்கிக் கொண்டு
அல்லது
எல்லா விரல்களையும் உதிர்த்து விட்டேனும்
குஷ்டரோகியின் மொண்ணைக் கையுடன்
அல்லது குறுவாளொன்றின் கூரிய முனையுடன்

--வத்சல குமாரன்



படிப்பகம்

www.padippakam.com

## அழைப்பு

இந்த வீட்டிற்கு வந்த நாளிலிருந்தே
அருகில் வருமாறு
அழைக்கிறது அந்த மரம்.
பனி பெய்யும் நாட்கள்
மெல்லிய தூறல் போடும் நேரம்
கொளுத்தும் வெயில் பொழுது
ஆகிய எலலாக் காலங்களிலும்....

காலையில் எழுந்து கதவைத் திறந்தவுடன்
அருகில் உருவாகும் குடியிருப்புக் கடந்து
சற்று மேடான பகுதியில்
முதலில் தெரிவது அதுதான்.

சினிமாக் கனவுகன்னிகள் வாய்க்கப்பெறாத
என் முப்பாட்டன்கள்
எனக்கு விட்டுச் சென்ற செய்தி சொல்ல
அழைப்பது போ்லத் தோன்றுகிறது.

யாருக்கும் தெரிவிக்காத ரகசியத்தை
என்னிடம் பகிர்ந்து கொள்வதற்குப் போலவும்
சிலவேளை அதன் தோற்றம்.

இன்று
மின் கட்டணம்
பிள்ளைகளுக்குப் பள்ளிக்கட்டணம்
செலுத்தவென்று ஏராள வேலை.

என்றேனும் ஒருநாள் மரத்திடம் செல்லவேண்டும்
அதற்குள் எனக்காக நீ அதனிடம் பேசு.
என் விசாரிப்புகளை மறக்காமல் தெரிவித்து விடு.

எனக்கு முடியாவிட்டாலும்
என் பிள்ளைகளையேனும் அதனிடம்
பேசச் சொல்ல வேண்டும்.

**ஆலன் திலக்.**



படிப்பகம்

www.padippakam.com

# வார்த்தைப் பாடு

1.

ஆதியிலே வார்த்தை ஆண்டவனிடம் இருந்தது
அவன் அதை மனிதனில் விதைக்க
முளைத்தது நாக்கு.

கர்ப்பத் தோட்டம் கதவு திறந்து துரத்த
ஒரு மாபெரும் வெளியில் வார்த்தைகளை
வீசி விதைப்பதும் அறுப்பதும்
சிக்கிமுக்கிக் கற்கள் போல் உரசித் தீயில்
காய்ந்து கொள்வதும் கரிந்து போவதுமாய்
மனிதன் நகர்ந்தான் ஆதிவார்தையிலிருந்து.

அன்றிலிருந்து பெய்கிறது அடைமழை
புராணங்களும் புத்தகங்களும் முணுமுணுத்த
வார்த்தைமத விதானங்களிலிருந்து
மொழியின் விசேஷ உச்சரிப்பில்.
மூலவர் பெயர்போல் நிறம்மாறி உருமாறி
விடாது பெய்யும் சப்தங் குடித்துப் போதையேறி
ரத்தங் குடித்தனர் சிலர்
மற்றையோர் தம் வாழ்வைக் கரையில் வைத்துவிட்டு
மாய ஆதியின் மௌனம் காதில் கேட்கத்
தத்தம் கடவுள்களின் கடலில்
வார்த்தைப் பெருநீச்சலிடுகின்றனர்.

2.

விடாத மழைக்குக் குடைவேண்டி
உமது சப்தத்தில் மோதிக் கொண்டேன்
உமக்குக் கையொலித்து உமது சப்தங் கொஞ்சத்தை
வெற்றிலை போல் மென்று செல்லக்
காத்திருந்தது பெருங்கூட்டம்
குடையாகித் தலைகாப்பேனென்று மேடைவந்த நீர்
வலையாக விழுந்தீர் வாரிச்சுருட்ட.
தரித்திரம் பெய்யும் இக்காலத்திலும்
தம் கொள்கை இருட்குகையிலிருந்து
தளராத வார்த்தைகள் கொண்டு வந்த அவராவது
குடைகள் தருவார் தைத்து என்று
மூளைத்துளைஊசியாகக் குனிந்து நின்றோம்
அனைவர் செயலும் ஒன்றேயான
ஆயிரமர் வார்த்தை கோர்க்க.



படிப்பகம்

www.padippakam.com

**3.**

அனைத்தும் வார்த்தைகளால் ஆகக்கடவது
என்றான் ஒருவன்.
ஆனது.
அவற்றை இனி காணக்கடவாய் என்றான்
காணத் தொடங்கினோம்.
என்னறையில் நீ பேசிவிட்டுச் சென்றதும்
புழுவாய்ப் பூச்சியாய் நெளிந்தன , உன் வார்தைகள்
கதவுகளைத் திறந்து வைத்தேன்
காற்று உன்னை எடுத்துச் செல்ல.
படுக்கையிலே கண் நிமிர்ந்தேன்
மேலே உன் ஒட்டடை வார்த்தைகள்
எழுந்து செல்ல நினைத்தேன்
தரையோ தகப்பனின் வார்த்தைகளாயானது.

**4.**

என்றாவது பறவை உணரும்:
குச்சியாயிருந்தால் கூடுகட்டலாம்
இரையாயிருந்தால் குஞ்சுக்கு ஊட்டலாம்
வார்த்தைகளெல்லாம் ஒலிஅசுத்தக் காற்று
கொத்தி வந்து நம் கூட்டிலடைத்து லாபமில்லை
சற்றுமென
உணர்ந்தபோது வீசியெறியப்படு மென் வார்த்தைகள்
அவரவர்க்குப் பேசியவை
அவரவர் காதுகளையடையும்
அதுவரை ஊமையென்றெனையழைக்கும்
யார் மீதும் கோபமில்லை சற்றும்.

அகஸ்டஸ்

## சோட்டாணிக் கரை

தேவி பகவதி திருமுன்
ஆடுகின்றன அநேகம் பேய்கள்
அடக்கி யொடுக்கும் சமயம் வரும் வரை
ஆடவிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்
அமைதியாய் கீழக்காவில்

அதே தாய்தான்
மேலக்காவில் உக்ரமாயிருந்து
ஓட்டிப் பத்துகிறாள் உரிய பொழுதில்

காலம் வருமென்று
காத்திருக்கிறேன் நானும்

விக்ரமாதித்யன்



படிப்பகம்

www.padippakam.com

# தற்கால உலகக் கவிதைகள்

இங்கிலாந்திலிருந்து வெளிவந்த பல்வேறு இலக்கியப் பத்திரிகைகளிலும் கவிதைத் தொகுப்புகளிலும் பிரசுரிக்கப்பட்ட கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட (பரிசு வழங்கப்பட்ட) கவிதைகளின் தொகுதியான THE FORWARD BOOK OF POETRY 1995 - லிருந்து சில கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுஇங்கே வெளியாகின்றன. நான்கு நடுவர்களின் உதவியுடன் க்ரெஸிடா கொனோலி (CRESSIDA CONNOLLY) இந்நூலுக்கான கவிதை களைத் தேர்ந்தெடுத்திருக் கிறார். அனைத்துக் கவிதைகளும் ஆங்கில மொழியில் எழுதப் பட்டிருந்தாலும் பல நாடுகளின் கவிஞர்கள் இதில் இடம் பெற்றிருக் கிறார்கள். ஆப்பிரிக்க, கனடிய, கரீபிய, இந்திய,ஐரிஷ்,வெல்ஷ் போன்ற தங்களுடைய பண் பாட்டு, இன மரபுகளையும் நலன் களையும் சொல்லியிருக்கிறார்கள்.

'கலையின் அனைத்து வடிவங்களுமே ரசவாதங்கள் தாம். எல்லாவற்றிலும் கவிதையே மிகவும் ஜாலத்தன்மை கொண்டது.மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டு சலித்துக்கிடக்கும்நமது மொழிச் சொல்லாடலை மீண்டும் தங்கமாக மாற்ற வல்லது கவிதை' என்று எழுதுகின்ற கொனோலி, 'மௌன வாசிப்பு, தனி வாசிப்பு ஆகியவற்றுக்கு இல்லாத வேகம், உடன் தன்மை (immediacy) ஆகியவை சப்த வாசிப்புக் கவிதைகளுக்கு உண்டு. மேலான அறிவு கொண்ட தனிமை வாசகர்களுக்கே சொந்தமானது கவிதை என்ற நிலை இனி நீடிக்காது. மாறாக, ஜீவத்துடிப்பும் பரிமாற்ற உணர்வும் கொண்டமக்கள் திரளின் குவிமையமாகக்கவிதை இருக்கும். கால்பந்தாட்ட மைதானங்களை பாப்லோ நெரூடா தன் கவியரங்கக் கூட்டமாக மாற்றினார். மக்களைத் தனித் தனியானவர்களாக மாற்றும் தொலைக்காட்சியின் யுகத்தில் மீண்டும் சப்த வாசிப்பு மரபு மலர்வதைப் பார்ப்பது சந்தோஷமானது' என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

குறிப்பும் மொழி
பெயர்ப்பும் :
எஸ். பாலச்சந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

## ஹெலன்டன்மோர் / Helen Dunmore

## உடலை மீட்பதற்கு மூன்று வழிகள்
## Three Ways of Recovering a Body

துயிலெழுந்த காலைப் பொழுதில்
என்னிடமிருந்து வெளியேறிவிட்டது
என் உடல் என அறிந்த போது
சந்தர்ப்ப வசமாகத் தனியே இருந்தேன்.
வெளியே வந்துவிட்டது அது.
கூந்தலைப் பல பகுதிகளாகப் பிரித்து
நீங்கள் நினைவுகொள்வதற்காகத்
தந்துவிட்டேன்;
நகங்கள் பிரிந்து உதிர்ந்துவிட்டன
ஈரிதழ்ச் சிப்பிபோன்ற சதைப்பிலிருந்து.
யார் அதை எடுத்துக் கொண்டீர்கள்?
என் தோலிலிருந்து வழுக்கி ஒரு இரவில்
நான் வெளியே வந்துவிட்டேன்.
குதிகால்களில் மாட்டிக்கொண்டு
வலியோடு தடுமாறி விழுந்தது தோல்.
வாசனைத் தைலத்தை அதிகமாய்த்
தெளித்துக் கொள்கிறேன்
இருட்டிலும் நீ அடையாளம் காண.
காதுகளில் இரைச்சலிடும் கடலின் சப்தத்தை
கேட்பதற்காய்
உங்களில் ஒருவன் காதுகளைக் கேட்டான்.
முதலில் என்னை மீட்பதெனத் தீர்மானித்தேன்..
அப்போது பனியாக இருந்தேன்
தொடைகளில், வயிற்றில், இடுப்பில்.
பல ஆண்களோடு உறங்கியிருக்கிறேன்.
போலந்தின் சாம்பல் நிறைந்த நகரங்களில்
உன்னோடு இருந்தேன்;
கொழுப்பிட்டு வதக்கிய இனிப்பு மாவில்
மூன்றை நீ விழுங்கிய இரவில்
உன்னை மட்டுமே நினைத்தவாறு
பெர்லின் நகரத்துச் சாம்பல் நிறக் கட்டிடத்தில்
உன்னோடு இருந்தேன்.
முகத்தை நீ மழித்துக்கொண்டபோது
கண்ணாடிக்குப் பின்புறம்
ஒரு காத்திருத்தலில் என் உதடுகளை மீட்டேன்.
வெறுப்போடு உதடுபிதுக்கினாய் நீ.
பறித்துக்கொண்டேன்



படிப்பகம்

www.padippakam.com

உறைந்த மெழுகைப் போல் வெம்மையற்ற முத்தங்களை.
பிறகு சென்றுவிட்டேன்.
பின்னர்
ஒரு கன்னியாக மாறுவதெனத் தீர்மானித்தேன்
புதிய கதையை உருவாக்க
சௌகர்யம் தந்தது உடலின் இன்மை.
ஏழு வருடங்களில்
கண்ணுக்குத் தெரியாத செல்களெல்லாம்
புதுப்பிக்கப்பட்டிருக்கும்;
அவற்றில் எதுவும் உங்களைத் தொட்டிருக்காது
குளிர்ந்த ஏரிக்கும்
சாம்பல் வண்ணப்பாசிகளுள்ள தீவுக்கும் சென்றேன்.
நீரினாலான பையில் தங்கமாக மாறினேன்.
அறிந்துகொண்டார்கள் என்னை
என் கன்னிமையின் ஆவலூட்டும்
முணுமுணுப்பைக் காதலித்த தீவுவாசிகள்.
காப்பியும் வாசனைத் திரவியங்களும்
பணமும் கொடுத்தார்கள் எனக்கு.
அவர்களுக்காக
ஏதேனும் நான் செய்தாக வேண்டும்.

மூன்றாவதாக
என் கடந்தகாலம் தெரிந்தும்
மன்னித்த நல்ல கணவனை
திருமணம் செய்யத் தீர்மானித்தேன்.
என்னுள் நுழைந்த ஆண்கள் பலரையும்
எரிப்பதற்கான அவனுடைய ஆண்குறியின் ஆற்றலில்
நம்பிக்கை வைத்தேன்...
இவ்வாறேனும் என் உடம்பின் இயக்கம்
சிறுகச் சிறுகத் தொடங்கட்டுமென.
தன் யோனியின் சிரிப்பில் மட்டுமே உள்ள,
உலகத்தின் ஒரேயொரு
பெண்ணாக இருப்பேன் -
கண நேரத்துக்கே எனினும்.
நான் இருந்திருக்க வேண்டிய இடத்தில்
காற்றைத் தடவினான் அவன்.
கண்ணாடியில் பார்த்துக்கொண்ட பொழுது
உயிர் வாழ்வதன் அடையாளமாய்
ஒரு பனித் திரளைக் கண்டேன்
என்னை மீட்டதும்
எனக்குள்ளே கிசுகிசுத்தேன்
“தாக்குப்பிடி! நானும் உச்சமடைகிறேன்”


படிப்பகம்

www.padippakam.com

## ஏ.எம்.புத்ஸிஸ் / A.M. Budzish
## தலைப்பில்லாதது / UNTITLED

அட முஹம்மதுவே
யேசு கிறிஸ்து
ஒரு சிறந்த
ராக்-இசை நாடகத்தில்
சூப்பர்-ஸ்டாராக இருந்தான்

ஆனால் தடைசெய்யப்பட்ட நாவல்களிலும்
நிராகரிக்கப்பட்ட கவிதைகளிலுமே
நீ தோன்றுகிறாய்.

## விக்கி பீவர் / Vicki Feaver
## கையிழந்த கன்னி / The Handless Maiden

அவள் வாயிலிருந்து நீர் முழுவதும் ஒழுகிய பிறகு
உலர்ந்த சேற்று மண்ணால்
அவளின் கைகளையும் கால்களையும்
மார்பையும் வயிற்றையும் முதுகையும் நான் தடவிய பிறகு
புல் மெத்தையில் அவளைக் கிடத்தி உறங்க வைத்த பிறகு
ஈரஞ்சொட்டும் அவளுடைய ஆடைகளை
புதர்ச் செடிகளின் மீது விரித்துவிட்ட பிறகு
மீண்டும் அவளை எடுத்துக்கொண்டேன் -
என் மார்பிலும் தோளிலும் அவளின் வெப்பம் பரவ
என் கழுத்தின் மீது அவளின் மூச்சுக் காற்று
சிலிர்க்கும் சிறகைப்போல் படுவதை நம்ப இயலாமல்
நான் என்னை அழவிட்டுவிட்டேன்.
என் தகப்பன் வெட்டியெறிந்த என் கைகளுக்காக,
பிண்டமாய் அரிப்பெடுத்த தழும்புகளைக் கொண்ட கைகளுக்காக,
நூலைச் சுற்றவும் நெய்யவும் இயன்ற
ஆயினும் உணர்ச்சியே இல்லாத கைகளுக்காக
நான் அழுதேன்.
பொங்கி வந்த ஆற்றில் நான் நீர் அருந்தியபோது,
இறுகக் கட்டியிருந்த துணி அவிழ்ந்து என் குழந்தை
கீழே விழுந்தபோது என் உதவ இயலாத, கணவன் கொடுத்த
கைகளற்ற உலோகக்கைகளுக்காக
நான் அழுதேன்.
சிவப்பு-ஆரஞ்சு வண்ணச் சேற்றில் விழுந்த
என் கைகளுக்காக, இவற்றை எழுதுகிற கைகளுக்காக,
அவளின் நெளிவான மணிக்கட்டைப் பிடித்திருந்த
கைகளுக்காக நான் அழுதேன்.


படிப்பகம்

www.padippakam.com

## கிலியன் ஸ்டோன்ஹாம் / Gillan Stoneham
## யானைகள் / Elephants

இரண்டாவது மாடியிலிருந்த தனது சிறிய,
திறந்த ஜன்னல்களைக் கொண்ட வெற்று அறையில் இருந்துகொண்டு
"யானைகள், யானைகள்!" என்று கத்தினார் அவர்:
தன் வாழ்நாளெல்லாம்
யானைகளைப் பார்க்கவே அவர் விரும்பினார்.
எதிர்த்தெருக்காரர்கள்
உருட்டும் சப்தத்தோடு பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு இருந்தவர்கள்,
அறைகளில் உட்கார்ந்துகொண்டு தங்களுக்கு முக்கியமான
அரசியல் விவாதத்தில் ஈடுபட்டவர்கள்,
கொல்லைப் புறத் தோட்டத்தில் உருளைக்கிழங்கைப் பராமரித்தவர்கள்
தங்கள் வேலைகளைக் கைவிட்டுவிட்டு,
கோடைக்கால ஜன்னலினூடாகப் பார்த்தவாறே
"அந்தக் கிழவன் தான் மீண்டும் கத்துகிறான்" என்றார்கள்.
அவருடைய உறவினர்கள் ஒருகணம்
தங்கள் சிந்தனையை நிறுத்திவிட்டு
வேதனைப் பெருமூச்சு விட்டார்கள்.
ஆனால்
ப்ரம்மாண்டமானவையெனினும் கனிவான யானைகள்
தங்கள் கூருணர்வுள்ள துதிக்கைகளால் காற்றை ஊதித் தள்ளி
மிகவும் மென்மையாக நடந்துகொண்டிருக்க,
படுக்கையின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு
திருப்தியுடன் சிரித்துக்கொண்டிருந்த கிழவரின்
சதுரமான சிறிய அறைக்குள்ளே
சென்று பார்த்தவர் யாருமில்லை.

## க்வாமே டாவஸ் / Kwame Dawes
## புதிய அண்டை வீட்டுக்காரர்கள் / New Neighbours

இங்கே ஒரு பாதை இருப்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்
அதை நீங்கள் கண்டிப்பாக

அமைதியாகக் கண்டுபிடியுங்கள்
கண்டுபிடித்த பின்னர்

உங்களுடனே பாதுகாப்பாய் வைத்திருங்கள்
ஒரு மந்திரக் கவசம் போல

விரலால் மட்டுமே தொடுங்கள்
பாதையின் கோட்டை

அழித்து விடாதீர்கள்



படிப்பகம்

www.padippakam.com

## பீட்டர் ரெட்கிரோவ் / Peter Redgrove
## பெற்றோர் எண்மர் / Eight Parents

1.
பிரகாசமான காலப் புத்தகத்தின் உச்சக்கட்டத்தில்
தோன்றும் மும்மூர்த்திகள்
ஒரே மாதிரியான தாடிகளும் வெளுப்பான தோற்றமும்
கொண்ட யேசுவின் உருவங்களாகவே தோன்றுகின்றன.
இக்காட்சி கண்களைத் தடுமாறச் செய்கிறது
திரிநிலைத் தொலை நோக்கியைப் போல.

2.
இந்த தெய்வ உருவப்படம்
ஞாபகப் படுத்துகிறது
என் அம்மாவின்
முப்புறம் கொண்ட நிலைக்கண்ணாடியை.
மேலும் மூன்று அம்மாக்கள் தோன்றினார்கள்
அங்கே அவள் உட்கார்ந்தபோது.

3.
என்னைப் பார்த்துச் சிரித்தாள்
நான்காம் அவள்
மூவரும் ஒரே சமயத்தில்
கண்ணாடி ஜன்னல்களுக்கு அப்பால்
தங்கள் பார்வைக்கு அகப்படாத
யாரையோ திரும்பிப் பார்த்தார்கள்.
அவள் எழுந்தாள்,
சிம்மாசனங்களும் காலியாயின.

4.
சுமார் பததாண்டுகளுக்குப்பின்
அவளின் சிம்மாசனம் காலியான பிறகு
அதே கண்ணாடி முன் அமர்ந்து
என் அப்பா இறந்து போனார்.
உயில் சாசன அதிகாரிகளுக்காய்
தன் வரவு செலவு கணக்குகளை
விளையாட்டு மேஜையின்மேல்
விரித்த சீட்டுக்கட்டாய் ஒப்படைத்து விட்டு
காலஞ்சென்ற மனைவியின் படுக்கையறைக்கு
படியேறி அம்மாவின் கண்ணாடி முன் அமர்ந்தார்
தன்னைப் போலவே மூவர் இருப்பதைக் கண்டார்
நெஞ்சம் வெடித்து
அழைத்துச் சென்றது அவரை
கண்ணாடிகளின் உலகத்துக்கு.


படிப்பகம்

www.padippakam.com

5

அந்தக் கண்ணாடி எங்கே போயிற்று?
பழைய வீட்டை அல்லது படுக்கையை
நீங்கள் வாங்கவும்
அதில் யாரோ ஒருவர் இறந்ததை அறியவும்
இயலக் கூடும்.

6

ஆனால் டிரெஸ்ஸிங்-டேபிளின் மூன்று கண்ணாடிகள்....?
உண்மையைத் தேடி
'கண்ணாடியில் இறந்துபோனது யார்?' என்று
அதை விற்பவனை விசாரிப்பீர்களா?
அடையாளங்கள் எவற்றையும்
விட்டுச் செல்வதில்லை மரணம்
கண்ணாடியின்மீது.

## எலியனோர் குக் / Eleanor Cooke

## சைக்கிளின் மீது ஒரு மனிதன் / Man on a bicycle

மையத்திலிருந்த கல்லின் மீது
அமர்கின்றன தேனீக்கள்
சைக்கிளில் வந்த மாணவர்களால்
நிரம்பியிருக்கிறது கோயில்தோட்டம்
முற்றத்துக்குள்ளே சைக்கிளில் வருகிறான் ஒருவன்.

தான் சொன்ன இடத்தில்தான் உள்ளன தேனீக்கள்
என்று மாணவர்களிடம் சொன்னார் பேராசிரியர்:
"எனக்காக நாட்டியமாடும் தேனீக்கள்
எங்கே போகுமென்று எனக்கே தெரியும்".

தேனீக் கூட்டத்திலிருந்து விலகி
அவருடைய குறியின்மீது படையெடுத்து
ஆடையினூடாகக் கொட்டுகிறது ராணித் தேனீ.
காற்றிலே தாவி, சுருள் சுருளாகத் திருகி,
மிதிக்கட்டையை இயக்கிச் செல்கிறார் பேராசிரியர்.
தேனீக்களுக்காக நாட்டியமாடுகிறார்.
உற்றுநோக்கி, அவருக்கும் சூரியனுக்கும் இடையிலான
கோணத்தைக் கணக்கிட்டு,
சவாரி செய்பவர் இன்றியே
வானத்தில் மிதக்கிறது சைக்கிள்.


படிப்பகம்

www.padippakam.com

## மொனிஷா ஆல்வி / Moniza Alvi
## புடவை / The Sari

அம்மாவின் உள்ளேயிருந்து உற்றுப் பார்த்தேன்
ஒரு ஜன்னல் கண்ணாடியின் வழியாக.
வெப்பமும் பழுப்பு வண்ணமுமாக இருந்தது வெளி.

எல்லாரும் என்னையே கவனித்தார்கள்
அப்பா, பாட்டி,
சமையற்காரச் சிறுவன், வீட்டைப் பெருக்கும் பெண்,
கூர்ந்த தோள்பட்டை கொண்ட மாடு,
உள்ளூர் அரசியல்வாதிகள்.

தொலைநோக்கியால்
கண்டங்களுக்கும் அப்பால் நோக்கினாள்
என் ஆங்கிலேயப் பாட்டி.

எல்லாருமாக விரித்துப் பிடித்தார்கள் ஒரு புடவையை.
நிறைய நட்சத்திரங்களோடு மின்னியபடி,
குருவிகள், கௌதாரிகளோடு படபடத்துக்கொண்டு
அரபிக்கடலுக்கும் அப்பால்
லாகூரிலிருந்து ஹைதராபாத் வரை
விரிந்திருந்தது அது.
புடவையின் நூலிழைகளை சாலைகளாகவும்
நிலங்களின் ஏற்ற இறக்கங்களாகவும் நெய்தார்கள்.
முடிவாக
'உன்உடல்தான் உன் நாடு' என்று முணுமுணுத்தவாறு
என்மீது புடவையைச் சுற்றிப் போர்த்தினார்கள்.

## D.J. Enright / டி.ஜே. என்ரைட்
## Coming True/ உண்மையாதல்

வெற்றுச் சொற்கள் உண்மையாகின்றன (அவை தான் எப்படி இகழப்பட்டன!) சூரியன் உதிக்கிறது; சூரியன் மறைகிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பருவம் உண்டு; முழங்கால்கள் நடுங்குகின்றன; ஆசை தோற்கிறது. (அமைதியாகக் குடிப்பதற்கான ஆசை தவிர) கடின உழைப்பாளிகள் இப்போது முன்பு போல இல்லை. (அன்று இந்த அளவுக்கு அவர்கள் இருந்ததில்லை) நன்றாகப் பார்க்க முடிவதில்லை; புத்தகங்களைப் படிப்பது விரைவில் முடிவுக்கு வந்துவிடும். கேட்கவும் முடியவில்லை: மூன்றாவது அலைவரிசையில்வானொலியின் இசைப்புத்ரிகளின் குரல் தாழ்ந்துவிட்டது. உங்கள் உழைப்பைப் பரிசீலிக்கிறீர்கள்; பெரும்பாலும் அது வீண் அல்லது வேதனையானது. கடந்த கால விஷயங்கள் நினைவுக்கு வரப் போவதில்லை. அச்சங்கள் தெருவில் நடமாடுகின்றன. குவளைகளும் கோப்பைகளும் உடைபடுகின்றன. சிள் வண்டுகள் - அவற்றில் ஏதேனும் விட்டு வைக்கப்பட்டிருந்தால் - விஷப் பூச்சிகளாகின்றன. ஆம், அறிவாளிகளின் வார்த்தைகள் (அவை நாசமாய்ப் போக!) ஆணிகளைப் போன்றவை. ஒரு ஆணி இன்னொரு ஆணியை வெளியேற்றுகிறது. எனவே, நல்ல சில வெற்றுச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# டேனி ஆப்சே / Dannie Abse
## ஜன்னல் கண்ணாடியில் வழியும் எழுத்துக்கள் / Condensation on a Window pane

1

எளிய விஷயம் எதையேனும் எழுத நான் விரும்புகிறேன்,
எளிமையான எதையேனும் - சில பெயரடைகளையும்
அனுமதிக்கப்படாத பலபொருட் சொற்களையும் தவிர்த்துவிட்டு.

பழைய பாணியில் உள்ள எதையேனும்:
காலம் பற்றிய கதையை, அல்லது,
இன்னும் துணிச்சலோடு, காதலைப் பற்றிய கதையை.

எல்லாரும் புரிந்துகொள்ளும்படியான
எளிய விஷயம் எதையேனும் எழுத நான் விரும்புகிறேன்,
சுத்தமான தண்ணீர்போல எளிமையான எதையேனும்.

ஆனால் சுத்தமான தண்ணீர்
என்பது $H_2O$
மேலும் அது சிக்கலானது
நீராவியைப் போல, பனிக்கட்டியைப் போல மேகங்களைப்போல.

2

கண்ணாடியின்மீது என்விரல்
கீச்சொலி எழுப்புகிறது.
<u>ஜோன்</u> என எழுதுகிறேன்
<u>டேனி</u> என எழுதுகிறேன்
கற்பனை செய்து பாருங்களேன்!
மீண்டும் நானொரு காதல் வயப்பட்ட இளமையில்
பலபொருட் சொற்களின்றி
எதையேனும் சொல்ல விரும்புகிறேன்.
கற்பனை செய்து பாருங்கள்!
ஓய்வூதியம் பெறும் வயோதிகத்தில் நான்
காதலையும் காலத்தையும் பற்றி
ஏதேனும் சொல்ல விரும்புகிறேன்
நீரைப் போல் எளிய காதலைப்பற்றி.

ஆனால்
நீர் சிக்கலானது,
அது $H_2O$, அது பனிக்கட்டி, அது நீராவி, அது மேகம்
என்று நீண்ட காலத்துக்கு முன்பே நமக்குத் தெரியும்.
ஜன்னலில் எழுதப்பட்ட நம் பெயர்கள்
மங்கலாக ஆகத் தொடங்கிவிட்டன.
அவை மறைய மறைய
மெதுவாக, மெதுவாக அழுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## Ann Sansom / ஆன் ஸான்ஸெம்
## Voice / குரல்

எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள்.
உடைந்த இதயத்தின் குரலை,
'வாழ்க்கை, பெண்கள், காதல் ஆகியவற்றின்
மரணத்தால் வருத்தமடைந்திருக்கிறேன்' என்ற குரலை
ஒரு முறையேனும் பயன்படுத்தாமலிருங்கள்.
'கொஞ்சம் உதவி செய்தால் போராட முயற்சி செய்வேன்'
என்ற குரலில் அழையுங்கள்.

வாக்குறுதிகளின், சாபங்களின் குரலிலிருந்து
எனக்கு விலக்கு அளியுங்கள்
'உள்ளே வரும்போது என்னை அழையுங்கள்'
'நான் கண்ட சிக்கல்கள் யாரும் கண்டதில்லை'
'உன் அறிவுரையை மதிக்கிறேன்' என்னும் குரல்களிலிருந்தும்.

'அது எப்படி இருந்தது' என்னும் குரலை
'பொறுப்பற்றவனெனினும் இனிமையானவன்தானே நான்'
என்னும் குரலை
'முன்கூட்டியே எச்சரிக்கிறேன் விபச்சாரி மகனான நான்'
என்னும் குரலை

'எல்லாருமே பலஹீனமானவர்கள் தான்
என் பலஹீனம் சற்று குரூரமானது' என்னும் குரலை
நான் விரும்புகிறேன்.

'வாழ்க்கை குறுகியது, நேரத்தை வீணடித்தல்
குற்றம்' என்னும் குரலை
'தொடர்பு கொண்டிரு ஆனால் தொடாமலிரு
என்னும் குரலை விரும்புகிறேன்
'விஷயங்களைப் பற்றிப் பேசாமலிருப்பது நல்லது'
என்னும் குரலை, 'விஷயங்களைப் பற்றி
குரல் கொடுக்காமலிருப்பது அறிவுப் பூர்வமானது'
என்னும் குரலைக் கேட்க விரும்புகிறேன்.

## Frank Kuppner / ப்ராங்க் குப்னர்
## From Last Eternal Moments (Section 76) / 'இறுதியான நித்யகணங்கள்' - விருந்து (பகுதி 76)

மிகவும் நேசிப்பதால் தான் கடவுள்
நம்மைத் துன்புறுத்துகிறார் என்று எண்ணுகின்றனர் சிலர்.
மாறாக மிகவும் வெறுத்து நம்மை அவர் கருணையோடு
நடத்தாமலிருப்பது அவமானமாயிருக்கிறது.
ஆறேழு வருடங்களாய் தினசரி மாலை நேரம்
தனக்கு வழங்கப்பட்ட மத பிம்பத்தின் முன்னால்
நடுத்தர வயதுள்ள குற்றமிழைக்காத ஒரு பக்தை
எரியும் மெழுகுவர்த்தியுடன் தீவிரமாய்ப் பிரார்த்திப்பாள்
எதற்காக எனத் தெரியாதெனினும்
இதற்காக இல்லை எனத் தெரியும். ஒரு இரவில்
அவளின் எளிதில் தீப்பற்றக்கூடிய இரவு ஆடையின்
விளிம்பைப் பிடித்துக்கொண்டது மெழுகுவர்த்தி;
அவளை நெருப்பால் சூழ்ந்து சாகும்வரை எரித்தது.
அவளுடைய நேசமான கடவுளிடம்
கொண்டு செல்லப்பட்டாள் அவள்
அவள் உதடுகளில் ஒரு கேள்வி இருந்திருக்கக்கூடும்.
நேசத்தின் கடவுள் தனக்கு அடையாளத்தை
அணிந்திருப்பார் என நம்புவோம்
செயல்களின் ஒளியில் பண்பைக் காண்பவர்களால்
அவர், அவருடைய எதிரியாக எளிதில்
தவறுதலாகப் புரிந்துகொள்ளப்படக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com



# கார்லோஸ் ஃபியூண்டஸ்

## (1928- )

சர்வதேச அங்கீகாரம் பெற்ற, மிக முக்கியமான லத்தீன் அமெரிக்கப் படைப்பாளி. மிகச் சிறந்த நாவலாசிரியர். சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், அரசியல் விளக்கக் கட்டுரைகள் ஆகியவற்றிலும் இவர் பங்கு குறிப்பிடத்தகுந்தது. லத்தீன் அமெரிக்க படைப்பிலக்கியவாதிகளில் அதிபுத்திசாலி என்று கருதப்படுகிறவர்.

1928, நவம்பர் 21 இல் மெக்ஸிகோவில் பிறந்த கார்லோஸ் ஃப்யூண்டஸ், தூதரகப் பணிகள் நிமித்தம் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்த தந்தையோடு பல நாடுகளுக்கும் சென்றவர்.

மெக்ஸிகோவில் சட்டப் படிப்பும் (1948) ஜெனிவாவில் சர்வதேச உறவுகள் பற்றியும் படித்துப் பட்டங்கள் பெற்றார். சர்வதேசத் தொழிலாளர் அமைப்புக் குழுவின் மெக்ஸிகோ செயலராக இருந்த அவர் அதனைத் தொடர்ந்து ஜெனிவாவில் மெக்ஸிகோ தூதரகத்தின் கலாச்சாரப் பிரதிநிதியானார் (1950-52) பின் மெக்ஸிகோ நகரில் ஐக்கிய நாடுகள் தகவல் மையத்தின் செய்திப் பிரிவுச் செயலராகப் பணி புரிந்தார். 1975-77களில் பிரான்ஸில் மெக்ஸிக தூதராகச் செயல்பட்டார்.

தற்சமயம் அமெரிக்காவில் நியூ ஜெர்ஸியில் வசிக்கும் ஃப்யூண்டஸ், கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம், பெர்னார்டு கல்லூரி, கொலம்பியா பல்கலைக்கழகம், பென்சில்வேனியா பல்கலைக் கழகம், பிரின்ஸ்டைன் பல்கலைக்கழகம், ஹார்வார்டு பல்கலைக்கழகம் போன்றவற்றில் பல்வேறு ஆசிரியர் பதவிகளைக் கடந்த ஆண்டுகளில் வகித்திருக்கிறார்.

1958 இல் இவருடைய முதல் நாவலான where the Air is Clear வெளிவந்தது. 1910-20 புரட்சிக்குப் பிந்திய மெக்ஸிகோ பற்றிய நுட்பமான, தீர்க்கமான அணுகலாக அமைந்திருந்த இந்நாவல் மெக்ஸிகோவில் அதிர்வலைகளை எழுப்பியது. The Good conscience (1959) நாவல், ஜெய்ம் செபல்லோவின் கல்வி பற்றியும், கடைசியில் மெக்ஸிக நிர்வாகத்துக்குள் அவர் அமிழ்ந்து விடுவது பற்றியும் விளக்குகிறது. The death of Artemio cruz (1962) ஆர்சன் வெல்ஸின் மகத்தான திரைப்படமான citizen kane இன் பாதிப்பில் உருவான நாவல். Holy place (1967) நாவல், தன் அம்மாவிடம் காமம் கொள்ளும் ஒடிபஸ் ரீதியிலான ஒரு இளைஞனை முன் வைத்து மெக்ஸிகோவின் புதுப் பார்வையில் அணுகுகிறது. A change of Skin (1968), வெளிநாட்டவருக்கும் மெக்ஸிகர்களுக்கும் இடையில் நிலவிய உறவைப் பரிசீலிப்பதன் மூலம் அறுபதுகளில் மெக்ஸிகோ வெளியுலகோடு கொண்டிருந் உறவைப் பதிவு செய்யும் நாவல்.

Terra Nostra (1976) வேறு திசையில் கவனம் செலுத்திய நாவல். ஹிஸ்பானிக் கலாச்சாரத்தில் எங்கு, எப்படி தவறு நிகழ்ந்தது என்பதை அறியும் முகமாக அக்கலாச்சாரத்தில் மெடிட்டேரனியனின் மூலங்களைக் காண முற்படுகிறார். புனிதம் மற்றும் ஆசாரத்தை பிலிப் II கிறுக்குத்தனமாக வலியுறுத்தியதும், ஸ்பானிய கலாச்சாரத்திலிருந்து யூத மற்றும் அராபிய நவீனத் தன்மைகளை அவர் ஈவிரக்கமற்று நிர்மூலமாக்கியதுமே வீழ்ச்சியின் அடிப்படை என்று கண்டடைகிறார். Terra Nostraவும் செர்வாண்டிஸ் பற்றியும் ஃப்யூண்டஸ் கட்டுரைகளும் எல்லாத் தளங்களிலுமான ஹிஸ்பானிக் ஆய்வில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கின. துண்டுபட்ட ஹிஸ்பானிக் உலகில் ஒருமையைக் காண்பதில் புதிய பாதையை அவை வகுத்துள்ளன.

The Hydra Head (1979) நாவல், இயற்கையின் ஆற்றலைப் பரிசீலிக்கும் வகையில் மெக்ஸிகோவின் எண்ணெய் வளங்களைக் குறியீடாக்கி சமகாலத்திய மெக்ஸிகோவை அணுகுகிறது. Distant Relations (1981) ஒரு படைப்பாளி எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும், எல்லாவற்றையும் முன்வைக்க வேண்டிய அவசியத்தையும் பரிசீலிக்கும் நாவல்.

Christopher unborn (1987). புதிய உலகு கண்டுபிடிக்கப்பட்ட ஐந்நூறாம் ஆண்டு நிறைவு நாளான 1992 அக்டோபர் 12 ஆம் நாளைக் களமாகக் கொண்டு ஐந்நூறு ஆண்டுகள் பற்றிய கணிப்பையும், அந்த நிறைவு நாளில் மெக்ஸிகோ நாடும் நகரமும் எப்படி இருக்குமென்ற கற்பனையும் பின்னிப் பிணைத்து உருவான நாவல்.

கார்லோஸ் ஃப்யூண்டஸ் பல்வேறு கால கட்டங்களில் எழுதிய சிறுகதைகள் Burnt water (1981) என்ற தொகுப்பாக வெளிவந்திருக்கிறது—

நன்றி : பாரிஸ் ரிவ்யூ – 1981
நேர்காணல் : ஆல்ஃபிரெடு மெகாடம்
சார்லஸ் ருயாஸ்

மொழிபெயர்ப்பும்
குறிப்பும் : சி. மோகன்.



படிப்பகம்

www.padippakam.com



## கார்லோஸ் ஃப்யூண்டஸ்

ப்யூண்டஸ்: 1977 ஏப்ரல் முதல் தேதி பிரான்ஸ் நாட்டு தூதர் பதவியிலிருந்து விலகினேன். உடனடியாக, பாரீஸின் வெளிப்புறத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கிருந்தபடி மீண்டும் எழுதத் தொடங்கினேன். மனசாட்சியுள்ள ஒரு டிப்ளமட் ஆக இருந்ததால் இரண்டு வருடங்களாக நான் ஒரு வார்த்தை கூட எழுதியிருக்கவில்லை. நான் வாடகைக்கு எடுத்திருந்த வீடு இயல்பாக அப்படி அமைந்தது- குஸ்தவ்டோர்க்குச் சொந்தமானது. வடிவமும் அச்சமும் குறித்த என் பேராவலை அந்த வீடு எனக்குத் திரும்பவும் அளித்தது. அங்கிருந்த “லிட்டில் ரெட் ரைடிங் குட்” என்ற டோருடைய வரைபடங்கள் கொஞ்சமும் நம்ப முடியாத அளவு மிகவும் காம உணர்வைத் தூண்டுவனவாக அமைந்திருந்தன. உதாரணமாக, படுக்கையில் ஓநாயுடன் சிறுமி! இந்தச் சூழ்நிலையில் தான் என் சமீபத்திய நாவலான Distant Relati ons, பிறந்தது.

கேள்வி: நீங்கள் தூதராக இருந்தபோது உங்களால் எழுத முடியாமல் போனது ஏன்?

ப்யூண்டஸ்: அரசியல் விவகாரம் என்பது ஒரு வகையில் எழுத்துக்கு எதிரானது. நீங்களே பலவாறாகப் பிரிந்து அதில் செயல்படவேண்டும்; ஒரு பெண் அழுது கொண்டே வருவார். ஏனென்றால் அவருக்கு செயலருடன் சண்டை நடந்திருக்கும்; ஏற்றுமதி இறக்குமதி விவகாரங்கள்; மாணவர்கள் பிரச்சனை; தூதரக அலுவல்கள், எழுத்துக்கு எழுத்தாளனின் ஒரு முகத் தன்மை அவசியம். அதைத்தவிர வேறெதுவும் செய்யக்கூடாது என அது வலியுறுத்துகிறது. இப்போதெல்லாம் நான் அதிகமாகவே எழுதுகிறேன். தவிர, எப்படி எழுதுவதென்பதையும் நான் கற்றுக் கொண்டேன். அதற்கு முன்பு, எப்படி எழுதுவதென்பது எனக்குத் தெரியாது. ஒரு உயர் மட்ட அதிகாரியாக இருந்ததன் மூலம் நான் அதைக் கற்றுக் கொண்டதாகவே நினைக்கிறேன். உயர்மட்ட அதிகாரியாக இருக்கும் போது நிறையவே மன அளவிலான நேரம் கிடைக்கிறது. யோசிப்பதற்கு அவகாசம் இருக்கிறது; தலைக்குள் எப்படி எழுதுவதென்பது உங்களுக்கு பிடிபடுகிறது: நான் இளைஞனாக இருந்த போது மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறேன். 'மால்லார்மே'யின் வெற்றுத்தாளை வைத்துக்கொண்டு, என்ன சொல்லப் போகிறேன் என்பது தெரியாமல் ஒவ்வொரு நாளும் போராடி இருக்கிறேன். இப்போராட்டத்தில் அல்சரை சம்பாதிக் கொண்டேன். முழுமூச்சான மனோபலத்தில் அதை நான் முடித்தேன். ஏனெனில் இருபது முப்பது வயதுகளில் எழுதும் போது உங்களுக்கு போதிய வலு இருக்கிறது. பின்னர், உங்கள் சக்தியை முறையாகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. நான் அலுவலக மேஜைக்குப் பின் இரண்டு ஆண்டுகள் இருந்ததன் உண்மை ஒரு வேளை இதுவாகத்தான் இருக்குமென்று இப்போது அது பற்றி யோசித்துப் பார்க்கும்போது தோன்றுகிறது: என் மனம் விச்ராந்தியாக இருந்து அது தனக்குள்ளாக எழுதிக் கொள்ளவும், அந்தப் பதவியை விட்டு விலகியதும் நான் எழுதப் போவதைத் தயார் செய்து கொள்ளவும் வகை செய்தது. ஆக எழுத உட்கார்வதற்கு முன்பாகவே என்னால் இப்போது எழுத முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

வெற்றுத் தாளை இதற்கு முன் பயன்படுத்தியிராத வகையில் என்னால் இப்போது உபயோகிக்க முடியும்.

கேள்வி: எழுதுவதற்கான தயாரிப்புகள் உங்களுக்குள் எப்படி நிகழ் கிறது.

ப்யூண்டஸ்: நான் காலை நேர எழுத்தாளன். எட்டரை மணிக்கு எழுதத் தொடங்கி 12 ½ வரை தொடர்ந்து எழுதுவேன்; பின் நீந்தச் செல்வேன். திரும்பி மதிய உணவு; மதியத்தில் வாசிப்பு; அதன் பின் அடுத்த நாள் எழுத வேண்டியதை முன் வைத்து நடக்கத் தொடங்குவேன். எழுத உட்கார்வதற்கு முன்பாக தலைக்குள் என் புத்தகத்தை நான் இப்போது எழுதிக்கொள்ள வேண்டும். இங்கு பிரின்ஸைட்டனில் நடந்து செல்வதை ஒரு முக்கோண வடிவத்தில் பின்பற்றுகிறேன்; மெர்சர் தெருவிலுள்ள ஐன்ஸ்டைனின் வீட்டுக்குச் செல்வேன். அங்கிருந்து திரும்பி ஸ்டாக்டன் தெருவிலுள்ள தாமஸ் மன்னின் வீடு; பின் அங்கிருந்து ஈவ்லின் பகுதியிலுள்ள ஹெர்மன் பிராக் வீடு. இந்த மூன்று இடங்களுக்கும் சென்ற பிறகு வீட்டுக்குத் திரும்புவேன். அதற்குள்ளாக, நாளைக்கான 6 அல்லது 7 பக்கங்களை மனதளவில் எழுதி முடித்திருப்பேன்.

கேள்வி: மீண்டும் எழுதுவதென்பது விரிவானதாக இருக்குமா? அல்லது மனதளவில் எழுதியதைக் கணக்கில் கொண்டே அமையுமா?

பதில்: நான் தாளில் பதிவு செய்தவுடன் அது நடைமுறையில் முடிந்து விடுகிறது; எந்த ஒரு பகுதியோ, காட்சியோ விடுபட்டிருக்காது. அடிப்படையில் விஷயங்கள் எவ்விதம் நகர்கின்றன என்பது எனக்குத் தெரியும். கிட்டத்தட்ட அவை என் தீர்மானத்தில் இருக்கின்றன. அதே சமயம் ஆச்சரியமெனும் அம்சத்தை நான் எனக்குள்ளேயே தியாகம் செய்து விடுகிறேன். நாவல் எழுதும் எவரும் ப்ராஸ்டிய பிரச்சனையில் தாம் ஈடுபடுவதை அறிந்திருக்கிறார்கள். தான் எழுத இருப்பதை ஏதோ ஒரு வகையில் அறிந்திருக்கும் அதே சமயம் அது என்னவாக வெளிப்பட்டிருக்கிறது என்பதானது திகைப்பூட்டுவதாக இருக்கிறது. ப்ராஸ்ட் தான் என்ன எழுதப் போகிறதாக நினைத்தாரோ அதைத்தான் எழுதினார். எனினும் அது பற்றி தான் எதுவுமே அறிந்திருக்கவில்லை என்பதாகத்தான், எழுதினார் - இது பிரமிப்பூட்டுவது. ஒரு வகையில் நாம் எல்லோருமே இத்தகைய சாகசச் செயலில் தான் ஈடுபட்டிருக்கிறோம். நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதை அறிந்திருப்பது; உங்கள் விஷயங்களை உங்கள் கைக்குள் வைத்திருப்பது; அதே சமயம் ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்திரம் கொண்டிருப்பதில் கிடைக்கும் கண்டுபிடிப்பு, திகைப்பு, மேலும் வாசகனின் முன் தீர்மானிக்கப்பட்ட சுதந்திரம்.

கேள்வி: இங்கிலாந்திலும் ஐக்கிய நாடுகளிலும் எடிட்டர்களின் வரலாறு குறித்தும் இலக்கியத்தில் அவர்களது செல்வாக்கு குறித்தும் எழுத முடியும். அத்தகையதொரு வரலாறு, ஹிஸ்பானிக் உலகில் சாத்தியமா?

ப்யூ: சாத்தியமேயில்லை. ஏனெனில், ஸ்பானிய 'ஹிடல்கோ' (கௌரவமிக்க கீழ்நிலைப் பணியாளர்) வின் கௌரவம்,நம்முடைய படைப்பில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு எளிய உழைப்பாளி சொல்ல முன்வருவதை ஒரு போதும் அனுமதிப்பதில்லை. ஸ்பெயினிலிருந்து நாம் உள்வாங்கிய



படிப்பகம்

www.padippakam.com

மிகையான பெருமிதத்தாலும், அபரிதமான தனித்துவத்தாலும் உருவான பயங்கர மனச்சிதைவில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த உண்மையிலிருந்து இது உருவாகிறது. ஒரு ஹிடல்கோ தனக்கு மேலான அதிகாரத்திற்குத் தான் பணிவதை போல, ஒவ்வொருவரும் தனக்குப் பணிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். லத்தீன் அமெரிக்காவில் நீங்கள் யாருடைய பிரதியையாவது எடிட் செய்ய முயற்சித்தால்,ஒரு சர்வ சாதாரண எழுத்தாளன் கூட உடனடியாகப் பின் வாங்கி. நீங்கள் தணிக்கை செய்வதாகவோ அல்லது அவனை அவமதிப்பதாகவோ குற்றம் சாட்டுவான்.

*கேள்வி: அப்படியானால், உங்கள் சமூகத்துடனான உங்கள் உறவு ஒரு அமெரிக்க எழுத்தாளரிடமிருந்து வேறுபட்டது என்று சொல்வீர்களா? உதாரணமாக ஹிடல்கோ படிமமானது, உங்கள் கலாச்சாரத்தில் எழுத்தை மிகுந்த கௌரவமாகக் கருதுகிறதா?*

ப்யூண்டஸ்: ஒரு மெக்ஸிக எழுத்தாளன் என்ற முறையில் என் நிலை கீழை ஐரோப்பிய எழுத்தாளர்களைப் போன்றது. நம் சமூகங்களில் பேச்சுக்கான சலுகைகள் இருக்கின்றன. ஆனால் அங்கு அப்படியான சலுகைகள் அரிது. மத்திய ஐரோப்பியாவில் உள்ளதைப் போல நாங்கள் மற்றவர்களுக்காகப் பேசுகிறோம்; லத்தின் அமெரிக்காவில் இது மிக முக்கியமானது. அந்த அதிகாரத் துக்காக நீங்கள் கடன் பட்டிருக்கிறீர்கள் என்பதென்னவோ உண்மை தான்; ஒன்று நீங்கள் சமூகத்திற்காக உழைப்பீர்கள் அல்லது தலை குப்புற விழுவீர்கள்.

*கேள்வி: உங்கள் கலாச்சாரத்தின் அதிகார பூர்வ பிரதிநிதியாக உங்களை நீங்கள் கருதுகிறீர்கள் என்று இதற்கு அர்த்தமா?*

ப்யூ: இல்லை; நான் அப்படி இருக்க விரும்பவில்லை, பிரெஞ்சு சர்ரியலிஸ வாதியான ஜேக்யூஸ் வாக் கூறியதை நான் எப்போதுமே நினைவில் கொண்டிருக்கிறேன்; தனது நாட்டின் பிரதிநிதியாக இருப்பதை போல் ஒரு மனிதனைக் கொல்லக் கூடியது வேறெதுவுமில்லை.

*கேள்வி: அமெரிக்க எழுத்தாளர்களுக்கும் லத்தின் அமெரிக்க எழுத்தாளர்களுக்குமிடையேயான சமூகக் கடமைகளில் ஏதும் வித்தியாசம் இருக்கிறதா?*

ப்யூ: அமெரிக்க எழுத்தாளர்கள் செய்ய வேண்டியதை விடவும் நாம் நம் கலாச்சாரத்தில் செய்தாக வேண்டிய விஷயங்கள் அதிகம். அவர்களுக்கென்றும் அவர்கள் எழுத்துக்கென்றும் அவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது; ஆனால் நமக்கிடையே சமூக எதிர்பார்ப்புகள் - கடமைகள் இருக்கின்றன. பாப்லோ அடிக்கடி சொல்லும் ஒரு விஷயம்: ஒவ்வொரு லத்தீன் அமெரிக்க எழுத்தாளனும் ஒரு கனத்த உடலை இழுத்துக் கொண்டு செல்கிறான் - மக்களுடைய, கடந்த காலத்தினுடைய, தேசிய வரலாற்றினுடைய உடலை. கடந்த காலத்தின் மித மிஞ்சிய பளுவை நாம் தம்வயப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது; வாழ்க்கை நமக்குத் தந்திருப்பதை அப்போது நம்மால் மறுக்க முடியாது. உங்கள் கடந்த காலத்தை நீங்கள் மறந்தால் இறந்து விடுவீர்கள். கூட்டு முயற்சிக்கான சில கடமைகளை



படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்றியாக வேண்டும். ஏனெனில் ஒரு எழுத்தாளனாக அல்லாமல் ஒரு குடிமகனாக சில கடமைகள் இருக்கின்றன. இதற்காக உங்களது அழகியல் சுதந்திரத்தையும், உங்களது அழகியல் சலுகைகளையும் நீங்கள் ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இது பதட்டத்தை உருவாக்கும். ஆனால் எவ்விதப் பதட்டமுமின்றி இருப்பதை விடவும் சமயங்களில் ஐக்கிய நாடுகளில் நிகழ்வதைப் போல - இந்தப் பதட்டத்தைக் கொண்டிருப்பது நல்லது என்றே நினைக்கிறேன்.

கேள்வி: உங்கள் ஆரம்ப கால படைப்புகளில் 1910-20 புரட்சிக்கு பின்னான மெக்ஸிகோ வாழ்வை மையப்படுத்தினீர்கள். அது உங்களுடைய மெக்ஸிகோ. ஒரு மெக்ஸிகோ எழுத்தாளராக அந்தப் படைப்புகளில் உங்களை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால், 'The Death of Artemio Cruz'க்குப் பின், நீங்கள் உலக அளவில் மிகவும் பிரசித்தி பெற்ற பிறகு, உங்கள் நிலைபாடு மாறிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ப்யூ: இல்லை, எல்லா எழுத்தாளர்களுமே சில கருத்தாக்கங்களில் உழன்றபடி தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதில் சில வரலாற்றிலிருந்து வந்து சேர்வன; வேறு சில முழுவதும் தனிமனிதனுடையவை; மிச்சமிருப்பவை, ஒருவனின் மனதில் சதா உழன்றபடி இருக்கும் கருத்துப் பிரதேசங்களைச் சார்ந்தவை. ஒரு படைப்பாளி தன் ஆத்மாவில் கொண்டிருக்கும் இவை மிகவும் உலகளாவிய தன்மையன. என்னுள் உழன்று கொண்டிருப்பவை என்னுடைய எல்லாப் படைப்புகளிலும் இருக்கின்றன. அவை பயம் பற்றியன. என்னுடைய எல்லா நூல்களுமே பயம் குறித்தவை - கதவின் வழியாக யார் வரக்கூடும் என்பது குறித்த உலகளாவிய பய உணர்வு; என்னை நேசிக்கிறவர்கள் யார் என்பது குறித்தது; நான் யாரை நேசிக்கிறேன் என்பது பற்றியது; மேலும் என் விருப்பத்தை எப்படி அடையப் போகிறேன் என்பது குறித்தது. நான் கண்ணாடியில் பார்ப்பது என் ஆசையின் பொருளையா அல்லது அதன் வடிவத்தையா? என்னில் உழன்று கொண்டிருக்கும் இத்தகைய விஷயங்கள், வரலாற்றுப் பார்வையோடு நான் அணுகும் பொதுவான பல விஷயங்களோடு சேர்ந்து என் எல்லாப் படைப்புகளிலுமே இருக்கின்றன. ஆனால் வரலாற்று அளவிலும் சரி, தனி மனிதத்துவ அளவிலும் சரி, என் கரு நிறைவுறாததாகவே அமைந்திருக்கிறது; ஏனெனில் இந்த உலகம் பற்றியும் நம்மைப் பற்றியும் நாம் பயந்து கொண்டிருக்கிறோம்.

கேள்வி: நீங்கள் தூதராக இருந்தபோது உங்கள் தலைக்குள் எழுதியது பற்றிச் சொன்னீர்கள். இப்போது நீங்கள் மீண்டும் எழுதத் தொடங்கும் போது தொடர்ந்து அதையே செய்கிறீர்கள். ஒரு விஷயத்தில் - குறிப்பாக நீங்கள் உங்கள் நாட்டிலிருந்து வெளியே இருந்து கொண்டு வேறு மொழி பேசும் நிலையில் - முதலில் தலைக்குள் எழுதிக்கொண்டு மனதளவில் தணிக்கை செய்வதென்பது உங்கள் எழுத்து பாணியை மாற்றியிருக்குமோ என்று தோன்றுகிறது.

ப்யூ: மெக்ஸிகோ இலக்கியத்தில் என் நிலை அசாதரணமானது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நான் மெக்ஸிகோவிலிருந்து மிக விலகி வளர்ந்தவன். மெக்ஸிகோ என்பது கற்பனை வெளியாகவே


படிப்பகம்

www.padippakam.com

எனக்கு இருந்திருக்கிறது. அதே சமயம் தொடர்ந்து அந்நிலை நீடிக்கவில்லை என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும். என்னுடைய மெக்ஸிகோவும் அதன் வரலாறும் மனதில் நிகழ்ந்தவை; அதன் வரலாறு என்று நான் கனவு கண்டதும், கற்பனை செய்ததும் அந்த நாட்டின் உண்மையான வரலாறு அல்ல. கடைசியில் நான் இளைஞனாக மெக்ஸிகோவுக்கு வாழச் சென்ற போது என் கனவுகளையும், அந்த நாடு குறித்த என் பயங்களையும் யதார்த்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதாயிற்று. இது ஆழ்ந்த பதட்டத்தை உருவாக்கியது; அதன் விளைவு தான் 'Where the Air is Clear' இப்படியொரு புத்தகத்தை மெக்ஸிகோவில் எவரும் எழுதமுடியாது. புரட்சிக்குப் பிந்திய காலத்தை - சமூகக் கட்டுமானத்திலும் நமது கற்பனையான, வரலாற்று ரீதியான வாழ்வின் பண்டைய இழைகளின் உயிர் மீட்சியிலும் - நகரில் அது பிரதிபலித்த வண்ணம் ஒருவரும் நாவல் எழுதியிருக்கவில்லை. என் பதினைந்தாவது வயதில் பயமும் வசீகரமும் கலந்த உணர்வில் நான் கண்டுபிடித்த மெக்ஸிகோவிலிருந்து இது உருவானது. மெக்ஸிகோவுக்கு வெளியிலிருப்பது எனக்கு எப்போதுமே மிகப் பெரிய அளவு உதவியிருக்கிறது.

கேள்வி: மெக்ஸிகோவிலிருந்து உடலளவிலும் மனதளவிலும் தூரத்தில் இருப்பதென்பது நீங்கள் அங்கிருக்கும் பட்சத்தில் பார்க்க முடிவதை விடவும் மிகத் தெளிவாகப் பார்ப்பதைச் சாத்தியமாக்குகிறது என்று சொல்கிறீர்களா?

ப்யூ: ஆம், மெக்ஸிகோ மீதான என் பார்வை, எதிர்பாராத் தன்மையினால் புதுப்பிக்கப்படுகிறது. "எதுவுமே எனக்கு திகைப்பூட்டுவதில்லை; ஏனெனில் இந்த உலகு என்னை வசீகரிக்கிறது" என்று சிறந்த ஸ்பானிய பரோக் கவியான கியுவேதோ இதை வெளிப்படுத்துகிறார். மெக்ஸிகோவினால் நான் இன்னமும் வசீகரிக்கப்படுகிறேன். நீங்கள் சொன்னபடி, வேறு மொழி பேசியபடி வசிக்கிறேன்; ஆனால் இது ஸ்பானிய மொழியில் எனக்குப் பெரிதும் உதவுகிறது. அமெரிக்க ஆங்கிலத்தோடு நான் வளர்ந்த போதிலும் என் ஸ்பானியத்தை என்னால் தக்க வைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. நான் தக்க வைத்துக் கொள்ள வேண்டியதாகவும் மறு உருவாக்கம் செய்ய வேண்டியதாகவும் ஸ்பானிஸ் எனக்கு ஆகியிருக்கிறது. மெக்ஸிகோவுக்கு வெளியில் இருக்கும் போது, மொழியோடு தனித்து இருப்பதான உணர்வில் அதனோடு மல்லுகட்டும் போது அது மிகவும் சக்தி வாய்ந்ததாக அமைகிறது. அதே சமயம் நான் மெக்ஸிகோவில் இருக்கும் போதோ, காபி கேட்கவும், தொலைபேசியில் பதில் சொல்ல வேண்டியதாகவும் வேறெல்லா வகையிலும் அது உடனடியாக மலினப்பட்டு விடுகிறது. நான் மெக்ஸிகோவுக்கு வெளியே இருக்கும் போது ஸ்பானிஸ் எனக்கு தனித்துவமிக்க அனுபவமாக இருக்கிறது. இதை எனக்குள்ளாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என நான் உணர்கிறேன். என் வாழ்வு முன்னிறுத்தும் ஒரு உண்மையாக இது ஆகிவிட்டது.

கேள்வி: ஆங்கிலத்தில் எழுதும் ஆசை எப்போதாவது உங்களுக்கு மேலிட்டிருக்கிறதா?

ப்யூ: இல்லை, ஆங்கில மொழிக்கு இன்னும் ஒரு எழுத்தாளர் தேவை இல்லை என்பதை நான் வெகு சீக்கிரமாகவே உணர்ந்து கொண்டு விட்டேன். ஆங்கில மொழி விசேஷமான திறமையை தொடர்ந்து இடையறாத மரபாகக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கிறது. அது உறங்கப் போகும் போது, எப்போதுமே ஓர் ஜரீஷ் மனிதன் தோன்றி அதை எழுப்பிவிட்டு விடுவான்.

கேள்வி: பலமொழிகள் அறிந்த நீங்கள் எந்தமொழியில் கனவு காண்கிறீர்கள்?

ப்யூண்: நான் ஸ்பானிஸ் - இல் தான் கனவு காண்கிறேன்; காதலிப்பது கூட ஸ்பானிஸில் தான். இது சமயங்களில் மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. ஆனால் என்னால் ஸ்பானிஸில் தான் அதைச் செய்ய முடியும். வேறு மொழிகளில் அவமானப்படுவது எனக்கு பொருட்டே இல்லை; ஆனால் ஸ்பானிஸின் ஒரு அவமானச் சொல் உண்மையில் என்னை கோபத்தில் குதிக்கும்படி செய்து விடுகிறது. இந்தக் கோடையில் எனக்கு ஏற்பட்ட ஒரு புதுமையான அனுபவத்தை உங்களுக்குச் சொல்கிறேன். மெக்ஸிகோவில் அம்ப்ரோஸ் பியர்ஸின் சாகசங்களைப் பற்றி ஒரு குறுநாவல் எழுதினேன். புரட்சியின் போது 1914இல் பஞ்சோ வில்லா ஆர்மியில் சேர்ந்து கொள்வதற்காக, பியர்ஸ் மெக்ஸிகோ சென்றான். பியர்ஸின் குரலாக அது அமைய வேண்டும். ஆனால் அதை ஸ்பானியத்தில் மொழி பெயர்ப்பது மிகவும் சிரமமென்பதா- ல் அது எனக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது. அவனுடைய குரலிலேயே அவனுடைய பேச்சை அமைக்க வேண்டி இருந்ததால் - அது அவனுடைய கதைகளில் இருந்து எனக்கு கிடைத்ததால் - நான் அந்தக் குறுநாவலை ஆங்கிலத்தில் எழுதினேன். அது மிக பயங்கரமான அனுபவம். நான் ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கும் போதே, திடீரென மேஜையின் அடியிலிருந்து பாக்னர் தோன்றி "ஹாஹா, உன்னால் முடியாது" என்றார். கதவின் வழியாக மெல்வில் தோன்றி "உன்னால் முடியாது, உன்னால் முடியாது" என்றார். இந்த ஆவிகள் எல்லாம் தோன்றின. ஆங்கிலத்தின் உரைநடை மரபு அவ்வளவு வலிமையாகத் தன்னை வலியுறுத்தியதானது என் கைகளைக் கட்டிப்போட்டது. சரவிளக்குகளில் தொங்கிக் கொண்டும், கிண்ணங்களை உருட்டி விட்டுக் கொண்டும் இருக்கும் இந்த எல்லா மனிதர்களோடும் சேர்ந்து எழுத வேண்டியிருக்கிற என் வட அமெரிக்க சகாக்களுக்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஸ்பானிஸில் 17ஆம் நூற்றாண்டுக்கும் 20ஆம் நூற்றாண்டுக்கும் இடையேயான மிகப்பெரிய வெற்றிடத்தை நாம் நிரப்ப வேண்டியிருக்கிறது. எழுதுவதென்பது சாகசத்தை விடவும் மேலானது. சவாலை விடவும் மேலானது. நமக்கும் செர்வாண்டிசுக்கும் இடையே கிளாரின், கால்டோஸ் என்ற இரண்டு 19ஆம் நூற்றாண்டு நாவலாசிரியர்களைத் தவிர்த்துவிட்டோமானால் மிகப்பெரிய பாலைவனம் தான் விரிந்து கிடக்கிறது.

கேள்வி: லத்தீன் அமெரிக்க நாவல்களில் காவிய அலை வீசுவதற்கும் ஒவ்வொரு படைப்பிலும் சமூக மற்றும் வரலாற்று ரீதியான பார்வைகளை உள்ளடக்கும் முயற்சிக்கும் இது ஒரு காரணமா?

ப்யூ: சரிதான். பத்தாண்டுகளுக்கு முன்பு அமெரிக்க எழுத்தாளர் டொனால்டு பார்தெல்மேயுடன் பேசிக் கொண்டிருந்த போது அவர் சொன்னார்; "லத்தீன் அமெரிக்காவில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இவ்வளவு பெரிய நாவல்களை உங்களால் எப்படி எழுத முடிகிறது? எல்லாவித விஷயங்களோடும் பெரிய பெரிய நாவல்களை எழுத எப்படி முடிகிறது?



படிப்பகம்

www.padippakam.com

லத்தீன் அமெரிக்காவில் காகிதத் தட்டுப்பாடு இல்லையா? இதை எல்லாம் எப்படி நீங்கள் செய்கிறீர்கள்? ஐக்கிய நாடுகளில் விஷயங்களைத் தேடுவது எங்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. நாங்கள் மெலிந்த புத்தகங்களை மெல்லிய மிக மெல்லிய புத்தகங்களையே எழுதுகிறோம். நான் அந்தச் சமயத்தில் சொன்ன பதில்: எல்லாவற்றைப் பற்றியும் எழுத வேண்டியதை நாங்கள் உணர்வதேஎங்கள் பிரச்சனை. அதாவது நூற்றாண்டுகளாக நிலவும் மௌனத்தை நாங்கள் நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. வரலாற்றினால் மௌனமாகிப் போய்விட்ட எல்லாவற்றுக்கும் நாங்கள் குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது.

கேள்வி: லத்தின் அமெரிக்க எழுத்தாளர்கள் தங்களுக்கான கலாச்சார அடையாளத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள் என்று நீங்களும் கருதுகிறீர்களா?

ப்யூ: ஆம். இவ்விஷயத்தில் மத்திய மற்றும் கீழை ஐரோப்பிய எழுத்தாளர்களுடன் எங்களுக்கு மிக வலுவான தொடர்பு இருப்பதாகக் கருதுகிறேன். இன்று நாவல் எங்கு உயிரோடும் உந்துதலோடும் இருக்கிறது என்று நீங்கள் என்னிடம் கேட்பீர்களென்றால் அது அடிப்படையில் லத்தின் அமெரிக்காவிலும் கீழை ஐரோப்பா என்று அழைக்கப்படுவதிலுமே - செக்கோஷ்லவாகியர்கள் அதை மத்திய ஐரோப்பா என்று தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள் - இருக்கிறது என்று சொல்வேன். அவர்கள் கீழை ஐரோப்பாவை ரஷ்யா என்று நினைக்கிறார்கள். எப்படியிருந்த போதிலும் விஷயங்கள் சொல்லப்பட வேண்டும் எழுத்தாளன் அவற்றைச் சொல்லவில்லை என்றால் வேறு எவரும் சொல்லப்போவதில்லை என்றும் நினைக்கக் கூடிய மக்களைக் கொண்ட இரண்டு கலாச்சாரப் பகுதிகள் இருக்கின்றன. இது மிகுதியான பொறுப்பை உருவாக்குகிறது. மிகப் பெரிய கனத்தை எழுத்தாளன் மீது சுமத்துகிறது. அதே சமயம் ஒருவித குழப்பத்தையும் உண்டுபண்ணுகிறது. ஏனெனில் சேவை தான் முக்கியம்; கரு தான் முக்கியம்; எனவே புத்தகம் நல்லதாக இருக்க வேண்டும் என ஒருவர் சொல்லக் கூடும். ஆனால் அதுவல்ல விஷயம். பொலிவிய சுரங்கத் தொழிலாளியின் நிலைமை குறித்தும், எகுடோரிய வாழைப்பழ பறிப்பாளனின் நிலைமை குறித்தும் கண்டனம் செய்பவை போன்ற முழுவதும் நல்ல நோக்கங்களுடன் கூடிய எத்தனையோ நாவல்களை நீங்கள் லத்தீன் அமெரிக்காவில் படித்திருப்பீர்கள். ஆனால் அவை எவ்வளவு பயங்கரமான நாவல்களாக - பொலிவிய ஈயச் சுரங்கத் தொழிலாளிக்கோ, எகுடோரிய வாழைப்பழ பறிப்பாளனுக்கோ ஒன்றும் செய்யாதது மட்டுமல்லாமல் இலக்கியத்துக்கும் எவ்விதப் பயனுமின்றி - எல்லாத் தளங்களிலும் தோல்வியுற்றிருக்கின்றன. ஏனெனில் அவற்றில் நல்ல நோக்கங்களைத் தவிர வேறெதுவுமில்லை. ஆனால் இன்னமும் கடந்த காலம் பேசப்படுவதெற்கென்று அப்படியே முழுமையாக இருக்கிறது. மௌனமான, இறந்துபட்ட கடந்த காலம், நீங்கள் அதற்கு மொழியின் மூலம் உயிரூட்ட வேண்டும். ஆக, என்னைப் பொறுத்தவரை எழுதுவதென்பது அடிப்படையில் ஓர் அடையாளத்தை நிறுவுவதற்கான அவசியமாகவும், என்னுடைய நாட்டுக்கும் மொழிக்குமிடையே ஓர் தொடர்பை நிலை நிறுத்துவதற்கு


படிப்பகம்

www.padippakam.com

மானது. என் தலைமுறையைச் சேர்ந்த பிற எழுத்தாளர்களுடன் இணைந்து நாங்கள் எங்கோ தூங்கிக் கொண்டிருப்பதாகவும் பின் விழித்துக் கொள்வதாகவும் ஏதோ 'தூங்கும் அழகு' விளையாட்டு விளையாடுவது போல நான் உணர்கிறேன்.

கேள்வி: இரட்டை கலாச்சாரம் கொண்ட, ஒரு காலை உள்ளூர் கலாச்சாரத்திலும் மற்றொன்றை வெளி சக்தியான மேற்கத்திய கலாச்சாரத்திலும் ஊன்றிக் கொண்டிருக்கும் பல தலைமுறைகளைச் சார்ந்த ஸ்பானிய மற்றும் லத்தின் அமெரிக்க எழுத்தாளர்களுக்காக நீங்கள் பேசுவதாக இதைச் சொல்ல முடியுமா?

ப்யூ: லத்தின் அமெரிக்காவின் அடிப்படையான கலாச்சாரத் தன்மைகளில் ஒன்று அது மேற்கத்திய கலாச்சாரத்தின் விபரீதமான கிளை என்பது. அது மேற்கத்தியது, ஆனால் மேற்கத்தியதில்லை. அதனால் ஒரு பிரஞ்சுகாரனை விட அல்லது ஒரு ஆங்கிலேயனை விட நாங்கள் மேற்கத்திய கலாச்சாரத்தை நன்றாகப் புரிந்து கொண்டாக வேண்டும் என்பதை உணர்கிறோம். அதே சமயம் நாம் நம்முடைய சொந்த கலாச்சாரத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். இது, சமயங்களில் இந்திய கலாச்சாரங்களுக்கு நாம் திரும்பிச் செல்வதாக ஆகும். ஆனால் ஐரோப்பியர்களோ, நம்முடைய கலாச்சாரங்களை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறார்கள். Quetzalcoatl மற்றும் Descartes ஐ நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். Descartes போதும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆக, ஐரோப்பாவுக்கு அதன் உலகளாவிய கடமைகளை அதற்குத் தொடர்ந்து நினைவூட்டுவதாக லத்தின் அமெரிக்க அமைந்திருக்கிறது. அதனால் தான் போர்ஹே போன்ற எழுத்தாளர் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களின் ஓர் மாதிரி வடிவமாக இருக்கிறார். ஐரோப்பியனைப் போன்று அவர் இருப்பதன் உண்மை, அவர் அர்ஜென்டேனியன் என்பதையே குறிக்கிறது. யதார்த்தத்தை சிருஷ்டிக்க போர்ஹே செல்லும் எல்லைகளுக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தத்தை எந்த ஒரு ஐரோப்பியனும் உணர்வதில்லை. யதார்த்தத்தை கண்ணாடி போல் பிரதிபலிக்காமல் அவருடைய சொந்த மரபில் ஏற்பட்டிருக்கும் கலாச்சார வெற்றிடங்களை நிறைவு செய்யும் வகையில் புதிய கலாச்சாரத்தை போர்ஹே படைக்கிறார்.

கேள்வி: ஸ்பானிய புனைகதையின் பரிணாமத்தில் எந்தெந்தப் படைப்பாளிகள் இடம் பெறவில்லை? நீங்கள் பாக்னரையும் மெல்வில்லையும் குறிப்பிட்டீர்கள். பால்சாக்கையும் என்னால் சுலபமாக நினைக்க முடிகிறது.

ப்யூ: அவர்கள் எல்லோருமே இருக்கிறார்கள். ஏனெனில் நாங்கள் அவர்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கிறோம். வெற்றிடத்தை நிரப்பும் வகையில் பிற மரபுகளைச் சார்ந்த எழுத்தாளர்களை லத்தின் அமெரிக்க எழுத்தாளர்கள் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துவதால் உங்கள் கேள்வி முக்கியமானது. சமயங்களில் ஆச்சரியம் தரும் வகையில் அசாதரணமான ஒத்த தன்மைகளை நாங்கள் கண்டடைகிறோம். லத்தின் அமெரிக்க நாவல்களில் "ஜாய்ஸ்" மற்றும் பாக்னரின் உயர்ந்த பாதிப்பு குறித்து அதிகமாக இங்கு அலட்டிக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கிறார்கள். நல்லது, இரண்டு விஷயங்கள் பற்றிச் சொல்லியாக வேண்டும். முதலாவது, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தைச் சார்ந்த ஸ்பானிய மொழிக் கவிஞர்கள் ஆங்கில மொழியின் சிறந்த கவிஞர்களை ஒத்திருந்தார்கள். எலியட் எழுதிய அதே சமயத்தில் தான் நெருடா எழுதினார். ஆனால் நெருடா நூலகங்களே இல்லாத, மழையால் நனைந்து கொண்டிருக்கும் தென் சிலியின் நகரத்திலிருந்து எழுதினார். ஆயினும், எலியட்டின் அதே அலைவரிசையில் அவர் இயங்கினார். நாவலாசிரியர்களுக்கான எங்களுக்கு மொழியைப் பேணி வைத்திருந்து தந்தது கவிஞர்கள் தான். அந்தக் கவிஞர்கள் இல்லாமல் - நெருடா, வலேஜா, பாஸ், ஹீய்டோப்ரோ அல்லது கேப்ரியலா பிஸ்ட்ரல் இல்லாமல் - லத்தின் அமெரிக்க நாவல் என்று ஏதும் இருந்திருக்க முடியாது. இரண்டாவது 18ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி - டிபே, ரிச்சர்ட்ஸன் மற்றும் ஸ்மோலெட் தொடங்கி - காலம் பற்றிய உள்வாங்கல் நிகழ்ந்ததற்கேற்ப மேற்கத்திய நாவலில் காலம் பற்றிய உணர்வில் புரட்சிகர மாற்றங்களை ஐரோப்பிய மற்றும் ஐக்கிய நாடுகளைச் சார்ந்த மிகச் சிறந்த நாவலாசிரியர்கள் நிகழ்வித்தனர். காலத்தை இப்படி உடைத்ததானது, பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் மேற்கு திணித்த நேர்கோட்டுக் காலம் என்பதான ஒற்றைக் கருத்தாக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததானது, இந்திய மதங்களிலிருந்து வந்து சேர்ந்த வட்டச் சுழல் காலம் பற்றிய நம் உணர்வோடு தீர்க்கமாக ஒத்துப்போனது. காலத்தை சுழல் தன்மை கொண்டதாகக் காணும் நம் கருத்து - நமது அடிப்படையான வரலாற்றுப் பார்வை - விகோவிடமிருந்தும் ஒரே சமயத்தில் மாறுபட்ட காலங்களைக் காணுகிற நம் அன்றாட அனுபவத்திலிருந்தும் பெறப்பட்டது. நமக்கு மலைகளில் இரும்பு யுகம் இருக்கிறது; நகரங்களில் இருபதாம் நூற்றாண்டு இருக்கிறது. பாக்னர்,பரோக் எழுத்தாளர் என்பதாலும் லத்தீன் அமெரிக்கவோடு பரோக்கைப் பகிர்ந்து கொள்வதாலும் காலம் நேர்கோட்டுத் தன்மையானது அல்ல என்பதை ஏற்பது பாக்னரிடம் குறிப்பிடத்தக்க அளவு வலுவுடன் நிகழ்கிறது. தோல்வி மற்றும் இழப்பு குறித்த நம் உணர்வைப் போன்ற உணர்வு கொண்ட இருபதாம் நூற்றாண்டு மேற்கத்திய எழுத்தாளர் அநேகமாக அவர் ஒருவர் தான்.

கேள்வி: ஆனால் பாக்னரும் பிந்தைய நிலச்சீர்திருத்தக் கலாச்சாரத்தையே மறு உருவாக்கம் செய்கிறார்.

ப்யூ: நிலச்சீர்திருத்தக் கலாச்சாரத்திலிருந்து பிந்தைய நிலச்சீர்திருத்தக் கலாச்சாரத்துக்கான பாதையானது நம் நிலையை ஒத்ததுதான். ஆனால் எதைவிடவும் முக்கியமாக பாக்னர் வீழ்ச்சி குறித்த எழுத்தாளர். 'வெற்றியின் கதை மட்டுமல்ல, வீழ்ச்சிகளின் வரலாறும் கூடத்தான் நாம்'. என்று சொன்ன ஒரே அமெரிக்க எழுத்தாளர் அவர் தான். இது, அவர் எங்களோடு பகிர்ந்து கொள்வது. வரலாற்று ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தோற்றுப்போன சமூகங்களால் அமைந்தது லத்தீன் அமெரிக்க. இந்தத் தோல்வி, ஓர் புதைபட்ட மொழியை வெற்றிக்குப் பின் உருவாக்கியிருக்கிறது. லத்தீன் அமெரிக்காவில் 'பரோக்' என்பது பழைய உலகிற்கு புதிய உலகின் எதிர்வினை; அது ஐரோப்பிய கலாச்சார வடிவமான 'பரோக்'ஐ எடுத்துக் கொண்டு பின்,


படிப்பகம்

www.padippakam.com

இந்திய கலாச்சாரத்துக்கான, கருப்பர் கலாச்சாரத்துக்கான - ஸ்பானிஸ் மற்றும் போர்த்துக்கிசிய அமெரிக்காவின் கலாச்சாரமான மிகச்சிறந்த மத ஒருமைப்பாட்டுக்கான மறைவிடமாக தன்னைப் புனருத்தாரணம் செய்தது. இன்று நாங்கள் எழுதும்போது அந்த மரபில் எங்களைப் பிணைத்துக் கொள்கிறோம்.

கேள்வி: நாம் முன்னர் குறிப்பிட்ட கடந்த காலத்தின் சுமை என்பது மிக முக்கியமான விஷயம் இல்லையா? அது ஒவ்வொரு லத்தின் அமெரிக்க எழுத்தாளரும் மிகுந்த கனத்தை சுமக்கும்படி செய்கிறது. அது மொழியை உருக்குலைக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு வார்த்தையும் கடந்த காலத்திற்குள்ளும் அதே போல் எதிர்காலத்திற்குள்ளும் எதிரொலிக்கிறது.

ப்யூ: பாக்னரை Dixie Gangorist என்று குறிப்பிட்டது ஆலென்பேட் என்று நினைக்கிறேன். அது உண்மையில் ஓர் உயர்ந்த பாராட்டு என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் நிறைவுறாக, மிகுந்த தாகம் கொண்ட பிணைந்த பிரதிகளிலான பரோக் என்ற இந்தக் கலாச்சாரத்தினோடு பாக்னரை இது தொடர்புபடுத்துகிறது. கரீபியன் கலாச்சாரமென்று ஒன்று இருக்கிறது. அது, பாக்னர், கார்பென்டர், கார்சியோ மார்க்வெஸ், டெரிக் வால்காட் மற்றும் எய்மே செசாரேக்கை கொண்டிருக்கிறது. பரோக்கின் உள்ளும் புறமுமாக இருப்பது தான் கரீபியன், அதுவே மெக்ஸிகோ வளைகுடா. ஜீன்ரைஸின் 'wide sargasso sea' ஐ எண்ணிப்பாருங்கள்.

கேள்வி: இம்மாதிரியான ஒரு கலாச்சார பார்வையை நீங்கள் வளரிளம் பருவத்தில் அடைந்தீர்களா அல்லது எழுதத் தொடங்கிய காலத்தில் அடைந்தீர்களா?

ப்யூ: வளரிளம் பருவத்தில் தான். விளக்கமாகச் சொல்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு பிட்டே ஜெராஸ்கி என்ற என் நண்பர் ஜீன்பால் சார்த்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுத அவரிடம் அனுமதி பெற்றார். அவர் சொன்னார். என்னிடம் ஒரு பிரமாதமான யோசனை இருக்கிறது. குழந்தையாக இருந்தபோது அவர் வாசித்த புத்தகங்களைக் குறிப்பிடும்படி சார்த்தரிடம் கேட்கப் போகிறேன். அவரின் அறிவு ரீதியான உருவாக்கம் எப்படி அமைந்தது என்பதை அதிலிருந்து நான் அறியப்போகிறேன். பின்னர் ஜெராஸ்கி திரும்ப என்னிடம் வந்து "இதெல்லாம் என்ன புத்தகங்கள், நான் ஒருபோதும் கேள்விப்படவே இல்லையே" என்றார். சார்த்தர் குழந்தையாக இருந்தபோது படித்த, புத்தகங்களெல்லாம் நாங்கள் லத்தீன் உலகில் படித்த - நான் சின்ன குழந்தையாக இருந்த போது படித்த புத்தகங்கள். எமிலியோசல்கரி- அவரின்றி இத்தாலி, பிரெஞ்ச், ஸ்பானிஸ் அல்லது லத்தீன் அமெரிக்க இலக்கியம் என்று எதுவுமே இருந்திருக்காது. அதே போல் மைக்கேல் ஷிவாகோ. இந்தப் படைப்பாளிகள் நம் மரபின் ஒரு பகுதி, ஆனால் ஆங்கிலே-சேக்ஷன் மரபைச் சேர்ந்தவர்கள் அல்ல. எனக்கு இந்த இரண்டுமே கிடைத்தது என் அதிர்ஷ்டம். நான் சல்கரியையும் ஷிவாகோவையும் படித்ததோடு மார்க் டுவைய்னையும் ராபர்ட் லூயி ஸ்டீவன்சனையும் படித்தேன். Captain Blood இன் ஆசிரியரான சபாடினியைப் படித்ததனால் தான் நான் எழுத்தாளரானேன் என்று எட்டாக்டரோ என்னிடம் சொன்னார். அந்தப் புத்தகங்கள் உங்களை அப்படியொரு



படிப்பகம்

www.padippakam.com

அற்புதமான உலகுக்கு அழைத்து செல்கின்றன. அழகிய ஸ்பானிய போர் கப்பல் மூலம் நீங்கள் அந்தத் தீவை நோக்கி பயணம் செய்கிறீர்கள். அதிலிருந்து வெளியில் வர நான் ஒரு போதும் விரும்பியதில்லை. புதையல்தீவை (Treasure Island) தேடுவதற்காக என் எஞ்சிய வாழ்க்கையைச் செலவிட நான் விரும்பினேன்.

கேள்வி: ஆனால் நீங்கள் வளர்ந்த பின்பு பிற கலாச்சாரங்களுக்கு உங்கள் கலாச்சாரத்தை ஏதோ ஒரு வகையில் பிரதிநிதித்துவப்படுத்தும் உணர்வு உங்களிடம் ஏற்பட்டிருக்கிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது.

ப்யூ: நான் அப்படிச் செய்தேன். உங்களுக்கு இன்னொரு சம்பவத்தைச் சொல்கிறேன். முப்பதுகளில் வாஷிங்டனில் வளர்ந்து கொண்டிருந்த ஒரு மெக்ஷிக குழந்தை நான். பள்ளியில் பிரபலமானவனாக நான் இருந்தேன். ஒரு அமெரிக்கப் பள்ளியில் இப்படி இருந்தது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. 1935, மார்ச் 18இல் வெளிநாட்டினர் சொந்தம் கொண்டிருந்த எண்ணெய் பகுதிகளை மெக்ஸிகோ அரசுடைமையாக்கிக் கொண்டது வரை இது நீடித்தது. அதன் பிறகு நான் ஒரு குஷ்டரோகிபோல் ஆகிவிட்டேன். எவரும் என்னோடு பேசுவதில்லை. எல்லோரும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். ஏனெனில், 'நம்' எண்ணெய் கிணறுகளை மெக்ஸிக கம்யூனிஸ்டுகள் திருடிக் கொண்டுவிட்டதாக ஒவ்வொரு நாளும் தலைப்புச் செய்திகள் அலறின. எனவே அதற்கு எதிர்வினையாக நான் பயங்கர மெக்ஸிக வெறியனாக மாறிப்போனேன். 1939 இல் வாஷிங்டனில் ரிச்சர்டு டிக்ஸ்-இன் படம் பார்க்க கெய்த் தியேட்டருக்குப் போனது என் ஞாபகத்துக்கு வருகிறது. (அந்தப்படத்தில் டிக்ஸ், சாம் ஹஸ்டனாக நடித்தார்) அலமோ தோன்றியவுடனே நான் என் இருக்கையிலிருந்து குதித்து (Gringos) கிருங்கோக்கள் ஒழிக! மெக்ஸிகோ வாழ்க!' என்று கத்தினேன். [ Gringos - லத்தீன் அமெரிக்காவில் வெளிநாட்டவரை - குறிப்பாக அமெரிக்கர் அல்லது ஆங்கிலேயரை - பரிகாசத்தோடு குறிக்கும் சொல்.] யுத்தம் தொடங்கிய பின்பு பிராங்ளின் ரூஷ்வெல் 1939 டிசம்பரில் உலகின் எல்லாப் பகுதிகளையும் சார்ந்த குழந்தைகள் அமைதி பற்றிப் பேசும்வகையில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். மெக்ஸிகோவின் பிரதிநிதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஒரு இளம் மெக்ஸிகனைப் போல சம்பிரதாய உடை அணிந்து சென்று மெக்ஸிகோவின் பெயரால் அமைதிக்காகப் பேசினேன்.

கேள்வி: மெக்ஸிகோ பற்றி உங்களுக்குப் புறவயமான பார்வை இருக்கிறது; அதே சமயம் மெக்ஸிகோ உங்களுக்குள் இருப்பதாகவும் நீங்கள் உணர்வதாகத் தெரிகிறது என்பதால் தான் கேட்டேன்.

ப்யூ: விலகி நின்று பார்க்கக் கூடிய என் இயல்புக்கு நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். ஏனெனில் அதனால் தான் மற்றவர்கள் சொல்லாததை என்னால் சொல்ல முடிகிறது. முகமூடியிட்ட ஒரு நாட்டினரான மெக்ஸிகோவினருக்கு நான் ஒரு கண்ணாடி தருகிறேன். அதில் எப்படி இருக்கிறோம் என்பதை, எப்படிப் பேசுகிறோம் என்பதை, எப்படி செயல்படுகிறோம் என்பதை அவர்கள் பார்த்துக் கொள்ளலாம். என்னுடைய எழுத்துக்கள் என் முகமூடி என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். வார்த்தை முகமூடிகளை என் நாட்டுக்கான கண்ணாடியாக நான் தருகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

Quetzalcoatl இன் Plumed Serpent, இல் வரும் பழங்கதையில் மெக்ஸிகோ விளக்கப்படுகிறது. கடவுள் மனிதனைப் படைக்கிறார். அவனுக்கு ஒரு கண்ணாடி தந்து சாத்தான் அவனை அழிக்கிறான். தனக்கு முகமில்லை என்று அவன் நினைக்கும்போது அவனுக்கு முகமிருப்பதை சாத்தான் காண்பிக்கிறான். மெக்ஸிகோவின் சாரம் இது தான்; உங்களுக்கு முகமூடி தான் இருக்கிறது என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கும்போது உங்களுக்கு முகம் இருப்பதை நீங்கள் கண்டடைவது.

கேள்வி: நாவல் என்பது ஒரு நெடுஞ்சாலையில் நகரும் கண்ணாடி என்ற ஸ்டெந்தாலின் படிமம் உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறதா?

ப்யூ: இது ஒரு பிரச்சனையை எழுப்புகிறது. ஏனெனில் இலக்கியமானது யதார்த்தத்தின் முகமூடியாகவோ அல்லது கண்ணாடியாகவோ இருப்பதன் மூலம் திருப்தி அடைந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. இலக்கியம் யதார்த்தத்தை உருவாக்குகிறது. அப்படி இல்லாதவரை அது இலக்கியமே இல்லை என்று நினைக்கிறேன். 'வாழ்வின் பொதுவான அம்சங்களை பிரதி செய்ய நீங்கள் La marquise Sortit a anq heures எழுதியாக வேண்டும். ஆனால் அது போதுமானதில்லை. யதார்த்தத்தை இலக்கியம் நீட்சியடையச் செய்கிறது; இல்லையெனில் அது எதுவுமே செய்வதில்லை.

கேள்வி: ஆலிஸின் கண்ணாடியை இந்த இடத்தில் நாம் கணக்கில் கொள்ளலாம், நம்மை நாமே பார்த்துக் கொள்கிற கண்ணாடி; நாம் மற்றவர்களுக்கு அன்பளிப்பாகத் தருகிற கண்ணாடி, ஆனால் வளர்ந்து ஆளான பிறகு மூன்றாவது கண்ணாடி பயமூட்டுவதாக இருக்கிறது.

ப்யூ: அது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒரு கண்ணாடி. அது ஆசையோடும் துயரங்களோடும் தொடர்புடையது. கண்ணாடியாக இலக்கியம் என்பது பற்றிய என் கருத்தாக்கத்தோடு பரோக் கவிகு வேதோ மிக நெருக்கமாக இருக்கிறார். குவேதோவைப் பொறுத்தவரை கண்ணாடியின் புனிதமும் மலத்துவாரத்தின் அசுத்தமும் எப்போதும் ஒன்றுக்கொன்று இணைந்தே இருக்கிறது. ஸ்பெனிஸில் கண்ணாடி என்பது espejo அதாவது speculum. அது மலத்துவாரத்தைக் குறிக்கிற culo என்ற வார்த்தையை உள்ளடக்கியிருக்கிறது. குவேதோவைப் பொருத்தவரை உலகின் மையம் அதுதான் - நீங்கள் ஆசையை உள்வாங்குவதும் வெளியிடுவதும் அந்த மகிழ்ச்சித்துவாரத்தின் மூலம் தான். அதனால் தான் கண்ணாடியில் பிரதிபலிக்கும் சுத்தத்தை குவேதோ பாடுகிறார். குவாஸ் தன் ஓவியத்தில் ஒரு கண்ணாடியைப் பிடித்தபடி 'கண்ணாடியில் உங்களை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வதைப் போல நான் குவேதோவை என்னுள் எப்போதும் கொண்டிருக்கிறேன். மனம், வாய், கண்கள் எல்லாமே கண்ணாடி தான். ஆனால் கடைசியில் enlo the Speculam மூலமாக யதார்த்தம் வெளியேற்றப்படுகிறது. கண்ணாடியைப் பற்றி யோசிக்கும்போது நான் எப்போதுமே இப்படித்தான் நினைக்கிறேன். கண்ணாடியும் கழிவறையும் பிரிக்க முடியாதவை.

கேள்வி: உங்கள் கற்பனையில் பிரதியின் வித்து எப்படி வேர் கொள்கிறது? உங்கள் படைப்பின் விஷயம் எங்கிருந்து துவக்கம் கொள்கிறது?



படிப்பகம்

www.padippakam.com

ப்யூ: நகரப் படிமங்களிலிருந்து என் புத்தகங்கள் உருக்கொள்கின்றன. என்னுடைய கனவுகளின் அல்லது பயங்கர கனவுகளின் நகரம் மெக்ஸிகோதான். பாரீஸோ, நியூயார்க்கோ என் படைப்புக்கு எவ்வித உந்துதலும் தருவதில்லை. என் பல படைப்புகளுக்கும் அடிப்படை நான் அங்கு பார்த்தவையே. உதாரணமாக Burnt Water இல் உள்ள The Dall Queen என்ற கதை என் வளரிளம் பருவத்தில் ஒவ்வொரு பிற்பகலிலும் நான் பார்த்தது தான். அங்கு அடுக்குமாடி வீடு ஒன்று இருக்கிறது. அதன் முதல்தளத்தை சன்னல்கள் வழியாகப் பார்க்க முடியும். அங்கு எல்லாம் இயல்பாகவே தோற்றமளிக்கும். ஆனால் இரவில் அது அசாதரணமான ஓர் இடமாக உருமாறும். பொம்மைகளும் பூக்களும் நிறைந்திருக்கும். வாடிய பூக்கள், ஒரு பொம்மை அல்லது குழந்தை பாடையில் படுத்திருக்கும். நான் நகரத்திய எழுத்தாளன் நகரைத் தாண்டிய இலக்கியத்தை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை. என்னைப் பொருத்தவரை அது மெக்ஸிகோ நகரம். அதனுடைய முகமூடிகளும் கண்ணாடிகளும். மரபுச் சின்னமான அந்த நகரின் ஈரமண்ணில் அதன் மூலவேர்களைக் காண்கிறேன். மக்கள் சந்திக்கவும் நகரவும் மாறவுமான வெளியைக் கொண்டிருக்கிற நகரம் அது.

கேள்வி: நான் உங்களிடம் ஒரு சர்வசாதாரணமான கேள்வியைக் கேட்க் நினைக்கவில்லை. எனினும், உங்களை எது சுண்டி இழுக்கிறது. உங்களை எது எழுத வைக்கிறது?

ப்யூ: 'ஒரு புனைவு ஆழ்ந்த உணர்வின் கனவு' என ஹெம்லெட் சொல்வது அற்புதமான விஷயம். என் புனைவு, ஆழ் உணர்வின் கனவு; அழுகையாகப் பிறக்கும் அது. 'நான் முழுமையடையவும், நிறைவடையவும் விரும்புகிறேன்; நான் மேலும் ஏதாவது சேர்க்க விரும்புகிறேன்' என்கிறது. உதாரணமாக Artemio Cruz, பல குரல்கள் ஒலிக்கும் நாவல். இலக்கியம் என்பது ஒரு குரலினடியாகப் பிறக்கிறது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் ஒரு குரலைக் கண்டடைகிறீர்கள். அதற்கு ஒரு காகித வடிவம் கொடுக்க விரும்புகிறீர்கள். ஆனால் அந்தக் குரல்தான் ஒரு நாவலின் யதார்த்தமாக அமைகிறது.

கேள்வி: நீங்கள் ஆர்டெமியோ க்ரூஸின் குரலைக் கேட்டீர்களா?

ப்யூ: ஆம்; அவனுடைய குரல் சொன்னது: இந்த நிகழ்காலத்தில் நான் இறந்து கொண்டிருக்கிறேன். எனக்கு உடலிருக்கிறது. ஆனால் நான் என் இருப்பை இழந்து கொண்டிருக்கிறேன். அது என்னிடமிருந்து வடிந்து செல்கிறது'. அவனுக்கு ஒரு இறந்தகாலம் இருந்தது; அவன் இறக்கப் போகிறான் அவன் நினைவுகள் இறக்கப் போகின்றன. மேலும் இன்னொரு குரல் - கூட்டான ஒரு குரல் - சொன்னது 'நாங்கள் இந்தத் தனிமனிதனைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மொழியும் நினைவுகளுமான வார்த்தைகளால் நாங்கள் ஒரு உலகை வெளிப்படுத்துகிறோம். அது தொடர்ந்து செல்லக்கூடியது' ஓர் இலக்கிய வெளியில் பல குரல்கள். இணைந்து தமக்கான வடிவத்தைக் கேட்டு நிற்பதுதான் விஷயமே.

கேள்வி: அதே ஆண்டில் வெளியான 'Aura', 'Artemio Cruz' இலிருந்து மிகவும் வித்தியாசமானதாக மிகவும் பரீட்சார்த்தமானதாகத் தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ப்யூ: 'Aura' கவிஞர்கள் எப்போதும் பயன்படுத்துகிற முன்னிலை ஒருமையில் எழுதப்பட்டது. அதைப் பயன்படுத்த நாவலாசிரியர்களுக்கும் உரிமை இருக்கிறது. தான் எல்லாவற்றையும் அறிந்திருக்கவில்லை என்பதை ஒப்புகொள்ளும் குரல் அது. மேலும், நீங்கள் ஒரு நாவலாசிரியர் மட்டும் தான். ஏனெனில், நீங்களும் எல்லாம் அறிந்திருப்பதில்லை. எல்லாவற்றையும் அறிந்த காவியக் கவிஞன் போன்றதல்ல உங்கள் நிலை. கதவுகள் எவ்விதம் மூடும் என்பதை ஹோமர் துல்லியமாக அறிவார். Auer beach சொல்வது மாதிரி ஹோமரிடம் கதவை மூடுவதென்பது நான்கு பாடல்களாக அமையும்; ஹெக்டரின் மரணமும் நான்கு பாடல்களாக அமையும். ஏனெனில் இரண்டுமே சரிநிகர் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் இந்தக் கவித்துவக் குரலானது. நாம் தனியாக இல்லை. வெறெதாவது நம்மோடு இணைந்து கொள்ளும் என்கிறது. Auraவில் நான் ஒரு குறிப்பிட்ட மரபை பிரக்ஞை பூர்வமாகப் பயன்படுத்தி இருக்கிறேன். மேலும் மரபின்றி படைப்பு என்பது இல்லை. மிகச் சிறந்த ஜப்பானிய திரைப்படமான 'உகத்சு' இலிருந்து ஔரா எனக்குக் கிடைத்தது. அதில் இளம் வேசியை மனம் முடித்த கையோடு ஒருவன் போருக்குச் செல்கிறான். அவள் மனைவியருள் புனிதமானவளாகிறாள். அவன் திரும்பி வரும்போது அவள் தற்கொலை செய்து கொண்டுவிட்டதை அறிகிறான். சில போர்வீரர்களால் நகரம் கைப்பற்றப்பட்ட நிலையில் கற்பழிப்பிலிருந்து தப்பிப்பதற்காக அவள் தன்னைத்தானே மாய்த்துக் கொள்கிறாள். அவளுடைய சமாதிக்குச் செல்கிறான். அங்கு அவளின் அழகிய உடல் மிகக் கச்சிதமாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதைக் காண்கிறான். ஆவிகளோடு பேசும் அவலட்சணமான கிழவியை அணுகி அவள் மூலமாகப் பேசுவது ஒன்றுதான் அவளை அடைவதற்கான ஒரே வழி. மந்திர சக்திகளுடன் கூடிய முதிய பெண்மணி என்பது ஓர் அசாதாரண மரபு. இங்கு பாக்னரிடமும், ஹென்றி ஜேம்ஸிடமும், டிக்கன்ஸனிடமும் மிஸ் ஹேவிசாவிடமும் புஷ்கினின் 'Qulen of Spades' இல் வரும் Countess இடமும் திரும்பிச் செல்கிற அங்கிருந்து வெண்ணிற தேவதையை அடைகிற, ஓர் மரபோடு என்னை நான் இணைத்துக்கொண்டேன். நீங்கள் எழுத அமரும்போது ஹோமர் வரையான உங்களின் முழு மரபையும் நீங்கள் உங்கள் எலும்புகளில் உணர வேண்டும் என்று வெர்ஜினியா வுல்ப் சொல்வதோடு நான் பெரிதும் உடன்படுகிறேன்.

கேள்வி: பெரிதும் பேசப்படாத மூன்றாம் நெப்போலியனின் மெக்ஸிகோ தலைமீட்டுக்கும், மேக்ஸிமிலியனுக்கும், கார்லோட்டாவுக்கும் நீங்கள் ஔராவில் குரல் கொடுத்துள்ளீர்கள்.

ப்யூ: கார்லோட்டா என்னை உழல வைக்கும் ஒரு விஷயம். அவள் என் ஆவிகளில் ஒன்று, வாழ்வின் மரணத்தைப் போலவே மரணத்தின் வாழ்வும் என் நாட்டில் மிக முக்கியமானது. ஆர்டெமியோ குரூஸையும் ஔராவையும் நான், ஒரே சமயத்தில் எழுதினேன் என்பது ஆர்வமூட்டக் கூடிய விஷயம். அவை ஒன்றுக்கொன்று உறுதுணையாக அமைந்திருக்கின்றன. ஆர்டெமியோ குரூஸ் வாழ்வின் மரணத்தைப் பற்றியது; ஔரா மரணத்தின் வாழ்வு பற்றியது.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: ஔராவில் வரும் மந்திரக்காரி ஒரு குறிப்பிட்ட வகை மாதிரிப் பெண். உங்கள் படைப்பில் இடம்பெற்றிருக்கிற பிற பெண்படிமங்கள் எவை?

ப்யூ: கொஞ்சமும் புனிதமற்ற பெண்களையே சித்தரிப்பதாக நான் தாக்கப்படுகிறேன். என் கலாச்சாரம் பெண்கள் பற்றிக் கொண்டிருக்கிற எதிர்மறையான பார்வையே இதற்குக் காரணம். அராபி, ஸ்பானியார்டு, அஸ்டெக் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கலாச்சாரம் பெண்ணியத்துக்கு உகந்ததில்லை. உதாரணமாக, அஸ்டெக்-இல் ஆண் கடவுளர்கள் எல்லாம் ஒரே ஒரு விஷயத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்: காற்று, நீர், யுத்தம். ஆனால் பெண் கடவுளர்கள் இரட்டை மனப்போக்கினராக புனிதத்தையும் அசிங்கத்தையும், இரவையும் பகலையும், காதலையும் குரோதத்தையும் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு, ஒரு உணர்வு நிலையிலிருந்து மற்றொன்றுக்கு அவர்கள் தொடர்ந்து நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். அஸ்டெக் உலகில் அதுதான் அவர்களின் பாவம். என் நாவல்களில் பெண்மையின் இருண்மை குறித்த வகைப்பாடுகள் இருக்கின்றன.

கேள்வி: ஆண்களால் உருவாக்கப்பட்ட பெண் படிமம் பற்றிய இந்தக் கருத்தினால் தன்னிச்சையாக திரைப்பட நடிகைகளோடு நீங்கள் மாயம் செய்கிறீர்கள். **Holy place**இல் வரும் **Clandia Navo** இது எனக்கு நினைவுபடுத்துகிறது.

ப்யூ: உண்மை தான். அவள் மிக மேலான ஓர் உதாரணம். மெக்ஸிகோவின் முகத்துக்கு மிகச்சிறந்த இரு குறியீடுகளான மரியா பெலிக், டோலரிங் டேரியோ என்ற இரு பெண்கள் பற்றி கடந்த கோடையில் நான் ஒரு நாடகம் எழுதினேன். ஹாலிவுட்டின் பழைய இசைப்படமான **'Flying Dawn to Rio'** வில் வரும் டேங்கோ நடன காட்சியிலிருந்து உருவான **'Orchids in the moon light'**. அதில் இரண்டு பெண்களும் தங்களை மரியா பெலிக்ஸ் ஆகவும் டோபரிஸ் டேரியோ ஆகவும் கருதிக்கொண்டு அப்படியே நடக்கவும் செய்கிறார்கள். அவர்கள் வெனிஸில் நாடுகடத்தப்பட்டவர்களாக வசிக்கிறார்கள் என்று நீங்களும் கருதிக் கொள்வீர்கள். ஆனால் நடிகைகளின் உண்மையான முகங்களும் அங்கு அரங்கில் காண்பிக்கப்படுகின்றன. அந்த ஆச்சரியகரமான முகங்கள் ஒருபோதும் முதுமை அடைவதில்லை. ஏனெனில் டியாகோரிவேரா ஒரு முறை அவர்களிடம் சொல்வது போல, 'உங்களுடையதைப் போன்ற அழகிய மண்டையோடுகள் ஒரு போதும் முதுமை அடைவதில்லை'.

கேள்வி: **Holy Place**இல் மைய கதாபாத்திரமான ஆண்மீது பெண் நிகழ்த்தும் பாதிப்பை விளக்குகிறீர்கள். அம்மாவின் முன்பு, மிட்டோ தன்னுடைய அடையாளத்தை இழந்து விடுவதாகத் தோன்றுகிறது; கார்போட்டாவைப் போல அல்லது மந்திரக்காரியைப் போல அவள் ஒரு தீவிர பெண்வகை மாதிரியாகத் தெரிகிறது.

ப்யூ: இல்லை. ஏனெனில், கிளாடியா நெர்வோவிடம் தீவிரத்தன்மை ஏதுமிருப்பதாக நான் நினைக்கவில்லை. மாறாக, மெக்ஸிக ஆண்கள் தான் அவளை தீவிரமானவளாக ஆக்குகிறார்கள். அவள் தன்னைத் தானே



படிப்பகம்

www.padippakam.com

தற்காத்துக் கொள்கிறாள். அவள்தான் மையப்பாத்திரம். பெண்கள் மையப்பாத்திரங்களாக இருப்பதை ஆண்கள் அனுமதிப்பதில்லை. தீவிரமான நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள். ஏனெனில், மெக்ஸிகோ என்பது பெண்களை விபச்சாரிகளாகவோ கன்னியாஸ்திரிகளாகவோ இருக்கும்படி தண்டிக்கும் ஒரு நாடு. கார்ட்டஸிக்கு உதவி தன் இனத்துக்குத் துரோகம் செய்த இந்தியப் பெண்ணான la Malinche ஆகவோ, மதரீதியான, அரசியல் ரீதியான அதிகார அமைப்புகள் எழுப்பிய நிர்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டு தன் ஆளுமையையும் குரலையும் நெறித்துக் கொள்ளும் Sorjuanalues dela cruz என்ற கன்னியாஸ்திரிகளோ அல்லாமல் பல நிலைகள் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆண்கள் தங்களுக்கென்று ஒதுக்கி வைத்திருந்த பாத்திரத்தை அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். விஷயங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன.

கேள்வி: 1938இல் எண்ணெய் பிரதேசங்களை தேசியமயமாக்கிய மெக்ஸிகோவுக்கும் இன்றைய மெக்ஸிகோவுக்கும் இடையே அது கடந்து வந்த பிரம்மாண்டமான மாற்றங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஒட்டு மொத்தமான மதிப்பீட்டுக் கட்டுமானங்களும் உருமாறிய நிலையால் ஒரு சமூகம் நொறுங்கிக் காணப்படுகிறது என்று நான் கருதுகிறேன். கலாச்சாரம் பற்றிய உங்கள் புராணிகப் பார்வையில் இந்த வரலாற்று யதார்த்தம் எவ்விதம் இடம் கொண்டிருக்கிறது?

ப்யூ: மெக்ஸிகோவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் எல்லாமே இங்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது என்ற உண்மையையே சுட்டுக்காட்டுகின்றன. அதன் Myths ஓர் மரபு. அந்த Myths சுவாசிக்கின்றன. அவை காப்பியங்களுக்கு, அவல இலக்கியங்களுக்கு இன்றைய வாழ்வின் Melodrama க்களுக்குக் கூட ஊட்டமளிக்கின்றன. சமூகம் நொறுங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இன்றைய நிலை பற்றிய கணிப்பை மேற்கொள்ள வேண்டிய பயங்கர நிலையில் நாம் இருக்கிறோம். மெக்ஸிகோ, உண்மையில் முழு லத்தின் அமெரிக்காவுமே வளர்ச்சி பற்றிய மாயத்தில் ஏமாந்து போயின. ஐக்கிய நாடுகள் பிரான்ஸ், கிரேட்பிரிட்டன் ஆகியவற்றைப் பின்பற்றினால் தான். நாம் வளமான, பணக்கார, ஸ்திரமான நிலையை அடைவோம் என்ற எண்ணம். அது நடக்கவில்லை, திடீரென நாம் 1980இல் இருக்கிறோம். உங்களுடைய உலகிலும் கூட வளர்ச்சி என்பது மாயத்தோற்றம் தான் என நாங்கள் அறிகிறோம். எனவே, உண்மையிலேயே நாம் கொண்டிருக்கிற நம்முடைய அரசியல் வாழ்வு துண்டுதுண்டானது. தோல்வியை தழுவியது எங்கள் வரலாறு: ஆனால் எங்கள் கலாச்சார பாரம்பரியம் செழுமையானது. நம் முகங்களையும், நம் சொந்த கடந்த காலத்தையும் நமக்கு நாமே பார்த்துக் கொள்ள வேண்டிய நேரம் வந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன் - நாம் பேசிக் கொண்டிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொள்ள வேண்டிய தருணம்.

கேள்வி: தகுதியைத் தீர்மானிப்பதற்கான ஒரே அளவு கோல் பணம் என்று நியூயார்க்கில் ஆகிவிட்டதைப் போல, மெக்ஸிகோ கலாச்சாரம் சரிந்திருக்கிறதா? லோகாயதம் மெக்ஸிகோ சமூகத்தில் நிலைபெற்றுவிட்டதா?



படிப்பகம்

www.padippakam.com

ப்யூ: இல்லை; உங்கள் கலாச்சாரம் கடந்த காலமற்றது; அது நிகழ்காலத்தில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறது. பலவாறான காலங்கள் ஒரே சமயத்தில் கூடி உலவும் கலாச்சாரம் கொண்டது மெக்ஸிகோ. உங்கள் பூர்ஷ்வாவை விடவும் மோசமான, ஒன்றுமே அறியாத, தான் அறிவிலியாக இருப்பது குறித்து பெருமைபடுகிற சகிக்க முடியாத பூர்ஷ்வாவை நாங்கள் மெக்ஸிகோவில் கொண்டிருக்கிறோம். மதத்தின் ஆன்மீக மதிப்புகளைக் கொண்டிருக்கிற பெரும்பாலான மக்களையும் நாங்கள் கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தில் நாங்கள் கடுமையாகத் தாக்கிய அந்த மதம் இப்போது தோன்றியிருக்கிறது. மெக்ஸிகோவின் சூழ்நிலையில் அது ஒரு கலாச்சார மதிப்பாக நிலவுகிறது. நான் கத்தோலிக்க மதிப்புகளைச் சொல்லவில்லை. புனிதமான உணர்வினை, முயல் புனிதமானது என்பதான, எல்லாமே புனிதமானது என்பதான உணர்வினையே குறிப்பிடுகிறேன். தராகுமாரஸ் பிரதேசத்துக்கு நீங்கள் சென்றீர்களானால் லோகாயத விஷயங்கள் குறித்த அலறல்களை அவர்கள் லட்சியம் செய்வதில்லை என்பதைக் காணலாம். மூலங்களுக்கு மீண்டும் வடிவம் கொடுப்பதிலும், மீண்டும் மூலங்களில் தங்கள் இருப்பை புதுப்பித்துக் கொள்வதிலுமே அவர்கள் அக்கரைப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆரோக்கியத்தை கடந்த காலத்தில் காண்கிறார்களே அன்றி எதிர்காலத்தில் அல்ல.

கேள்வி: ஆனால் 'The Hydra Head' என்ற உங்கள் நாவலில் மெக்ஸிகோ, அதன் பறந்துபட்ட எண்ணெய் வளத்தினால் மையத்தை நோக்கி எறியப்படப் போகிறது என்று காண்பித்திருந்தீர்கள்.

ப்யூ: ஆம், எண்ணெய் சமூகத்தைப் பாதிக்கப் போகிறது. 'Cristobal Nonato' என்றொரு நாவலை நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். புதிய உலகு கண்டுபிடிக்கப்பட்டதன் ஐநூறாம் ஆண்டு நிறைவு நாளான 1992, அக்டோபர் 12இல் அது நிகழ்கிறது. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்தான நிலவரத்தை நாம் கணிப்பில் கொள்ளும்போது மெக்ஸிகோ நகரமும், நாடும், அப்போது எப்படி இருக்கும் என்று நான் வியக்கிறேன்.

கேள்வி: நீங்கள் எதை வெளிப்படுத்த இருக்கிறீர்கள்? உங்களுடைய எல்லா ரகசியங்களையும் வெளிப்படுத்த வேண்டாம். கோடி காட்டினால் போதும்.

ப்யூ: ஓ, அது ஒரு நிழலான வெளிப்பாடுதான். அது ஒரு அறிவியல் புனைவு நாவல் அல்ல. அதில் எலெக்ட்ரானிக் நுட்பங்கள் ஏதுமில்லை. பிறக்காத ஒரு குழந்தையின் மூலம் கதை சொல்லப்படுகிறது. தான் வந்து விழப் போகிற உலகம் பற்றி அது கேள்விப்படுபவற்றின் மூலம் அதனிடம் உருக்கொள்ளும் மனப்பதிவு தான் கதை. மெக்ஸிகோ நகரின் வாழ்வு அநேகமாக சிதைந்துவிட்டது; ஏனெனில் எல்லாவித பௌதீகப் பிரச்சனைகளோடும் கூடிய மூன்று கோடி மக்கள் கொண்ட நகரத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது - வானில் மிக உயர்ந்த இடத்தில் வசிப்பது; குளிர், மலைகளால் சூழ்ந்திருக்க அது பனிமூட்டத்தை போர்த்தியிருப்பது, தொலை தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டியிருப்பது, கழிவுகளை வெளியேற்ற வேண்டிய நிலை. மலத்தால் அது மூழ்கியிருக்கிறது. மெக்ஸிகோவுக்கு நேர்ந்தது இதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: Terra Nostra பற்றி என்னால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அதுவும் எதிர்காலத்தில் - 1999 ஜுன் - டிசம்பருக்கிடையே நிகழ்கிறது. அந்த நாவலிலும் உங்கள் முதனிலை ஈடுபாடு கடந்த காலம் என்பதென்னவோ உண்மைதான். உங்கள் நோக்கமும் பரந்துபட்டதாக இருக்கிறது.

ப்யூ: அது அதிகப்படியான கேலி நாவல். அதன் நோக்கமும் மிகவும் ஒருமுனைப்படுத்தப்பட்டது. இந்த நாவலில் தாயின் கருப்பையில் கதை சொல்லி இருப்பதென்பது, இதன் எல்லைகளை கடுமையாகச் சுருக்கிவிட்டது. அவனுக்குக் கிடைக்கிற தகவல்களுக்கு ஓர் எல்லை இருக்கிறது. அவன் கேட்பதும் அவனுடைய உயிரணு அவனுக்குச் சொல்வதும் தான். Terra Nostra போல நான் இதில் எதுவும் செய்ய விரும்பவில்லை. அது மெடிட்டெர்ரேனிய கலாச்சாரத்தினூடான உல்லாசப்பயணம். நமக்குக் கிடைத்த எல்லா உலகத்தினூடானது. நம் சமூகத்தில் நிலவுகிற படைப்பு சக்தியினூடானது.

கேள்வி: Cristobal Nonato பற்றிய ஒரு சுருக்கமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தீர்கள். 1941 இல் நீங்கள் வாஷிங்டனை விட்டு வந்த பின்பு, ஒரு சிறுவனாக நீங்கள் எழுதிய புத்தகத்தைப் பற்றி நான் கேள்வி மட்டுமே பட்டிருக்கிறேன். அந்தப் பிரதி பற்றிப் பேசுவதில் உங்களுக்கொன்றும் ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன். அந்தப் புத்தகம் உங்கள் நினைவில் இருக்கிறதா?

ப்யூ: அது என்க்கு நன்றாகவே நினைவிருக்கிறது. வாஷிங்டனில் வாழ்ந்ததன் மூலம் ஆங்கிலத்தில் நான் எப்போதுமே சிக்கிக் கொண்டிருந்தேன். எனவே, நாங்கள் சிலிக்குக் குடிபெயர்ந்தபோது ஸ்பானிஸில் நான் மீண்டு கொண்டிருப்பதைக் கண்டேன். அப்போது எனக்கு வயது பதினொன்று. சிலி அப்போது சிறந்த கவிஞர்களின் நாடாக இருந்தது. குறிப்பாக கேப்ரியலா மிஸ்ட்ரல் மற்றும் பாப்லோ நெருடா, லத்தின் அமெரிக்காவிலேயே அதிகமும் அரசியல் மயமான நாடும் அது தான். நான் ஓர் ஆங்கிலேயர் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். ஏனெனில் சிலியிலும் அர்ஜெண்டினாவிலும் ஆங்கிலேயர் பள்ளிகள் சிறந்தவை. பிரகாசமான ஆடைகளை நேர்த்தியாக உடுத்திருப்பேன்; பள்ளியின் டை மற்றும் சிறிய சாம்பல் வண்ணத் தொப்பி. ஒவ்வொரு முறை Montgomery யுத்தத்தில் ஜெயிக்கும் போதும் நாங்கள் காற்றில் எங்கள் தொப்பியை எறிந்து, 'ஹிப், ஹிப், ஹிர்ரா' என்று கத்த வேண்டும். பள்ளியில் அரும்பும் எழுத்தாளர்கள் பலர் இருந்தனர். என்னுடைய மிகச்சிறந்த நண்பனான இப்போது கேனட்-இன் மிகச் சிறந்த அறிவாளியாக இருக்கிற ராபர்டோ டோரெட்டியும் நானும் இணைந்து அந்த நாவலை எழுதினோம். எங்களுக்கு நிறைய பிரச்சனைகள் எழுந்தன. ஏனெனில் ஒரு மெக்ஸிகனும் சிலியனும் சேர்ந்து எழுதும் நாவல் மெர்சிலெஸில் ஆரம்பிக்கிறது. நாவல்கள் மெர்சிலெஸில் தான் ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் அங்கு தான் 'Count of monte Cristo- (அலெக்ஸாண்டர் டூமாஸின் பிரசித்த பெற்ற புனை கதை) காட்சியளித்தார். மக்களை மெக்ஸிகனில் பேசவைப்பதா? அல்லது சிலியனில் பேசவைப்பதா என்ற பிரச்சனை ஏற்பட்டது. இது டூமாஸிக்கு ஏற்பட்டிருக்காது. நாங்கள் சமரசம் செய்து கொண்டு அவர்களை Andalusionsஇல் பேசவைத்தோம். மெர்சிலெஸிலிருந்து நாவல் ஹைய்திக்கு நகர்கிறது. நாங்கள் jane Eyre



படிப்பகம்

www.padippakam.com

படித்தோம். அதில் பைத்தியக்காரப் பெண்கள் உப்பரிகைகளில் இருந்து எங்களைக் கவர்ந்தது மலையின் மீது ஒரு இருண்ட கோட்டையை நாங்கள் சேர்த்துக் கொண்டோம். நாவல் அத்தகைய மூட்டமான சுற்றுச் சூழலில் அங்கு நிகழ்கிறது. பைத்தியக்காரப் பெண்கள் கட்டிலோடு பிணைக்கப்பட்டிருக்க, இளம் எஜமானர்கள் வெள்ளையருக்கும் நீக்ரோவுக்கும் பிறந்த பெண்களோடு காதல் புரிகின்றனர். அது 400 பக்கங்கள் வரை செல்கிறது.

கேள்வி: அந்த தடிமனான கொதிக் புத்தகத்தை எவராவது எப்போதாவது படித்தார்களா?

ப்யூ: அப்படிச் சொல்ல முடியாது. சுவரோவியக் கலைஞனான டேவிட் அல்பரோ ஸிக்குயுரோஸிடம் நான் சத்தமாக வாசித்துக் காண்பித்தேன். அவர் என்னுடைய பலியாள் டிராட்ஸ்கியை கொலை செய்யும் முயற்சியில் அவர் சம்மந்தப்பட்டிருந்ததால் அவர் மெக்ஸிகோவுக்கு தப்பி ஓட வேண்டிய நிலையில் இருந்தார். அவர் சிலிக்குச் சென்று சிலன் என்ற சிறிய நகரில் அமர்க்களமான சுவரோவியம் ஒன்றை வரைந்திருந்தார். அந்நகரில் இருந்த பள்ளிக் கூடம் பூகம்பத்தில் அழிந்துவிட்டிருந்ததால் அந்நகருக்கு மெக்ஸிகோ ஒரு பள்ளி கூடத்தை அன்பளிப்பாகத் தந்தது. தூதரகத்தில் அலுவல் அதிகாரியாக என் தந்தை பணியாற்றியதாலும் சிக்கியுரோஸிடம் போதுமான பணம் இல்லாததாலும் ஏதோ ஒரு வகையில் அவர் தூதரகத்தைச் சார்ந்திருந்ததால் நாங்கள் அவரை அங்கு அடிக்கடி அழைத்தோம். அவர் ஒரு வசீகரமான மனிதர். எனவே இரவு உணவுக்குப் பின் அவரை அமரச் செய்து என் நாவலை கேட்கும்படி செய்தேன். அவருக்கு வேறு வழி இல்லை. அவர் தூங்கி வழிந்தபடி இருந்தார். அவர் ஒரு குட்டி தூக்கம் போட்டுவிட்டதென்னவோ உண்மைதான்.

கேள்வி: ஆக நீங்கள் ஆங்கில நாவலையும் கொதிக் நாவலையும் பிணைத்தீர்கள். அதாவது டுமாஸையும் சல்காரியையும்.

ப்யூ: ஆம். அது மிகவும் நாடகப்பாங்கானது; கொஞ்சமும் காட்சி பூர்வமானதல்ல, அது மிக மூட்டமானதாகவும், பிராண்டே தன்மை கொண்டதாகவும் இருப்பதாக நாங்கள் நினைத்தோம். சார்லோட்டும் எமிலி பிராண்டேயும் எங்களை வெகுவாகப் பாதித்திருந்தார்கள். சிலியில் எங்கள் குழுவிலிருந்த ஒவ்வொருவருக்கும் இந்த பாதிப்பு இருந்தது. எங்கள் வீழ்ச்சியின் சிகரம் பிரான் வெல் பிராண்டே. நல்ல கலைஞர்களாக இருக்க நீங்கள் பிராண்டேக்களை போல் இருக்க வேண்டும்.

கேள்வி: அந்த பரிசுத்தவாதிகள் தான் வீழ்ச்சியின் சிகரமா?

ப்யூ: நாங்கள் அப்படித்தான் நினைக்கிறோம். 1942இல் சிலியில் 13 வயதுச் சிறுவர்களுக்கு பிராண்டேக்கள் எப்படித் தோன்றியிருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

கேள்வி: பிரசுரத்துக்கு முன்பு நீங்கள் அதிகமாக எழுதியிருந்தீர்களா?

ப்யூ: ஆம். நான் மெக்ஸிகோ நகருக்கு திரும்பிய பிறகு, என் வாழ்வில் முதன்



படிப்பகம்

www.padippakam.com

முறையாக நான் கத்தோலிக்க பள்ளியில் சேர்க்கப்பட்டேன். நாங்கள் சிலியை விட்டுக்கிளம்பி பியூனோஸ் ஏர்ஸ்க்குப் போனோம். அங்குள்ள பள்ளிகளில் என்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அது பெரோன் காலத்தின் ஆரம்பம். கல்வியின் மீது ஏதேச்சதிகாரத்தின் செல்வாக்கு சகிக்க முடியாததாக இருந்தது. எனவே, மெக்ஸிகோ போக வேண்டுமென வற்புறுத்தினேன். ஆனால் வேடிக்கை என்னவென்றால் நான் அங்கு சென்றதும் கத்தோலிக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். அந்தப் பள்ளி என்னை எழுத்தாளனாக ஆக்கியது. ஏனெனில், அது எனக்கு பாவம் பற்றிச் சொல்லிக் கொடுத்தது. நீங்கள் செய்யும் எல்லாமே பாவம். நிறைய செயல்கள் பாவமாக இருந்தபடியால், அதன் காரணமாக அவை மகிழ்ச்சியளிக்கக் கூடியனவாக இருந்ததால் அவை என்னை எழுதத் தூண்டின. விஷயங்கள் தடை செய்யப்படுமெனில் ஒருவன் அது பற்றி எழுத வேண்டும்; விஷயங்கள் விலக்கப்படுமெனில் அவை ருசிகரமானதாக இருக்கும்.

கேள்வி: பாவம் பற்றிய கருத்து எழுதுவதற்கான உந்துதலாக அமைவது இன்னமும் உங்களிடம் தங்கியிருக்கிறதா?

ப்யூ: ஆம். Terra Nostra வை மெக்ஸிகோவில் அந்தக் கத்தோலிக்கப் பள்ளியிலேயே எழுதத் தொடங்கிவிட்டதாகத் தான் கருதுகிறேன். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான புனிதமான ஆத்மார்த்த காதல் தண்டிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்களுக்குப் பசி மிகுந்த காமம் விருத்தியடையும் என செயின்ட் ஜான் கிரிஷ்ஸோஸ்டாம் சொல்கிறார். Terra Nostraவின் அடிப்படையான அம்சம் இது; அங்கு மக்கள் சதையால் சந்தித்துக் கொள்வதே இல்லை; அவர்களுக்காக மற்றவர்கள் உடலுறவு கொள்கிறார்கள். கத்தோலிக்க பள்ளியில் நான் நிறையவே கற்றுக்கொண்டேன்.

கேள்வி: மெக்ஸிகோ நகரில் நீங்கள் எவ்வகையான கத்தோலிஸத்தைக் கொண்டிருக்கிறீர்கள்?

ப்யூ: அது மிகவும் அரசியல் ரீதியான கத்தோலிஸம். மெக்ஸிக வரலாறு குறித்தபத்தாம்பசலித்தனமான விளக்கத்தோடு இணைந்து செல்வது. அங்கு ஒரு ஆசிரியர் இருந்தார். ஒவ்வொரு ஆண்டும் பள்ளி தொடங்கும் போது அவர் ஒரு லில்லி மலரோடு வருவார். 'நடனமாடச் செல்வதற்கு முன் வரை இது ஒரு பரிசுத்தமான கத்தோலிக்க இளைஞன்' என்று அவர் சொல்வார். பின் அதைத் தரையில் எறிந்துவிட்டுக் காலால் மிதிப்பார். அதன் பிறகு குலைந்து போன அந்த லில்லியை எடுத்துக் கொண்டு 'நடனத்துக்குப் போய் அங்கு ஒரு பெண்ணை முத்தமிட்டதற்குப் பின்னான கத்தோலிக் இது' என்று சொல்வார். அதன் பிறகு குப்பைக் கூடையில் அதை எறிவார். மெக்ஸிமிலியனுக்கும், புரட்சியைக் கண்மூடித்தனமாகக் கையாண்ட சர்வாதிகாரியான போர்பிரியே டயஸிக்கும் சட்டம் - ஒழுங்கு குறித்த எல்லாப் படிமங்களுக்கும் அனுசரணையாக அவர்கள் மெக்ஸிக வரலாற்றை மறுபடியும் எழுதினார்கள். எங்கள் நாட்டில் தாராளமயத்தின் படிமமாகத் திகழ்ந்த, மெக்ஸிகோவின் ஜனாதிபதியாக இருந்த இந்தியரான பெனிட்டோ ஜிரெஷ்-இன் பிறந்தநாளை நான் துணிச்சலோடு கொண்டாடியதற்காக பள்ளியிலிருந்து ஒரு மாதத்துக்கு வெளியேற்றப்பட்டேன்.

கேள்வி: நீங்கள் எப்படி எழுதத் தொடங்கினீர்கள் என்பதைப் பார்த்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

எழுத்தை தொழில் முறையாகக் கொண்ட போது என்ன எழுதுவதென்று நீங்கள் எப்படி முடிவெடுத்தீர்கள்?

ப்யூ: நான் வாழ்ந்த மெக்ஸிகோவை நாவலாக எழுதுவதென்று முடிவு செய்தேன். சில குறிப்பிட்ட இலக்கிய வகைகளுக்குள் மெக்ஸிக நாவல் அடைபட்டுக் கிடந்தது; இந்திய நாவல்கள், புரட்சி குறித்த நாவல்கள் மற்றும் பாட்டாளி வர்க்க நாவல்கள் இருந்தன. என்னைப் பொருத்தவரை அவை மெக்ஸிக புனை கதையின் சாத்தியங்களைக் கட்டுப்படுத்தும் இடைக்காலச் சுவர்களைப் போல் தெரிந்தன. அந்தக் கட்டுப்பாடுகளின் மீது நம்பிக்கையிழக்கச் செய்வதாக நான் வாழ்ந்த மெக்ஸிகோ நகர் இருந்தது. ஏனெனில் ஓர் இடைக்கால நகரத்தைப் போல திடீரென தனது சுவர்களையும், தடுப்புப் பாலங்களையும் இழந்து, ஒரு திருவிழாவைப் போல தனக்கு வெளியே தன்னை நீட்டிக் கொண்டிருந்தது. யுத்தத்தின் காரணமாக, ஐரோப்பிய பிரபுக்கள் மெக்ஸிகோவில் இழையோடியிருந்தார்கள், வளர்ந்து வரும் பூர்ஷ்வாக்கள். பெண்களின் வாசனையும் மீன் வாசனையும் இரண்டறக் கலந்த மீன் மார்கெட்டின் அருகே நம்ப முடியாத அளவு Bordellos நியான் வெளிச்சத்தைக் கொண்டிருந்தது. சல்வடார் எலிஸாண்டோ அங்கு போய், விபச்சாரிகளோடு காதல் புரிகையில் அவர்களது அக்குளை வெட்டுவார். அப்போது தான் ரத்தப் பெருக்கில் அவர் காதல்புரிய முடியும். பிறகு இரவு முழுவதும் மெக்ஸிக இசை, மெக்ஸிகோ நகரம் நாற்பதுகளின் பிற்பகுதியிலும் ஐம்பதுகளிலும் தனது பரோக் சாராம்சத்தைக் கண்டடைந்தது. தடைகளை உடைத்தெறிந்து அது பெருக்கெடுத்தது. பிரமிப்பூட்டும் கேபரே நடனங்கள் என் நினைவிலிருக்கிறது. அது தான் 'Where the Air is clear' இன் ஆதாரம். மெக்ஸிவினுடைய பிந்திய புரட்சிகர வாழ்வின் மையப் பாத்திரம், மெக்ஸிகோ நகரம். ஒரு நாவலும் அது பற்றி எதுவும் பேசியிருக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன்.

கேள்வி: உங்கள் குடும்பத்தில் வேறு யாரும் எழுத்தாளர்களாகவோ கலைஞர்களாகவோ இருக்கிறார்களா?

ப்யூ: குறிப்பிடும்படி இல்லை. என் அப்பா உயர் அரசு அதிகாரி. என் அம்மா இல்லத்தரசி. என் அப்பாவின் சகோதரர் ஒரு சுவையான கவிஞர்; ஆனால் 20 வயதில் டைபாய்டில் இறந்துவிட்டார். என் பாட்டி வெரா குருஷில் Grandma Moses மாதிரியான ஒரு கவி. அவர் வறண்ட பிரதேசங்கள், கடல், ஆறுகள் பற்றி எழுதியிருக்கிறார். நன்கு அறியப்பட்டவர்.

கேள்வி: உங்கள் சித்தப்பா அல்லது பாட்டி பற்றி ஏதேனும் Myths இருந்து அது உங்கள் இலக்கியத்துக்கான முன் மாதிரியை உருவாக்கியிருக்கிறதா?

ப்யூ: Clotide Velezde fuentes என்ற முப்பாட்டி தான் ஒரே Myth வெரா குருஷிக்கும் மெக்ஸிகோவுக்கும் இடையில் அவர் பயணம் செய்தபோது கொள்ளைக்காரர்களால் அவர் விரல்கள் வெட்டப்பட்டன. அவர் தன் மோதிரங்களைக் கழட்டாததால் அவர்கள் விரல்களை வெட்டி எடுத்துவிட்டனர். என் நினைவிலிருக்கும் ஒரே Myth அவர் தான்.

கேள்வி: நீங்கள் எழுத்தாளராக முடிவு செய்ததை, உங்கள் வாழ்வுக்கான சம்பாத்தியத்துக்கு எழுத்தைத் தேர்வு செய்ததை உங்கள் வீட்டில் எப்படி



படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக்கொண்டனர்?

ப்யூ: என் பெற்றோர்கள் என்னைச் சட்டம் படிக்கச் சொன்னார்கள். ஏனெனில் மெக்ஸிகோவில் எழுத்தை நம்பி நான் வாழ்ந்தால் பசியால் செத்துவிடுவேன் என்றார்கள். சிறந்த கலைஞரும் மனிதாபியுமான அல்போன்ஸோ ரைய்ஸையும் பார்த்தேன். மெக்ஸிகோ ஒரு சம்பிரதாயமான நாடு என்றும், எனக்கென்று ஒரு அந்தஸ்து இல்லாவிட்டால் மக்களுக்கு என்னை எப்படி ஏற்றுக் கொள்வது என்பது தெரியாதென்றும் சொன்னார். 'கைப்பிடி இல்லாத ஒரு தேநீர் கோப்பை போல நீ ஆகிவிடுவாய்' என்றார். நான் சட்டம் படிக்கத் தொடங்கியதுமே அது படிப்பதில் எனக்கு வருத்தமேதும் இல்லாமல் போய்விட்டது. முதலில் நான் ஜெனிவாவுக்கு - என் முதல் ஐரோப்பிய விஜயம் சென்றேன். அங்கு நான் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொண்டேன். மெக்ஸிகோ திரும்பியபோது, ஸ்பானிஸ் உள்நாட்டுப் போரின் போது ஸ்பெய்னைத் தஞ்சமடைந்த மிகச்சிறந்த ஆசிரியர்களிடம் என்னால் படிக்க முடிந்தது. செவில் பல்கலை கழகத்தின் முன்னாள் தலைவரான மேனுவேல் பெட்ரோஸோ, குற்றவியல் சட்டத்தைப் புரிந்து கொள்ள விரும்பினால் நான் Crime and Punishment படித்தாக வேண்டும் என்றும் வணிகவியல் சட்டத்தைப் புரிந்து கொள்ள விரும்பினால் பால் சாக்கை படிக்க வேண்டும் என்றும், சாரமற்ற சட்டப்புத்தகங்களை மறந்துவிட வேண்டும் என்றும் என்னிடம் சொன்னார். அவர் சொன்னது சரி. என் வாழ்வில் சமூகத்துக்கும் கதைக்கும் இடையேயான பரிமாணங்களில் ஓர் இணைப்பை நான் உடனடியாகக் கண்டடைந்தேன். நான் ஒரு கார்பரேட் வக்கீலாக ஆகியிருந்திருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக 'Where the Air is clear' எழுதினேன். அப்போது எனக்கு அபரிமிதமான சக்தி இருந்தது. சட்டப் பள்ளியை முடித்ததும், மெக்ஸிகோ பல்கலை கழகத்தில் பணிபுரிந்து கொண்டு, ஒவ்வொரு இரவும் குடித்துவிட்டு மாம்போ நடனம் ஆடியபடி நான் அந்த நாவலை நான்கு வருடங்களில் எழுதி முடித்தேன். அற்புதமான காலம். அதோடு சரி. நீங்கள் சக்தியை இழந்து உத்தியைப் பெறுகிறீர்கள்.

கேள்வி: உங்கள் இரண்டாவது நாவல் முதல் நாவலைத் தொடர்ந்து வந்து விட்டது.

ப்யூ: உண்மையில் என் இரண்டாவது நாவல் தான் முதலாவது. The Good Conscienceஐ நான் ஏற்கனவே எழுதி முடித்திருந்தேன். அது மிகவும் சம்பிரதாயமான புத்தகம். Where the Air is clearஇன் வெள்ளம் அதை அடித்துக்கொண்டு போய்விட்டது. எனக்கு அந்த நாவல் ஒரு புத்தகத்தை விடவும் கூடுதல் அர்த்தமுடையது: அது என் வாழ்க்கை. அது மிகுந்த சத்தத்தை எழுப்பியது; சொர்க்கத்தின் அளவுக்குப் பாராட்டப்பட்டது; நரகத்தின் அளவுக்கு கண்டிக்கப்பட்டது. கழிவறையில் தண்ணீர் அடித்துத் தள்ளிவிடத்த ான் அது லாயக்கு என்று ஒரு விமர்சகர் சொன்னார். மெக்ஸிகோ நகரின் 'Convent of the Sacred Heart' இன் 15 வயது இளைஞிகள் வாசிப்பதற்குத் தேவைப்படுகிற 'மிகுந்த ஏமாற்றமளிக்கும் தன்மை'யை நான் கண்டடைந்திருக்கிறேன்.

கேள்வி: ஆக, தானாக ஒரு வடிவத்தை அமைத்துக் கொண்டுவிட்ட ஓர் படைப்புலகை பாக்னேரிய அல்லது பால்சாக்கியதைப் போன்ற ஓர் உலகை



படிப்பகம்

www.padippakam.com

நாம் கொண்டிருக்கிறோம். அது இன்னமும் உயிர்ப்போடு இருக்கிறதா?

ப்யூ: நான் அதனிடமிருந்து ஒரு போதும் விலகியதில்லை. 'Burnt Water' இன் முன்னுரையில் மெக்ஸிகோ நகரிலுள்ள கற்பனையான அடுக்கு மாடிவீடு பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்; Artemio Cruz அக் கட்டடத்தோடு இணைந்த ஷெட்டில் சிறப்பாக வாழ்கிறாள். மந்திரக்காரியான ஔரா அதன் அடித்தளப் பகுதியில் வாழ்கிறாள். அதற்கிடையேயான பகுதிகளில் என்னுடைய மற்ற எல்லாப் பாத்திரங்களும் இருக்கின்றன. மாயத் தன்மையான யதார்த்தத்தின் பதட்டத்தில் நான் எப்போதுமே சிக்கிக் கொண்டு விடுகிறேன்; ஏனெனில் இந்த நாவல்களின் யதார்த்தம் மாயத்தன்மையானவை. செர்வாண்டிஸின் ஒரு நல்ல வாசகன் என்று என்னை நான் கருதுகிறேன். அவர்தான் யதார்த்த நிலை குறித்த சந்தேகங்களை வடிவமைத்து யதார்த்தத்தை துவங்கி வைத்தார். என் எழுத்தின் ஒரு முனை மாய யதார்த்தம் என்றால் மற்றொரு முனை பிரமாண்ட பரிமாணம் - இது மிக யதார்த்தமானது; ஏனெனில் அது மனதில் நிகழ்கிறது. மக்கள் பால்சாக்கை சமூக யதார்த்த எழுத்தாளர் என்றே நினைக்கிறார்கள்; அவரின் தோற்றங்கள் தெரிவிப்பதை விடவும் பால்சாக் தரும் பாடம் எனக்கு மிகவும் ஆழமானது.

கேள்வி: உங்கள் எழுத்தின் தொடர்ச்சி பற்றி நீங்கள் மிகவும் விழிப்போடு இருக்கிறீர்கள்.

ப்யூ: ஒரு வகையில் என் நாவல்கள் ஒரு புத்தகத்தின் பல பகுதிகளாக இருக்கின்றன. 'Where The Air is Clear' மெக்ஸிகோ நகரின் சரிதை; The Death of Artemio Cruz - நகரில் வசிக்கிற ஒரு தனி மனிதனை முன் வைத்தது. A Change of Skin - அந்த நகரம், அதன் சமூகம் உலகை எதிர் கொள்வதும் அது நாகரிகத்தின் ஒரு பகுதி என்ற உண்மையோடு பிடிமானம் கொள்வதும் அதற்கு வெளியே ஓர் உலகு இருப்பதும் அது மெக்ஸிகோவிற்குள் தானாக தலையிடுவதும் என்பதாக அமைந்தது: மறுதலிக்கப்பட்ட தனித்துவம்மிக்க ஓர் கூட்டுமனம் இந்தப் புத்தகங்களில் அமைந்திருக்கிறது. ஆனால் எந்த ஒரு பாத்திரமும் தனியாகப் பேசுவதில்லை; ஏனெனில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பாத்திரத்தோடும் ஒரு ஆவி இருப்பதாக நான் கருதுகிறேன். Distant Relation இல் இவை எல்லாம் ஓர் உச்சத்தை எட்டியிருக்கிறது. அது இலக்கிய ஆவி பற்றிய ஆவிக் கதை. புனைகதைப் படைப்பாக இந்த உலகு பற்றியது; வாசகரிடம் தருவதற்குப் பயப்படுகிற வகையில் அபாயகரமான புனைகதை. நான் பெரிதும் கவனத்தில் கொள்கிற நாவல். Distant Relations என்னை ஓர் எழுத்தாளனாகவும் என் இலக்கிய ஈடுபாடு குறித்தும் அதிகம் பேசுகிற நாவல். அது எழுத்து பற்றியது. எழுத்து பற்றி நான் எழுதிய ஒரே நாவல். ஒரு பாத்திரம் இன்னொரு பாத்திரத்திடம் சொன்ன கதையை அது என்னிடம் - ப்யூண்டஸிடம் - சொல்கிறது. ஒரு கதை முழுவதுமாகச் சொல்லி முடிக்கப்படும் வரை எனக்கு திருப்தி ஏற்படுவதில்லை. எனக்கு முழுக்கதையும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அது எனக்குக் கிடைத்ததும் வாசகர்களாகிய உங்களுக்கு - சாத்தானிடமிருந்து கிடைத்த ஒரு பரிசு போல - அதை நான் தந்து விட வேண்டும். அதன் தலைப்பு உணர்த்துவது போல, அது தூரத்து உறவினர்கள் பற்றிய கதை. புதிய உலகிலும் பழைய உலகிலும்


படிப்பகம்

www.padippakam.com

வசிக்கிற ஒரு குடும்பத்தைப் பற்றியது. அவர்களின் முழுக்கதையையும் சொல்லிவிட முடியாது; ஏனெனில், முழுக்கதையையும் ஒரு பிரதி உட்கொண்டிருக்க முடியாது. கரீபிய தேசத்து மீதான பிரான்ஸின் செல்வாக்கையும் Lantreamont அல்லது Heredla போன்ற லத்தீன் அமெரிக்காவைச் சார்ந்த பிரெஞ்ச் எழுத்தாளர்களின் ஆவிகளையும் அது முன் வைக்கிறது. ஒரு கதை முழுவதுமாக ஒரு போதும் எப்படி சொல்லப்படாமலேயே இருக்கிறது. ஒருபிரதி எப்போதுமே முழுவதுமாக எப்படி காலி செய்யப்படாமலேயே இருக்கிறது என்பதாக புனைகதைகளின் மூலவேர்கள் பற்றியும் அது பேசுகிறது.

கேள்வி: Terra Nostra/ Duistant Relations இரண்டுமே மூலவேர் பற்றிய வையே முதலாவது, ஸ்பானிய அமெரிக்க கலாச்சாரத்தினை மெடிட்டெர்ரேனிய மற்றும் ஸ்பானிய மூலங்களிலிருந்து வரைந்து காட்டுகிறது. இரண்டாவது, இலக்கியப் பிரதியின் மூலவேர் பற்றியும், ஒட்டு மொத்த வரலாற்றினை உள்வாங்கவும் வெளிப்படுத்தவுமான உங்கள் வியர்த்த முயற்சியினையும் பிளக்குகிறது. ஏதோ ஒரு முழுமையை வெளிப்படுத்த இரண்டு நாவல்களிலும் காணப்படும் உங்கள் விருப்பமானது, லத்தீன் அமெரிக்க நாவலின் எழுச்சி என்றறியப்பட்ட அறுபதுகளில் நாவலாசிரியர்களின் பொதுவான அக்கறையை வெளிப்படுத்துவதாகவே இருக்கிறது. நீங்கள் இந்த'எழுச்சி'யை எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?

ப்யூ: கார்சியோ மார்குவஸ் சொல்வது போல் சொல்லலாமென்று நினைக்கிறேன். லத்தீன் அமெரிக்காவில் நாங்கள் ஒரு நாவல் எழுதுகிறோம். கார்சியேமார்குவஸின் கொலம்பிய அத்தியாய-ம்; கார்பென்டியரின் கியூபா அத்தியாயம்; ஜூலியோ கொர்தசாரின் அர்ஜெண்டைனா அத்தியாயம். இவ்வாறாக அது அமைகிறது. நாவல் என்பது ஒரு சமீபத்திய வளர்ச்சியாக அமைந்த ஒரு கண்டத்தில் நாங்கள் வாழ்கிறோம். அங்கு பல விஷயங்கள் சொல்லப்படாமல் விடுபட்டிருக்கின்றன. தனி மனிதர்கள் பற்றிப் பேசுவது கடினம். ஏனெனில் ஓர் பின்னமான கலவை நிகழ்ந்துவிட்டது; Artemlo Cruzஇல் வரும் பாத்திரங்கள் One Hundred Years of Solitudeஇல் தோன்றுவார்கள். Terra Nostraவில் One Hundred Years of Solitudeஇலிருந்தும் கப்ரேரோ இன்பான்டேயின் Three Sad Tigersஇலிருந்தும் கொர்தஸாரின் Hopscotechஇலிருந்தும் பாத்திரங்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவின் எழுத்துத் தன்மையை அதன் தொடர்ந்த பிரதிப் பிணைப்பு உணர்த்துவதாக இருக்கிறது.

கேள்வி: ஆக, ஒரு மெக்ஸிக எழுத்தாளராக தனித்துவிடப்பட்டிருப்பதாக நீங்கள் ஒரு போதும் உணர்வதில்லை. அல்லது, உங்கள் படைப்பு மெக்ஸிகர்களுக்கு மட்டும் என்று நீங்கள் நினைப்பதில்லை இல்லையா?

ப்யூ: எழுத்து வாழ்வின் ஆரம்ப கட்டத்திலேயே நான் பிரக்ஞை பூர்வமாக, மெக்ஸிக இலக்கியம் அல்லது பெருவிய இலக்கியம் அல்லது சிலிய இலக்கியம் என்று பேசுவது அபத்தம் என்பதை உணர்ந்திருந்தேன். அதாவது நாம் ஏதாவது அர்த்தம் கொள்வதாக உலகளாவிய தன்மை கொள்வதாக இருந்தால் அது ஸ்பானிஸ் என்று நாம் அழைக்கும் கந்தலான ஆண்டிகளின் மொழியினது பரந்துபட்ட எல்லையில் தான் இருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: மெக்ஸிகோ நகரிலிருந்து பியூனஸ் யேர்ஸ் வரை வாசகர்கள் விரிந்திருப்பதை அறுபதுகளினூடாகத் தங்களால் கற்பனை செய்ய முடிந்தது என சில ஸ்பானிய - அமெரிக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ப்யூ: என்னைப் பொருத்தவரை அப்படி நிகழவில்லை. ஐம்பதுகளில் 'Revista Mexicana Literatura' என்ற அருமையான இதழை நான் தோற்றுவித்து நடத்தினேன். 1955இல் ஜீலியோ கொர்தஸாரின் ஆரம்ப காலச் சிறுகதைகளை சிந்தியோ விட்டியர், ஜோஸ் லெஸாமா லிமா போன்ற க்யூபா கவிஞர்களை, ஜார்ஜ் லூயிபோர்ஹேயும் அடால்ப்பியோ சஸாரஸும் இணைந்து எழுதிய ஒரு சிறுகதையைக் கூட நாங்கள் பிரசுரித்தோம். ஐம்பதுகளின் மத்தியில் மரபு ரீதியான தடைகள் நொறுங்கி விழுந்துவிட்டதை நான் உணர்ந்தேன். அதே சமயம் வாசகர் எண்ணிக்கை வளர்ச்சி அடைந்தது. அது போலவே அறிவார்த்த ஏன் லோகயதரீதியாகவும் எழுச்சிக்கான அடியோட்டம் அங்கிருந்து பதிப்பகங்களும், விநியோகஸ்தர்களும், ஒரு மொழி இனத்தைச் சார்ந்தவர்கள் நாம் என்ற படைப்பாளிகளின் ஞானமும் அங்கிருந்தன.

கேள்வி: எழுத்தாளர்களுக்கிடையே இன உணர்வு மேலெழ அறுபதுகள் மிக சாதகமாக இருந்தது ஏன்?

ப்யூ: க்யூபா புரட்சி நிச்சயமாக ஓர் சந்திப்புக்கான மையத்தை உருவாக்கிக் கொடுத்தது. க்யூபா புரட்சி அத்தகைய ஆர்வத்தையும் நம்பிக்கையையும் எழுப்பியது. க்யூபாவினர் தங்களுக்கான பிரதேச சோசலிச யதார்த்தம் என்பதை வளர்த்தெடுக்கும்வரை, மக்களை பகிஷ்கரிக்கத் தொடங்கியது வரை, ஹவானா மையப் புள்ளியாக இருந்தது. கடைசியில் ஒரு இனத்தின் சாத்தியப்பாடுகளை அவர்கள் அழித்தனர். ஆனால் ஒருமைப்பாட்டு உணர்வினை உருவாக்குவதில் க்யூபா புரட்சி அடிப்படையான அங்கம் வகித்தது. காஸ்ட்ரோ ஹவானா வந்தபோது நான் அங்கிருந்தேன். எங்கள் வாழ்வில் மின் அணு பாய்ந்த தருணமது; பின்னோக்கிப் பார்க்கும் போது, இன்றும் அது நிலைத்திருக்கிறது. அதன் பிறகு, ஸ்பானிய அமெரிக்க இலக்கியத்தில் ஒரு அசாதாரணமான விஷயம் நிகழ்ந்தது; எழுச்சியின் போது முக்கியத்துவம் பெற்றிருந்த ஒவ்வொருவரும் எல்லோருக்கும் நண்பர்களாக ஆயினர். இன்று அது ஓர் சோகமாக முடிந்துவிட்டது. இன்று நாம் இடைக்காலத்தில் நுழைந்ததோடு அந்த நட்பு முறிந்துவிட்டது. மக்கள், தனிப்பட்ட அல்லது அரசியல் காரணங்களுக்காக பகைவர்களாக மாறிவிட்டார்கள். இன்று அந்த நாளை ஏக்கத்தோடு நாங்கள் திரும்பிப் பார்க்கிறோம்.

கேள்வி: எழுச்சி பற்றிய உங்கள் தனிப்பட்ட பார்வை, ஹிஸ்பேனிக் உலகில் வாழ்க்கை வரலாறோ, சுயசரிதையோ மிகவும் அருகிக் காணப்படுவதை எனக்கு நினைவூட்டுகிறது. வரலாற்றுச் சம்பவங்களுடன் தங்களுக்கான உறவை லத்தீன் அமெரிக்காவில் எழுத்தாளர்கள் விவரிப்பதை நாங்கள் இப்போது தான் கவனிக்கத் தொடங்கியுள்ளோம். ஜோஸ் டோனோஸோவின் 'Personal History of the Boom' போன்ற பிரதிகள் இருந்த போதிலும், சுயசரிதைகள் நினைவுக் குறிப்புகள் (memoirs) என்ற மரபு



படிப்பகம்

www.padippakam.com

காணப்படவில்லை.

ப்யூ: ஏன் என்று நான் சொல்கிறேன், என்ன எழுதுவது என்பது பற்றிய பயம் இருக்கிறது; ஏனெனில் அது உங்களை சமரசப்படுத்துகிறது. பாரிஸிலிலுள்ள மெக்ஸிக தூதரகத்தை அடைந்ததும் எனக்கு முன்னிருந்தவர்களில் ஒருவர் எழுதிய குறிப்புகளிலிருந்து சில தகவல்கள் கேட்டேன். பிரெஞ்ச் அரசியல் குறித்த அவரின் கருத்துகளை அறிய நான் ஆர்வப்பட்டேன். அவர் ஒரு போதும் அப்படி எதுவுமே எழுதியதில்லை என்பது தெரியவந்தது. என்றாவது ஒரு நாள் அதை அவருக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடும் என்பதுதான் காரணம்.

கேள்வி: Artemio Cruz இல் Citizen Kane இன் செல்வாக்கு பற்றிக் குறிப்பிட்டீர்கள். உங்கள் எழுத்துக்கு திரைப்படங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனவா?

ப்யூ: நான் திரைப்படங்கள் பார்ப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவன். எனக்கு பத்து வயதானபோது என் அப்பா என்னை உலகக் கண்காட்சி மற்றும் 'சிட்டிசன் கேன்' பார்ப்பதற்காக நியூயார்க்குக்கு அழைத்துச் சென்றதுதான் என் குழந்தைப் பருவத்தின் மிகச் சிறந்த நாள். அது என் கற்பனையின் மையத்தை தாக்கியதோடு என்னை விட்டு ஒரு போதும் அகன்றதில்லை. அந்தத் தருணத்திலிருந்து சிட்டிசன் கேனின் ஆவியோடுதான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் எழுதும்போது வேறு சில சிறந்த திரைப்படங்கள் பற்றிய பிரக்ஞையோடும் இருக்கிறேன். பனுவலின் படைப்பு மற்றொன்று. இன்னொருவர் Von Stroheim - குறிப்பாக மௌனப்படமான, குழு நடனங்கள் எதுவும் இல்லாத 'The Merry Widow' ஜான் கில்பர்ட்டுக்கும் மே முர்ரேக்குமிடையேயான காதல் மிகச் சிறந்த காட்சிகளாகியிருந்தன. அவர்கள் கருப்பு போர்வைகள் விரித்த படுக்கையில் அமர்ந்திருக்க அவர்களைச் சுற்றி கண்கள் கட்டப்பட்ட நிலையில் அழகிய பெண்கள் புல்லாங்குழலும் கஞ்சிராவும் வாசிக்கின்றனர். கடைசியில் காதல் உச்சக் கட்டத்தை அடையும்போது, அந்தச் சிறிய படுக்கையின் திரைகளை அவர்கள் இழுத்து விடுகிறார்கள்; ஆக, அவர்கள் பார்வையிலிருந்து முற்றிலுமாக விலகிவிடுகிறார்கள். காட்சியல்லாததை நாம் பார்த்துக் கொண்டிருக்க, நாம் பார்க்காத, கற்பித்துக் கொள்கிற அடுக்கடுக்கான பிரதிபிம்பங்- கள் எழுகின்றன. இது மிகவும் ஆற்றல் மிக்கதென அறிந்தேன். இந்த ஒன்றைத்தவிர மற்றபடி அது என் மீது செல்வாக்கு செலுத்தியது என்று சொல்ல முடியாது.

நகைச்சுவை நடிகர்கள் எல்லோரையுமே பாதித்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். 20ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கலைஞர்களும் மார்க்ஸ் சகோதரர்களுக்கு இடமுண்டு. மிகச் சிறந்த அராஜக வாதிகள், புரட்சிக்காரர்கள், உடைமைகளைத் தகர்த்தவர்கள். சிரிப்பாலும் அபத்தத்தாலும் உலகையே வெடிக்கச் செய்தவர்கள். ஒவ்வொருவரையும் நடைமுறைரீதியாக அவர்கள் பாதித்தார்கள் என்றே நான் நினைக்கிறேன். கீட்டனும், சாப்ளினும். ஆனால் இலக்கியம் என்பது வேறு விஷயம். அது வார்த்தைகளால் சொல்லப்படுவது; திரைப்படத்திலிருந்து வித்தியாசமானது; மிக மிக வித்தியாசமானது.



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி: அப்படியானால் திரைப்படம் நாவலின் இடத்தை அபகரித்துக் கொள்ளும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

ப்யூ: நம் காலத்தின் மிகச் சிறந்த திரைப்படக் கலைஞர்களில் ஒருவரான லூயி பனுவலோடு சில மாதங்களுக்கு முன் மெக்ஸிக்கோவில் பேசிக்கொண்டிருந்தேன். அவருக்கு எண்பது வயது. அவருடைய திரைப்பட வாழ்வைத் திரும்பிப் பார்க்கும் போது என்ன நினைக்கிறார் என்றும் திரைப்படத்தின் எதிர்கால நிலை எப்படி இருக்கும் என்றும் கேட்டேன். அவர் சொன்னார் திரைப்படங்கள் அழியக் கூடியவை என்றே நான் கருதுகிறேன்; ஏனெனில் அவை தொழில் நுட்பத்தைப் பெரிதும் சார்ந்திருக்கின்றன. தொழில் நுட்பமோ வெகுவேகமாக முன்னேற்ற மடைவதால் படங்கள் பழையனவாக, பழைய காலத்தினவாக ஆகிவிடுகின்றன. தொழில் நுட்பம் வளரும் வேகத்தைப் பார்த்தால் எதிர்காலத்தில் திரைப்படமென்பது நீங்கள் ஒரு மாத்திரை சாப்பிடுவதில் தான் அமைந்திருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் அந்த மாத்திரையைச் சாப்பிட்டுவிட்டு இருட்டில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். உங்கள் கண்களின் மூலமாக, நீங்கள் பார்க்க விரும்பும் படத்தை வெற்றுச் சுவரில் போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்".

கேள்வி: யாரோ ஒருவர் வருவார், உங்கள் கண்களைப் பொத்துவார்.

ப்யூ: ஆம், தணிக்கையாளர்கள் இருப்பார்கள். அப்படியானால் உங்கள் தலைக்குள் திரைப்படம் ஓடத் தொடங்கிவிடும். அவர்கள் உங்களைக் கொன்றால் தான் முடியும். கலை சுதந்திரத்துக்கு அது தான் இறுதி சாட்சியாக இருக்கும்.

கேள்வி: உங்கள் படைப்பு பரவலாகப் போய்ச்சேர நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கலந்துரையாடல் காட்சிக்கு (Talk Show) நீங்கள் போவதுண்டா?

ப்யூ: அநேகமாக, ஒவ்வொரு நாடும் அதற்கே உரிய சைபீரியாவைக் கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனில் ஒரு விமர்சன பூர்வ எழுத்தாளனை பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பி விடுவார்கள் என்பது நமக்குத் தெரியும். ஐக்கிய நாடுகளில் அவனை கலந்துரையாடல் காட்சிக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். அங்கு அவர்கள் கே.ஜி.பி.யை எதிர் கொள்ள வேண்டும். இங்கு ஜானி கர்சனை எதிர்கொள்ள வேண்டும். இது அதை விடவும் தர்மசங்கடமானது. செக் எழுத்தாளர் மிலன் குந்தராவின் நிலையோடு தன் நிலையை ஒப்பிட்டு பிலிப் ராக் சொன்னது: 'ஐக்கிய நாடுகளில் எல்லாமே செல்லுபடியாகும், ஆனால் எதுவுமே முக்கியமானதல்ல. செக்கோஸ்லவாகியாவில் எதுவுமே செல்லுபடியாகாது. ஆனால் எல்லாமே முக்கியமானவை.' ஆக, இங்கு ஒரு எழுத்தாளனுக்குக் கிடைக்காத கூடுதல் பரிமாணம் அந்த எழுத்தாளனுக்குக் கிடைக்கிறது.

நான் சென்ற ஆண்டு பாரீஸில் இருந்த போது என்னுடைய ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. நான் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று அப்போது அவர்கள் சொன்னார்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. அவர்கள் சொன்னார்கள், இல்லை இல்லை. இதனால் அதிகப் புத்தகம் விற்கும். Apostruphes என்று அழைக்கப்படும் அந்த நிகழ்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

மிகவும் பிரசித்தமானது. பிரான்ஸில் மூன்று கோடி மக்கள் அதைப் பார்க்கிறார்கள். 'சரி நாம் போகலாம் என்ன நடக்கிறதென்று பார்க்கலாம்' என்று நான் சொன்னேன். அது ஒரு பயங்கரமான அனுபவம்: ஏனெனில், அங்கிருந்த சற்றும் பொறுமையில்லாத ஒரு பிரெஞ்சுக்காரர் தொடர்ந்து என்னை இடைமறித்துக் கொண்டே இருந்ததால் என் கருத்துக்களை என்னால் வெளியிட முடியவில்லை. விஷயங்கள் வெகுவேகமாக நகர வேண்டும் என்று அவர் நினைத்ததால் நான் எதுவுமே சொல்ல முடியாமல் போயிற்று; அது நடைபெற்ற விதமும் நான் பேசிய விஷயமும் எனக்குக் கொஞ்சமும் சந்தோஷம் தருவதாக இல்லை. என் மனைவி ஸில்வியாவோடு நான் என் அபார்ட்மெண்டை அடைந்தேன். எங்கள் அபார்ட்மெண்டின் பணிப்பெண்மணி எங்களுக்காகக் காத் திருந்தாள். 'ஆ, இப்போது தான் டி.வி.யை அமர்த்தினேன். எவ்வளவு அருமையாக இருந்தது. பிரமாதம், அற்புதம்,' என்றாள் 'இல்லை அது பயங்கரமாக இருந்தது. மிக மோசம். நான் சொன்னது எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை' என்றேன் நான். ஆனால் அவள் சொன்னாள், மிஸ்டர் ப்யூண்டஸ் நீங்கள் சொன்ன எதையுமே நான் கேட்கவில்லை. நான் உங்களைப் பார்த்தேன். நான் உங்களைப் பார்த்தேன் என்றாள். தொலைக்காட்சியோடு பசைபோல் ஒட்டிக் கொள்ளும் மக்கள், உண்மையில் தங்கள் ஆத்மாவின் அடியாழத்திலிருக்கும் ஒரு இடுக்கில் இருக்கிறார்கள். தங்களைப் பார்க்க முடிகிற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அடையாளத்தின் சாரமாக இது அமைகிறது. புகைப்படத்தைக் கண்டுபிடித்தது தான். 19ஆம் நூற்றாண்டின் உண்மையான புரட்சி என்று வால்டர் பெஞ்சமன் மிக அருமையாகச் சொல்லியிருக்கிறார். வரலாறு நெடுகிலும் மக்கள் முகமற்றவர்களாக இருந்திருக்கிறார்கள், திடீரென அவர்களுக்கு முகம் கிடைத்துவிட்டது. முதல் புகைப்படங்கள், அவை அறிய பொக்கிஷங்கள் என்பதால் வெல்வெட்டால் அடுக்கப்பட்டு நகைப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்திருக்கின்றன. அவை உங்களின் அடையாளம். இப்போது திடீரென மூன்று, நான்கு, ஐந்து கோடி மக்களால் பார்க்கப்படுவதற்கான வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்கென ஒரு அடையாளம் கிடைக்கிறது. நீங்கள் இருக்கிறீர்கள், நீங்கள் ஒரு ஆள். அது எவ்வளவு சுருக்கமானதாக இருந்தாலும் சடுதியில் மறைந்தாலும், விஷயமில்லை. அது நிலப்பிரபுத்துவத்தின் முடிவைச் சொல்கிறது. உங்களுக்கு முன் இருக்கும் டி.வி.யின் மூலம் நிலப்பிரபுத்துவத்தின் முடிவு நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

*கேள்வி: உங்களுடைய நினைவுக் குறிப்புகளை எழுதுவதற்கு எப்போதாவது திட்டமிட்டிருக்கிறீர்களா?*

ப்யூ: ஆம், நேரம் வரும்போது நான் அதைச் செய்ய மிகவும் விரும்புகிறேன். அதற்காக சுவையான தகவல்களைக் குறித்து வைத்திருக்கிறேன். மெக்ஸிகோவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் நினைவுக் குறிப்பு எனும் இலக்கிய வகையைத் தொடங்குவதென்பது நல்ல அபிப்ராயம் தான். அந்த இலக்கிய வகையில் சிலவற்றைப் பதிவு செய்யவும், படைக்கவும் செய்யலாம். என் தலைமுறை, கதை சொல்லும் மரபை உருவாக்குவதில் சிறப்பாக



படிப்பகம்

www.padippakam.com



வெளிப்பட்டிருக்கிறது. நினைவுக் குறிப்பு மரபை உருவாக்க எங்களுக்கு நேரம் இருப்பதாகவே நினைக்கிறேன். கடந்த காலத்தில் கொர்தேயின் கடிதங்கள், பெர்னால் டயஸ்டே காஸ்டில்லோவின் மெக்ஸிகோவின் வெற்றி குறித்த சுயசரிதை ஆகியவற்றில் அது இருக்கிறது. குல்லெர்மோ காப்ரெரா இன்பா ன்டேயின் 'ஹவானாவில் இளமைப் பருவம்' பற்றிய புத்தகத்தில் இதற்கான நம்பிக்கையை நான் காண்கிறேன்.

கேள்வி: இப்போது நீங்கள் எழுதிக் கொண்டிருக்கும் வேகத்தில் நீங்கள் தொடர்ந்து எழுதுவீர்கள் என்று நினைக்கிறீர்களா?

ப்யூ: எழுதும் காரியம் உடலளவில் சுலபமாக எனக்கு ஆகிவிட்டது. காலம், நகர்ந்து கொண்டிருக்க கடந்த காலம் நிகழ்காலமாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் வாழ்ந்ததும், இனி எப்போதைக்கு-மாக இழந்துவிட்டது என்று நீங்கள் நினைத்ததும் உங்கள் படைப்புக்குத் துணையாய் நிற்கிறது. திடீரென அது ஒரு வடிவம் பெற்று, அதற்கே உரிய கால ஒழுங்கில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கால ஒழுங்கு ஒரு இலக்கிய வடிவத்தைக் கோருகிறது. ஆக, இன்றைய உங்கள் வாழ்வின் மையமாக கடந்த காலத்தவை தோற்றம் கொண்டு முன் நிற்கின்றன. நீங்கள் அவற்றை முக்கியமற்றவையாகவோ, இறந்துவிட்டனவாகவோ கருதுகிறீர்கள். ஆனால் தங்களுக்கான வாய்ப்பை எதிர்நோக்கி மட்டுமே அவை இருந்து கொண்டிருக்கின்றன. உங்களுடைய இருபத்தைந்தாவது வயதில் - அதற்கும் குறைவாகவே வாழ்ந்த நிலையில் - நீங்கள் ஒரு கருவை வலிந்து எடுத்துக்கொண்டால் அதை வைத்துக்கொண்டு உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அறிகிறீர்கள். திடீரென தானாக வலிய முன்வந்து அது தன்னைத் தருகிறது. ஐம்பதாவது வயதில் பாத்திரங்களும், வடிவங்களும் நீள்வரிசையில் வார்த்தைகளைக் கேட்டு என் ஜன்னலை ஒட்டி நிற்கின்றன. அங்கு நிற்கும் எல்லாவற்றையும் கைப்பற்றிவிட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால் எனக்குப் போதுமான அவகாசம் இல்லை. தேர்வு செய்யும் முறை பயங்கரமானது; ஏனெனில் தேர்வு செய்யும் போது நீங்கள் சிலவற்றை அவசியம் கொன்று விடுகிறீர்கள்.

கேள்வி: இரட்டை பயிற்சிக் காலம் ஒரு அற்புதமான படிமம். எழுதத் தொடங்கும் கட்டத்தில், அப்படி இருப்பதே கர்ப்ப வாச காலமாகவும் இருக்கிறது, அதைத் தொடர்ந்து இப்போதிருப்பது, வேதனை மிகுந்த பரிபூர்ண நிலைக்காலமாக இருக்கிறது.

ப்யூ: உங்கள் வாழ்வின் பாதியைக் கடந்துவிட்ட பின்பு மிகத் தீவிரமாக எழுதும் முனைப்பு கொள்ளும் வகையில் சாவின் முகத்தை நீங்கள் பார்த்தாக வேண்டும். ரிம்பாடு போன்று முடிவை வெகு முன்பாகவே கண்டவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் அதைப் பார்க்கத் தொடங்கும்போது இந்த விஷயங்களை எல்லாம் காப்பாற்றிவிட வேண்டும் என்பதை உணர்வீர்கள். மரணம் கலை இலக்கியத்தின் மகத்தான துணைவன்; மரணம் தான் எழுத்தின் உயர்ந்த தேவதை. நீங்கள் இனி ஒரு போதும் வாழப்போவதில்லை என்பதால் எழுதியாக வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## எழுத்தின் உறவு

சந்திரசேகர்

இன்றுமாலை என்னுடன் - காவேரி - நர்மதாபதிப்பகம், சென்னை 17. ரூ.40

எழுத்தின் தீவிரமான மொழியை மேலெடுத்துச் செல்வதும், எளிய மொழிநடையாக உருமாற்றுவதும், படைப்புக்கும் படைப்பாளிக்குமிடையே உருவாகும் எழுத்தின் உறவு சார்ந்து வெளிப்படும் விஷயங்கள். இந்த செயல்பாடுகளின் இயங்குதளத்தைத் தாண்டிக்கொண்டு, ஒருபடைப்புசுயமாகத் தோன்றுவது அரிதாகவே இருக்கிறது.

பெண்ணியப் படைப்பாளர்களில் மிகவும் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் காவேரியின் உலகம், அகம்சார்ந்த உலகுக்கும் புறம்சார்ந்த உலகுக்கும் இடையே உள்ள தளத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இரண்டு உலகங்களையும் இணைக்கும் நேர் கோட்டில் இவரது மொழி இணையும் போது நவீன எழுத்தின் புதுப்புதுப் பரிமாணங்களை இவர் தொடமுடியும்.

பெண்ணியம் என்கிற பெயரில் பெண்களை நவீனமயப்படுத்திச் சுரண்டும் பல்வேறு பரிமாணங்களை ஒற்றைப் பரிமாணமாக முன்வைத்துள்ளார். 'ஸிமோன் தி பூவா போல' கதையில் சார்த்தருக்கும் பூவா விற்கும் இடையே உள்ள உறவு குறித்து நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கோடிகாட்டுகையில் விழும் சவுக்கடி சார்த்தர் மீது மட்டுமல்ல, நவீன பெண்ணிலை வாதம் பேசும் ஆண்களின் இருண்ட பக்கங்கள் மீதும் விழுவதை உணரமுடிகிறது.

இந்தத் தொகுப்பிலேயே மிக மிக அருமையான கதை 'மரியா' எழுத்தின் உறவு பற்றிய அற்புதமான தரிசனமாக விரியும் அதன் தளத்தில் ஜாலத்தன்மையும் நவீனத்துவமும் பின்னிப் பிணைந்திருப்பதை அதன் தீவிர மொழிநடையில் செயல்படுத்துகிறது. 'ஒருபடைப்பாளி எவ்வாறு உருவாகிறான்' என்கிற காவியப் புதிருக்கான நிகழ்வை மிக மிக நுட்பமான மொழி நடையிலும், அதேசமயம் தீவிரமான ஆழ்ந்த கண்ணோட்டத்தோடும் வெளிப்பட்டிருக்கிறது மரியா.

சூரியனின் சுள்ளென்ற வெயில் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகள் கதைசொல்லியின் மனதிலோடும் ஓயாத தஹிப்புணர்வுகள் இதன் ஒருங்கிணைந்த கட்டமைப்பே படைப்பாளியின் தோற்றுவாயாக உருமாறும் அம்சம், கதையின் ஜாலத்தன்மையாக மாறி கதவின் இடுக்குவழியாக அம்பு போல் பாயும் விளக்கின் ஒளியில், எழுத்தின் ரகசியம் ஒளிந்திருக்கிற அபூர்வ நிகழ்வில் இணைத்து அற்புதமாகச் செய்துள்ள காவேரி பாராட்டுக்குரியவர்.



படிப்பகம்

பல்வேறு இந்திய மொழிகளின் ஆங்கில மொழிப்பெயர்ப்பு நூல்களை சமீப காலத்தில் நிறையப் படித்தேன். குறிப்பாக நவீன கவிதை , புதுக்கவிதை. எல்லா மொழிக் கவிதைகளிலும் தமிழில் வரும் Little Magazine களில் வரும் கவிதைகளைக் காட்டிலும் அதிகமான Contemporary Indian நசிவை ஏற்றுக் கொள்ளாத முரண்படுகிற உரத்த குரலுள்ள கவிதைகளைக் காண முடிகிறது. திசா வெளியீடாய் வந்துள்ள Dalit Poetry இதற்கு ஒரு நல்ல உதாரணம். ராஜஸ்தானி மொழியில் கூட சில உக்கிரமான கவிதைகளைக் கண்டேன். தேர்தலின் ஓட்டளிப்பில் தமிழ்நாடு 1967 லிருந்து வித்யாசமாக ஓட்டளிப்பது போலவே தமிழில் கவிதைகள் பொதுவானதொரு Ethos உடன் ஒத்துப் போகாதது நன்றாகத் தெரிகிறது. மரத்தமிழர்களால் பத்து வரிக் கவிதைகளில் கூட நடப்பின் வக்கிரங்களைப் பதிவு செய்யக்கூட - Communicable ஆக பதிவு செய்ய இயலவில்லையோ என்னவோ தெரியவில்லை.

லாவண்யா

சென்னை




Apollinaire

மூன் அட்டை ஓவியம் : உலகநாதன்

பின் அட்டை ஓவியம் : எம். சுந்தரன்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# உன்னதம்

படிப்பகம்